வெளியீடு 15-11-2002 Issued 15-11-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 4, 2002– தொகுதி 18– எண் 1

**Thursday the 4th April, 2002– Volume 18– No. 1**

*பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**sembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

**4-4-2002**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| *1.* வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| *2.* தகவல் கோரல்— | |
| (அ) பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்த விவரம் | 43 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 53-54, 65, 66-67 |
| *3.* சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| (அ) வடபழனியில் ஒரு பெண்ணைக் கொலை செய்து, வீட்டிலிருந்த பணம், நகைகளைக் கொள்ளையடித்துள்ளது | 44-47 |
| *திரு. ஜெ. அன்பழகன் | 44-45 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 45-47 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3.** சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி | |
| (ஆ) எழும்பூர் மார்ஷல் சாலை புனித அந்தோணியார் தேவாலயத்தில் 29-3-2002 அன்று உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டது | 47-50 |
| திரு. பரிதி இளம்வழுதி | 48-49 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 49-50 |
| **4.** விதி 110-ன்கீழ் அறிக்கை— | |
| கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுங்கக் கட்டண வசூல் | 50-53 |
| **5.** கவன ஈர்ப்பு— | |
| (அ) வேலூரில் இன்னும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை | 55-60 |
| (ஆ) பெண் சிசு கொலைகள் பரவலாக நடைபெறுதல் | 60-65 |
| **6.** அறிவிப்பு— | |
| கவன ஈர்ப்புகளுக்கான பதில்களைத் துறைகள் உரிய காலத்தில் அனுப்ப வலியுறுத்தல் | 65 |
| **7.** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 2002 | 66 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 67-68 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7.** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி | |
| (இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 68 |
| (ஈ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002 | 68-69 |
| **8.** வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்— | 69-122 |
| *திரு. கோ.சி. மணி | 69-84 |
| திரு. கே. பாண்டுரங்கன் | 87-104 |
| திரு. லா. சந்தானம் | 104-110, 118-119 |
| *திரு. என். நன்மாறன் | 110-114, 116, 117-118, 120-121 |
| **9.** பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 121-122 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள்.

3. நிதி மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல்.

4. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224487
சென்னை-600 008
நூலகம்

5. சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் :

சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்.

6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி :

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை :

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலன்.

8. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

9. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால் :

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

10. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் :

வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.



11. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் :

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

12. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

13. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

14. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன் :

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மின் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் :

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

16. தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி :

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள், மின்னணுவியல் மற்றும் வணிக வரிகள்.

17. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. மோகன் :

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன் :

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள், கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் :

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் :

கால்நடை பராமரிப்பு.

21. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. சுதர்சனம் :

பிற்படுத்தப்பட்டோர், மிகவுப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

22. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வ.து. நடராஜன் :

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றுப் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.



23. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

24. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன் :

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.

25. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் :

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

26. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் :

மீன்வளம்.

27. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர் :

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR—THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. | **Minister for Public Works and Prohibition and Excise** | .. **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption and Prisons. |
| 3. | **Minister for Finance and Information Technology** | .. **The Hon. Thiru C. Ponnaiyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies and Information Technology. |
| 4. | **Minister for Education** | .. **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |

5. **Minister for Law** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law and Courts.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments

7. **Minister for Health** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Famil Welfare.

8. **Minister for Local Administration** .. **The Hon. Thiru C. Durairaj:**

Municipal Administration, Rura Development, Panchayats and Panchaya Unions, Poverty Alleviation Programmes Rural Indebtedness, Urban and Rural Wate Supply.

9. **Minister for Co-operation, Food and Civil Supplies and Consumer Protection** .. **The Hon. Thiru P. Dhanabal:**

Co-operation, Food, Civil Supplies, Pric Control and Statistics.

10. **Minister for Revenue** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Revenue, District Revenue Establishmen Deputy Collectors, Registration, Stam Act, Stationery and Printing, Governme Press, Bhoodhan & Gramdhan an Passports.

11. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Ag Service Co-operatives, Horticultur Sugarcane Cess, Sugarcane Developmer



12. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

13. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru S. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-servicemen.

14. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. **Minister for Electricity** .. **The Hon. Thiru Nainar Nagendran:**

Electricity, Non-conventional energy development.

16. **Minister for Industries and Commercial Taxes** .. **The Hon. Thiru Se. Ma. Velusamy:**

Industries, Iron and Steel Control, Mines & Minerals, Electronics and Commercial Taxes.

17. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru P. Mohan:**

Forests & Environment and Pollution Control.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vilwanathan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

19. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru M.C. Sampath:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.,

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Animal Husbandry.

21. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K. Sudarsanam:**

Backward Classes, Most Backward Classes and De-notified Communities.

22. **Minister for Labour** .. **The Hon. Thiru Va. Thu. Natarajan:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

23. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

24. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control.

25. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

26. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

27. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. எம்.ஏ. ஹக்கீம்**

**திரு. செ.கு. தமிழரசன்**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*2002 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. (விடுப்பு) | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். (விடுப்பு) | .. | தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |



| | | |
|---|---|---|
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்திரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. | தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 6. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 7. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 8. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 9. அருள், திரு. பி.எஸ். | .. | புவனகிரி |
| 10. அழகம்மாள், திருமதி வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 12. அன்பழகன், திரு. ஆகு.சி. | .. | பெரணமல்லூர் |
| 13. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 15. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 16. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 17. அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 19. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 20. ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமசாமி, திரு. பி.சி. .. மொடக்குறிச்சி
29. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
30. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
31. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
32. இராமு. திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
33. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
34. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
35. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
36. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
37. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
38. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
39. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
40. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
41. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
42. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்



43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
44. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
47. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
48. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
49. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார் கோவில் (செ.வ.)
58. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

66. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்

67. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

68. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)

69. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

70. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்

71. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்

72. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

73. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்

74. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி

75. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

76. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்

77. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

78. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ

79. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்

80. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி

81. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

82. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

83. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி

84. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை

85. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)

86. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை

87. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்

88. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்



89. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)

90. சாமி, திரு. ஆர். .. மேலூர்

91. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

92. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

93. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)

94. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை

95. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்

96. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்

97. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

98. சிவபெருமாள், திரு. அ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

99. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

100. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)

101. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்

102. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி

103. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்

104. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

105. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்

106. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)

107. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்

108. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்

109. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்

110. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

111. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி

112. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
113. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
114. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
115. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
116. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
117. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
118. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
119. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
120. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
121. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
122. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
125. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
126. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
127. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
130. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
133. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு



134. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
135. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
136. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
137. நடராஜன், திரு. வது. .. இளையான்குடி
138. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
139. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
140. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
141. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
142. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
155. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
156. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)

157. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சே.ா. .. கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். . அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. .. கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பு. .. காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
194. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
195. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
196. ராஜகோபால், திரு. ஆ .. சிவகாசி
197. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
198. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
199. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
200. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
201. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்

| | | |
|---|---|---|
| 202. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. | .. | பேரூர் |
| 203. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 204. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | .. | அரவக்குறிச்சி |
| 205. வளர்மதி, திருமதி பா. | .. | ஆலந்தூர் |
| 206. வளர்மதி ஜெபராஜ், திருமதி | .. | மதுரை மேற்கு |
| 207. வள்ளல் பெருமான், டாக்டர் பி. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 208. வாசுதேவன், திரு. பெ. | .. | மதுராந்தகம் |
| 209. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 210. வில்வநாதன், திரு. இரா. | .. | சோளிங்கர் |
| 211. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | .. | பூங்காநகர் |
| 212. விஜயபாஸ்கர், டாக்டர் சி. | .. | புதுக்கோட்டை |
| 213. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | .. | பனமரத்துப்பட்டி |
| 214. வீரபாண்டியன், திரு. ஜெக. | .. | மயிலாடுதுறை |
| 215. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 216. வெங்கடாஜலம், திரு. செ. | .. | சேலம்-1 |
| 217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 218. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 219. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 220. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 221. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 222. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | |
|---|---|---|
| 223. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 224. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 225. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 226. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 227. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 228. ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 229. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 230. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 231. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 232. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 233. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |
| 234. (வெற்றிடம்) | .. | வாணியம்பாடி |
| 235. (வெற்றிடம்) | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 21, விசு—திருவள்ளுவர் ஆண்டு 2033**

**2002 ஏப்ரல் 4, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தர்க் கியல்பு."*

துணிவு, இரக்க சிந்தை, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி ஆகிய நான்கு பண்புகளும் ஆளுபவருக்கு உரியவை.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**80—**

**மேல்நிலைப் பள்ளி**

***7077—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வி.கே. புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர் இராஜேந்திரன் அவர்கள் கேட்ட இந்தப் பள்ளியைக் குறித்து, வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உயர்மட்டக் குழுவால் பரிசீலனை செய்து, அரசு நிதிநிலைக்கு உட்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அகவிருள் அகற்றி, அறிவொளி வீச, அல்லும் பகலும் பாடுபடும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். எனது தொகுதியிலுள்ள வீரகேரளம் புதூர் வட்டாரத் தலைநகர். அதுமட்டுமல்லாமல், இந்தப் பள்ளி, சுமார் 4 பஞ்சாயத்துகள் அடங்கிய பள்ளியாகும். இந்த உயர்நிலைப் பள்ளியில் சுமார் 1200 மாணவர்கள் பயில்கின்றனர். ஆண்டுக்காண்டு மாணவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பை முடித்து விட்டு தொலைவில் உள்ள சுரண்டை தனியார் மேல்நிலைப் பள்ளியில்தான் வசதி உள்ளவர்கள் மட்டும் பயில முடிகிறது. மற்றவர்கள், குறிப்பாக ஆதி திராவிடர்கள், பெண்கள் படிப்பைத் தொடர முடிவதில்லை. ஆகவே, இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரும்படி பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சராக புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடனேயே, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் 3 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தரப்பட்டன. அதுபோல, இந்த ஆண்டும் சில பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு அரசானது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. வருகின்ற 9, 10 ஆகிய இரண்டு தேதிகளில் கல்வி மானியத்தினுடைய விவாதம் நடைபெற இருக்கிறது. அதற்குப் பிறகு, எந்த அளவிற்கு நிதியானது கல்வி மானியத்திற்கு ஒதுக்கப்படுகிறது என்பதற்கு உட்பட்டு, அதன் மூலமாக, அந்த அளவைத் தெரிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 81, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



2002 ஏப்ரல் 4]

**81—**

## பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

***9161—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, பொம்மசமுத்திரம் கிராமம், இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மற்றும் நாமகிரிப்பேட்டை ஒன்றியம், கரியாம்பட்டி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரியாம்பட்டி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்தும், பிறகு இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்தும், உயர்மட்டக் குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற என்னுடைய தொகுதியில், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, வரும் கல்வி ஆண்டிலாவது பொம்மசமுத்திரம் கிராமம், இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக உயர்த்திட நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். நான் முன்பு சொன்னது போல, இந்த மானியக் கோரிக்கைகள் முடிந்தவுடனே, பணத்தை எந்த அளவுக்கு இந்த அவையானது நம்முடைய கல்வித் துறைக்கு ஒதுக்குகிறதோ, அதற்கேற்றாற்போல், இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதோடு, கரியாம்பட்டி தொடக்கப்

[2002 ஏப்ரல் 4

பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்கவும் கேட்டிருக்கின்றார்கள். நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும், தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றுவதற்கும் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, இந்தத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. இந்த ஆண்டு அதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்கி சாதனை படைத்துள்ளார்கள். அதன் அடிப்படையிலே, வருகிற நிதியாண்டில் மக்களுடைய பங்குத் தொகை முழுமையாக அளிக்கப்பட்டிருந்தும், ஒருசில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படவில்லை. அப்படித் தமிழகத்திலே மக்கள் பங்குத் தொகை முழுமையாகக் கொடுத்திருக்கிற மேல்நிலைப் பள்ளிகள் அனைத்தும் தரம் உயர்த்தித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பங்குத் தொகை கட்டினால் மட்டும் போதாது; அதை ஒரு விதியிலேயே வைத்து இருக்கின்றோம். அதோடு மாணவர்களுடைய எண்ணிக்கையும் கருத்திற்கொள்ளப்படும். பிறகு, அதற்கு வேண்டிய நிலம் 5 ஏக்கர் இருக்க வேண்டும், ஆண்கள் பள்ளிகள் என்றால். பெண்கள் பள்ளி என்றால் 3 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். கட்டடங்களும் இருக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். சில பள்ளிகள் இவற்றையெல்லாம் பெற்றிருக்கின்றன. அத்தகைய பள்ளிகளுடைய விவரங்களைப் பெற்று அவற்றையெல்லாம் ஆய்வில் கொண்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப அந்தப் பள்ளிகளுக்கு, இந்த ஆண்டோ, வருகின்ற கல்வி ஆண்டிலோ அனுமதி தருவதற்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**82—**

**நீதிமன்றங்கள்**

***6588—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டத்திற்காக நிலக்கோட்டை வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்ட முன்சீப் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களையும் சோழவந்தான் நகரில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் நகரில் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. இங்கிருந்து வழக்கிற்காக மதுரை செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, சோழவந்தானில் வருகிற நிதியாண்டில் அமைத்துத் தர, இந்த அரசு—மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு—நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 25 நீதிமன்றங்கள். அதாவது, ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் 25 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மதுரைக்கும், சோழவந்தானுக்கும் இடைப்பட்ட தூரம் என்று பார்க்கும்போது, 28 கி.மீ. என்பதால், இதிலே சிரமம் இருக்காது என்கிற கருத்தின் அடிப்படையில், புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு அவசியம் இல்லை என்பது கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[2002 ஏப்ரல் 4

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்கா மையத்திலும் இந்த நீதிமன்றங்கள் ஏற்படுத்துகின்ற நிலை கொள்கை அளவிலே அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்—வாடிப்பட்டி என்பது தனி தாலுக்கா. சென்றமுறைகூட, பல முறை அங்கே நீதிமன்றங்கள் வேண்டுமென்று நானும் கோரிக்கை வைத்து இருக்கிறேன்—அந்தப் பகுதிக்கு மிகவும் அவசியம் என்பதாலும், அதுபோல சேடப்பட்டியைப் பிரித்து இப்போது தனியாக தாலுக்கா மையம் ஏற்படுத்தி இருக்கிறார்கள், அந்த தாலுக்காவிற்கும், பேரையூர் தாலுக்காவிற்கும், நீதிமன்றங்கள் அமைப்பதற்கு—ஒவ்வொரு தாலுக்காவிற்கும், ஒவ்வொரு நீதிமன்றம் என்று கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு இருக்கிற அரசு, அதைச் செய்து தருவதற்கு—முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்துருவினை ஆய்வில் நாம் எடுத்துக் கொண்டாலும்கூட, தற்போது உள்ள அரசினுடைய நிதி நெருக்கடி நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு நிச்சயமாகத் தெரியும். இதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், one time investment என்று சொன்னால், தாராளமாகச் செய்து விடலாம். ஆனால், ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றால், தொடர் செலவினம் அதிலே இருக்கின்ற காரணத்தினால், அதிலே அரசினுடைய நிதியையும் நாம் கவனத்திலே கொள்ள வேண்டி உள்ளதால்—தொடர் செலவினம் என்று பார்த்தால், ஆண்டுக்கு கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே—தற்போது அதற்கு சாத்தியக்கூறு இல்லை. எப்போதுமே சாத்தியக்கூறு இல்லை என்று நான் சொல்ல மாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டத்தில் உரிமையியல் நீதிமன்றம் இருக்கிறபோது, அதே வட்டத்தில் உள்ள மக்கள் வேறு வட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்குச் சென்று நீதி பெற வேண்டிய நிலைமை சில இடங்களிலே இருக்கின்றது. பொதுமக்கள் நலன் கருதியும், சிக்கன நடவடிக்கையாகவும், ஒரு வட்டத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கு, குற்றவியல் நடுவர் மன்றங்களுக்குண்டான அதிகாரங்களைக் கொடுத்து, Distict Munsif-*cum*-Magistrate Court என மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்தை ஒரு நல்ல கருத்தாகவே நான் கொள்கின்றேன். எனவே, இதிலே ஆண்டாண்டு காலமாக இருக்கின்ற அந்தச் சிக்கல்கள்; அதாவது distance ஒரு சிக்கலாக இருக்கலாம். அதே நேரத்தில், பொதுமக்களுக்கு உள்ள சிரமங்களை நாம் அவ்வப்போது கருத்திலே கொண்டு அந்தந்த இடங்களில் பொதுமக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையெல்லாம் ஆய்வு செய்து முழுமையான அளவுக்கு எதிர்காலத்திலே பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களுடைய நலன்களைக் காப்பாற்றுகிற வகையில் நிச்சயமாக ஒரு நிலையை அரசு எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எத்தனை மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கும், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் ஒப்புதல் அளித்து, கட்டடம் கட்ட அரசு உத்தேசித்து உள்ளது? மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *10-10*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Constitution of New Courts—புதிதாக அமைக்கப்படுகின்ற நீதிமன்றங்கள், Construction of New Court Buildings, இந்த இரண்டுமே பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து நாம் கருத்துகளைப் பெற்று, உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையுடன் வந்தால் அரசு அதைப் பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப ஏற்றுக்கொள்ளும். அந்தக் கருத்துரு வரப்பெறவில்லை. வந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, தாலுக்காவினுடைய தலைநகரம். அங்கே

[2002 ஏப்ரல் 4

குற்றவியல் நீதிமன்றம் தொடங்குவதற்காக, கடந்த ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் மாவட்டத்தினுடைய தலைமை நீதிபதி பேராவூரணிக்கு வருகை தந்து அதற்குரிய இடங்களையெல்லாம் தேர்வு செய்தார். அதற்குரிய கட்டடத்தைக்கூட நாங்கள் இலவசமாக, வாடகை இல்லாமல் தருவதாகக்கூட ஒத்துக்கொண்டோம். இருந்தாலும், இதுவரை அங்கே நீதிமன்றம் துவங்கவில்லை. இந்த நிதி ஆண்டில் நீதிமன்றம் துவங்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி one time investment என்று சொல்லக்கூடிய அளவிற்கு வேண்டுமானால் அவர் தரலாம். ஆனால் recurring expenditure-க்கு யார் தருவது? எனவே, தொடர் செலவினத்தை நாம் கவனத்திலே கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, நிதிச்சுமையின் காரணமாக அதைத் தற்போது செயல்படுத்த முடியவில்லை. நிதிநிலைமை சீரானபின், அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று குந்தா தாலுக்கா; மற்றொன்று பந்தலூர் தாலுக்கா. குந்தாவிலிருந்து உதகைக்கு வருவதற்கு 33 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. அதேமாதிரி, பந்தலூரிலிருந்து கூடலூருக்கு வருவதற்கும் அதிக தூரம் இருக்கிறது. ஆகவே, இரண்டு புதிய தாலுக்காக்களுக்குமாகச் சேர்த்து குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் சிரமம் இருந்தால், அதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



2002 ஏப்ரல் 4]

**83—**

## குற்றவியல் நீதிமன்றம்

***13057—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் நாளுக்கு நாள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், முறைகேடுகள், தீவிரவாதம் போன்ற குற்றங்கள் அதிக அளவிலே பெருகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை; இன்றுகூட பத்திரிகையைப் பார்க்கின்ற நேரத்திலே ஒரே நாளில் சென்னையை ஒட்டி இருக்கிற பகுதிகளிலே ஏழெட்டு கொலை, கொள்ளைகள். இப்படிப் பத்திரிகைகளுக்குத் தெரிந்த செய்திகள் இவ்வளவு என்று சொன்னால், தெரியாத செய்திகள் நிறைய இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்கள் தொகை நிறைந்த, கிராமங்கள் நிறைந்த பகுதியான என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே District Munsif-*cum*-Judicial Magistrate Court, அதாவது, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. இதிலே வழக்குகள் நிறையத் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணத்திற்கு, சிவில் வழக்குகள், trial-இல் இருக்கக்கூடியவையே 700 வழக்குகள் நிலுவையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அந்த சிவில் வழக்குகள் திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களிலே நடைபெறுகின்றன. கிரிமினல் வழக்குகள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய 3 நாட்களிலே அங்கு நடைபெறுகின்றன. இப்போது trial-இலே இருக்கக்கூடிய வழக்குகள் 1650. F.I.R. stage-லே இருக்கக்கூடிய வழக்குகள் 1500.

[2002 ஏப்ரல் 4

இப்படி வழக்குகள் தேங்கியிருக்கிற காரணத்தினாலே, குற்றங்கள் பெருகி வரக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே குற்றவியல் நீதிமன்றம் என்பது அவசியத் தேவை என்பதை நாம் உணர்கிறோம். அதே நேரத்திலே, இப்போது இருக்கக்கூடிய நீதிமன்றத்திலே *11* மாத காலமாக Magistrate இல்லாமல், பொறுப்பு Magistrate வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்படிப் பணியிடம் காலியாக இருந்துகொண்டிருக்கின்றது. சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. நிலம் தயாராக இருக்கிறது. இதில் *5* காவல் நிலையங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட அவசிய, அத்தியாவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டிலே குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கித் தருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களைத் தடுத்து விரைவாக நீதி வழங்குவதுதான் ஒரு அரசினுடைய முக்கியக் கொள்கையாக இருக்க முடியும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காகவே, இந்த ஒரு மாதத்தில்—நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஒரு மாதத்திலே—ஏறக்குறைய 8½ கோடி ரூபாய் அளவுக்கு நீதித் துறைக்கு ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-15*

அதுமட்டுமல்லாமல், *49* Fast Track Courts—விரைவு நீதிமன்றங்கள்—தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு, பல வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன.

ஓர் ஆய்வு செய்தபோதுகூட ஏறக்குறைய *30* சதவிகிதம் அளவிற்கு விரைவாகவே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 'Justice delayed is justice denied' என்று சொல்வார்கள். காலந்தாழ்த்தப்பட்ட நீதி, மறுக்கப்படுகின்ற நீதி; அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நம்முடைய அம்மாவுடைய ஆட்சியிலே வரக்கூடாது என்கிற வகையிலே, விரைவான நீதி வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் பெண்ணாகரம் பகுதியிலே சில சின்னச் சின்னப் பிரச்சினைகள்



2002 ஏப்ரல் 4]

இருக்கலாம். அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அந்த Magistrate posting-ஐப் பொறுத்தவரையில் regular-ஆக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், வழக்குகளினுடைய தேக்கத்தைப் பற்றி அவர் சொன்னார். ஆனால் ஏறக்குறைய மொத்தம் *1425* வழக்குகள்தான் தேங்கி இருக்கின்றனவேயொழிய, அவர் சொன்னது போல அவ்வளவு வழக்குகள் தேக்கம் இல்லை. அங்கேகூட ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அதிலே ஒரு regular posting-ஆக Magistrate-ஐ நியமித்து intensive-ஆக துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக அந்த வழக்குகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ளது. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், காஞ்சிபுரம் தலைநகராக இருந்தாலும், மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டிலே அமைந்துள்ளது. ஆகவே செங்கல்பட்டிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றவோ அல்லது குறைந்தபட்சம் Additional District Court காஞ்சிபுரத்திலே நிறுவுவதற்கோ அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநாவுக்கரசு, அண்ணா இருக்கும்போதே காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொடுத்துவிட்டு, நீதிமன்றத்தை செங்கல்பட்டிற்குக் கொடுத்து இருக்கிறார்கள். சட்ட அமைச்சர், விளக்கம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நீதிமன்றத்தை மாற்றுவதனால், அங்கே எந்தப் பிரச்சினையும் இதனால் எழக்கூடாது. எனவே, வழக்கறிஞர்களுடைய தீர்மானம், Bar Council-னுடைய தீர்மானம் மற்றும் பொதுமக்களுடைய கருத்து, உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை, இவற்றை ஏற்று அந்த இடத்திலே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**84—**

**மருத்துவர்கள்**

***1734—திரு. ப. இராஜரெத்தினம்—**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தினில் பிறந்து ஜெகத்தினை ஆண்டுகொண்டு இருக்கின்ற, என்னை வாழவைத்த தெய்வம் தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவுகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கீழ்க்கண்ட வினாவினை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விழைகின்றேன்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜரெத்தினம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். சுகாதாரத் துறை அமைச்சர் அல்ல.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கேட்க விழைகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பெரம்பலூர் பகுதி என்பது 1995-க்கு முன்னாலே திருச்சி மாவட்டத்தோடு இருந்தது. 1995-லே இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரம்பலூர் மாவட்டம் என்கின்ற மாவட்டத்தைப்



2002 ஏப்ரல் 4]

புதியதாகத் தந்து எங்களுக்கெல்லாம் ஒரு சிறப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு, பெரம்பலூரிலே தாலுக்கா அளவிலே இயங்கிக் கொண்டிருந்த அந்த மருத்துவமனை மாவட்டத் தலைமை மருத்துவமனை என்கின்ற அந்தஸ்தைப் பெற்று, 1995 ஆம் ஆண்டிலே இருந்து இயங்க ஆரம்பித்தது. ஆகவே, தாலுக்கா மருத்துவமனையாக இயங்குகின்ற சூழ்நிலையையும், மாவட்ட மருத்துவமனையாக இயங்கக்கூடிய சூழ்நிலையையும் நாம் ஒன்றாகக் கருத்திலே கொள்ள முடியாது. இதயதெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் 2001-லே 7 மருத்துவர்களைப் புதியதாகக் கொடுத்தும்கூட இன்றைக்கு அங்கே 14 மருத்துவர்கள்தான் ஒரு தலைமை மருத்துவ மனையிலே பணிபுரிகின்ற சூழ்நிலையிலே, அங்கே மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** திருத்திக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து மறுபரிசீலனை செய்து, ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனை இயங்கவேண்டும் என்று சொன்னால், அந்த மாவட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜரெத்தினம், மருத்துவர் எண்ணிக்கை உயர்த்தப்படுமா என்பதுதானே? உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் அரசு மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்ட பிறகு, அங்கே 18 மருத்துவர்களுக்கான பணியிடங்கள் கொடுக்கப்பட்டன. அந்தப் பணியிடங்களிலே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, 14 மருத்துவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அங்கே இன்னும் 4 இடங்கள் நிரப்பப்பட வேண்டியிருக்கின்றன. அதிலும் குறிப்பாக, எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவிற்கான டாக்டர், மகப்பேறுப் பிரிவிற்கான டாக்டர், பால் வினை நோய்ப் பிரிவிற்கான டாக்டர், கண் சிகிச்சைப் பிரிவிற்கான டாக்டர், ஆக இந்த

[2002 ஏப்ரல் 4

4 பிரிவுகளுக்கும் அங்கே பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. எனவே, விரைவிலே அந்தப் பணியிடங்கள் நிச்சயமாக நிரப்பப்படும். மாவட்டத் தலைமை மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அங்கே படுக்கைகளினுடைய எண்ணிக்கை 114 ஆக இருக்கிறது. Medical Council of India-வினுடைய norms -இன்படி, 10 படுக்கைகளுக்கு ஒரு டாக்டர் நிரப்பப்படவேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அதன்படி பார்த்தால்கூட, அங்கே 18 மருத்துவர்கள் பணியிடங்கள் போதுமானதாக இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க, காலியாக உள்ள அந்த நான்கு பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**85—**

**சிகிச்சைப் பிரிவுகள்**

***7450—திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றிற்கான சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாமக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில், காது, மூக்கு, தொண்டை பிரிவு ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும், தற்போது அந்த E.N.T. பிரிவிற்கு என்று நிரந்தரமான டாக்டர் அங்கே இல்லாத நிலையில், வாரத்திற்கு இரண்டு நாட்கள், அதாவது செவ்வாய்க்கிழமை,



2002 ஏப்ரல் 4]

வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாட்களுக்கு, இராசிபுரம் மற்றும் சேந்தமங்கலம் ஆகிய மருத்துவமனைகளிலேயிருந்து டாக்டர்கள் மாற்றுப் பணிக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மருத்துவமனை ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனையாக இருப்பதால், E.N.T. பிரிவிற்கு என்று நிரந்தரமாக அங்கே ஒரு டாக்டர் நியமிக்கப்படுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியின் மேம்பாட்டிற்காக, குறிப்பாக நாமக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற மக்களின் நல்வாழ்விற்காக, கேட்டவற்றையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இப்போது வைத்த இந்தக் கோரிக்கையையும் ஏற்றிருக்கின்றார்கள். இதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியினை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது இருக்கின்ற அந்தத் தலைமை மருத்துவமனையிலே 12 அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருக்கின்றார்கள். ஆனால், இந்த 12 அறுவை சிகிச்சை நிபுணர்கள் வருடத்திற்கு 1,500 அறுவை சிகிச்சைகளைச் செய்கின்றார்கள். கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் 112 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அதில் 33 குழந்தைப் பிரசவ அறுவை சிகிச்சைகள். கரூர், தொட்டியம், துறையூர் ஆகிய இடங்களில் இருந்துகூட அங்கே வந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஒரு வருத்தமான செய்தியையும் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். எச்.ஐ.வி. விகிதம் என்னுடைய தொகுதியில்தான் அதிகமாக இருக்கிறது. இதன் காரணத்தினால், எங்கெல்லாம் எச்.ஐ.வி. நோயாளிகள் இருக்கிறார்களோ, அவர்களெல்லாம் என்னுடைய நாமக்கல் மாவட்டத்திலே இருக்கின்ற அந்தத் தலைமை மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுத்தான் அறுவை சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். 12 அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருக்கின்ற அந்த இடத்திலே, இதுநாள் வரையில் மயக்க மருந்து கொடுக்கின்ற நிபுணர் ஒருவர்கூட இல்லாமல், அண்மையிலேதான் ஒரு வாரத்திற்கு முன்பாக, அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஒரு மயக்க மருந்து

நிபுணரை அங்கே கொடுத்திருக்கின்றார்கள். இந்த ஒருவர் போதாது. 1,500 அறுவை சிகிச்சைகளை ஓராண்டிலே செய்ய வேண்டுமென்றால், அங்கே இருக்கின்ற இரண்டு அறுவை சிகிச்சைக் கூடங்களை முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றால், 12 அறுவை சிகிச்சை நிபுணர்களையும் முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால், ஒரு மயக்க மருந்து நிபுணர் போதாது என்பதை அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். எனவே, அருள்கூர்ந்து, இன்னும் ஒரு மயக்க மருந்து நிபுணரைக் கொடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் ஒரு ஸ்கேன் மிஷினை அங்கே கொடுத்திருக்கின்றார்கள். அது மிகவும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், என்ன? அறுவையா, மயக்கமா? என்னவென்று தெரியவில்லை. கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** அந்த ஸ்கேன் மிஷினையும் முழுமையாகப் பயன்படுத்துவதற்கு, அந்தப் படங்களை, அந்த டையக்னோஸிஸை எழுதிக் கொடுப்பதற்கு ஒரு நல்ல இருதய சிகிச்சை நிபுணர் தேவை. மற்றும் நரம்பியல் நிபுணர் தேவை. அந்த இருவரும் இல்லாமல் அந்த இயந்திரத்தைப் போதுமான அளவிற்கு நாம் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பதையும் கூறி, அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

o

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஊருக்குப் போகிறீர்களா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத் தலைமை மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அங்கே அனுமதி அளிக்கப்பட்ட டாக்டர்களைவிடக் கூடுதலாக இரண்டு டாக்டர்களை reserve duty-யில் போட்டிருக்கிறோம். சென்ற ஒன்றரை மாதத்திற்கு முன்னால் அந்த மருத்துவமனையை நான் ஆய்வு செய்கிறபோது, மாண்புமிகு மன்ற உறுப்பினர் அவர்களும் உடன் இருந்தார்கள். அங்கே மயக்க மருந்து நிபுணர் பற்றாக்குறை பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இரண்டு இடங்கள் கேட்டார்கள். ஓர் இடம் தற்போது நிரப்பப்பட்டு இருக்கிறது. மயக்க மருந்து நிபுணர்களைப் பொறுத்தவரையிலே தமிழகத்திலேயே மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது. எனவேதான், அங்கேயிருக்கிற இணை இயக்குநருக்கு



நாங்கள் சொல்லியிருக்கிறோம். தேவைப்படுகின்றபோது, வெளியிலே இருக்கிற மயக்க மருந்து நிபுணர்களை நீங்கள் அங்கே வாடகைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். அப்படி வாடகைக்கு வைத்துக்கொள்கிற அந்த நிபுணருக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாடகையா, இரவலா? ஆட்களை வாடகைக்குப் பிடிப்பது பெரிய கஷ்டம். (குறுக்கீடு) குத்தகையா? (குறுக்கீடு) ஒப்பந்த அடிப்படையில்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு (குறுக்கீடு) இல்லை. ஒப்பந்தம் வராது. அதற்கு சரியான தமிழ்ச் சொல்லை முத்தமிழ்க் காவலரான நீங்கள் சொன்னால், அதை நான் பயன்படுத்திக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். எங்களுடைய மருத்துவ நிபுணர்கள் எல்லாம், வாடகைக்கு என்றுதான் சொல்கிறார்கள். எனவே, அந்த வகையிலே கூடுதலாகத் தேவைப்படுகிறபோது அறுவை சிகிச்சை நிறுத்தப்படக்கூடாது என்ற அந்த வகையிலே, அந்தப் பகுதியிலே இருக்கிற தனியார் மருத்துவர்களை, தனியார் மயக்க மருந்து நிபுணர்களை வாடகைக்கு அமர்த்திக்கொள்ளலாம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். அதற்காகக் கட்டணமும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு அவர்களுக்கு நாங்கள் அனுமதி அளித்து இருக்கிறோம். இருந்தாலும், நாமக்கல் மாவட்ட மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே, அங்கே கூடுதலாக ஒரு மயக்க மருந்து நிபுணர் தேவை என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே, இப்போது பி.ஜி. கோர்ஸ், அதாவது மேற்பட்டப் படிப்பு படித்துவிட்டு மாணவர்கள் வெளியிலே வரவிருக்கிறார்கள். அப்படி வெளிவருகிறபோது, அவர்களிலிருந்து அந்தப் பணியிடத்திற்கு நிச்சயமாக ஒருவர் நிரப்பப்படுவார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, நாமக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே எய்ட்ஸ் நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பிரிவுகூட அங்கே அந்த மாவட்டத் தலைமை மருத்துவமனையிலே இருக்கிறது. இருந்தாலும் பால் வினை நோய்ப் பிரிவிற்கான ஒரு டாக்டர் இல்லை என்பது உள்ளபடியே உண்மைதான். இருந்தாலும், அதற்கும் சேர்த்து ஒரு டாக்டரை நியமிப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்

[2002 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது; மயக்க மருந்துப் பணியாளர்கள் அரசுக்கு, மக்களுக்குத் தேவையென்கின்ற நிலை இருக்கின்றபோது, அவர்களை வாடகைக்கு எடுப்பதைவிட, அவர்களுக்கு அரசாங்கமே தனியாக ஒரு நிதியினை ஒதுக்கி, ஏன் அப்படிப்பட்டவர்களுக்கு அரசுப் பணி கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வரவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயக்க மருந்து நிபுணர்களுக்கான அந்த மேற்பட்டப் படிப்புக்கான இடமே குறைவாக இருக்கிறது. மொத்தமே ஆண்டிற்கு 19 இடங்கள்தான் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்றன. எனவே, அந்த இடம் போதாது. ஆண்டிற்கு 19 பேர் படித்துவிட்டு வந்தால், தற்போது இருக்கின்ற நிலைமையில், அதிகரித்து வருகின்ற மருத்துவமனைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, அங்கே அந்த மயக்க மருந்து நிபுணர்களை நியமிக்க எங்களாலே முடியவில்லை. அதனால்தான் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த 19 இடங்களை இப்போது, இந்த ஆண்டு 28 இடங்களாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வருகின்ற ஆண்டிலே அதிகப்படியான மயக்க மருந்து நிபுணர்கள் படித்துவிட்டு வெளியிலே வருவார்கள். அப்போது, அந்தத் தேவையான இடங்களுக்கு அவர்கள் நிரப்பப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திருமதி செ. சுந்தராம்பாள், திரு. கே.சி. கருப்பணன் மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**86—**

**தொகுப்பு விடுகள்**

***8736—திருமதி செ. சுந்தராம்பாள்:**

**திரு. கே.சி. கருப்பணன்:**

**திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 4]

ஊராட்சி ஒன்றியங்களில் காலனி வாழ் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவது போன்று, பேரூராட்சியில் உள்ள காலனி வாழ் மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1994-ஆம் ஆண்டு நகர்பாலிகா சட்டத்தின்கீழ் பேரூராட்சிகள் நகர்ப்புறப் பகுதிகளாக மாற்றப்பட்டதன் காரணமாக, பேரூராட்சிப் பகுதிகளில் தொகுப்பு வீடு கட்டுகிற திட்டம் மத்திய அரசால் எடுக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செ. சுந்தராம்பாள்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக 6 கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கும் நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991 முதல் 1996 வரை முதல்வராக இருந்தபொழுது, பேரூராட்சிகளில் வாழும் காலனி வாழ் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1994-ஆம் ஆண்டு நிறுத்தி வைக்கப்பட்டது என்று இங்கே கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசின் அனுமதி பெற்று, மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சிந்திப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளில் வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு துறையின் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலம் எழுதி, அந்த முயற்சிகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** தமிழகத்தைக் காக்க வந்த எங்கள் நடமாடும் தெய்வம், இதயதெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் சரிசமமானவர்கள். என்னுடைய தொகுதியிலே, ஒரே ஊரை, ஒரு ரோடு இரண்டாகப் பிரிக்கிறது. அதில் ஒரு சைடு ஊராட்சியாகவும், ஒரு சைடு பேரூராட்சியாகவும் இருக்கின்றது. ஊராட்சியில் இருக்கின்றவர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டியாகிவிட்டது; பேரூராட்சியில் இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் வேதனை அடைகிறார்கள். அவர்களுடைய வேதனையைப் போக்க, நம்முடைய தமிழக நிதியிலிருந்தாவது அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து வீடுகள் கட்ட நம்முடைய அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இப்படித் தாழ்த்தப்பட்ட சமுதாயம் மற்றும் வறுமையிலே இருக்கக்கூடிய மக்களுக்கெல்லாம் சிறிய அளவிலே வீடுகள் கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பகுதிக்கு, குறிப்பிட்டு எழுத்துப் பூர்வமாகக் கொடுத்தால் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக, மிக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள, இந்த நாட்டு மக்களால் பரிதாபத்திற்குரியவர்கள் என்று கூறக்கூடிய அந்த ஆதிதிராவிட அருந்ததி இன மக்களுக்காகப் பேரூராட்சியிலும் வீடு கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து மத்திய அரசுக்கு எழுதும் என்று சொன்னார்கள். இவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நன்றி. ஆனால், கடந்த 10 மாத காலமாக இதைப் பற்றிச் சிந்தித்து கடிதங்கள் எழுதி இருக்கின்றீர்களா என்பதைத் தயவுகூர்ந்து உங்கள் மூலமாக அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படிப்பட்ட கோரிக்கைகள் எங்களிடம் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கோரிக்கை வைத்திருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மூலம் எழுதப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுப்பு வீடு திட்டத்தின் வாயிலாக *10* ஆண்டு, *15* ஆண்டுகளுக்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகள் அத்தனையும் இடிந்து போகின்ற சூழ்நிலையில் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஆதிதிராவிட மக்களுக்குத்தான் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். ஆகவே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில், ஆதிதிராவிடர் நலனில் அக்கறை கொண்ட புரட்சித் தலைவி ஆட்சியில் அந்த வீடுகளைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சா வீடுகள் என்ற ஒரு திட்டத்தின் மூலம் பழுதுபட்ட வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியை எழுத்துப்பூர்வமாகக் கொடுத்தால், பழுதடைந்த வீடுகளுக்குக் குறைவான நிதி ஒதுக்கீடு இருந்தாலும், அந்த நிதியை வைத்து பழுதடைந்த வீடுகள் எல்லாம் கச்சா வீடுகள் கட்டுகின்ற திட்டத்தின் மூலம் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, நகர்பாலிகா திட்டத்தின்கீழ் பேரூராட்சிகள் வந்துவிட்ட காரணத்தினால், மத்திய அரசு நிறுத்திவிட்டது என்று சொன்னார்கள்.

பேரூராட்சிகளிலேயே A Grade, B Grade, Special Grade என்று இருக்கிறது. Special Grade-க்குத் தரவில்லையென்று சொன்னாலும்கூட, பொருளாதாரத்திலே உயர்ந்து விட்டது என்று எண்ணினால்கூட,

[2002 ஏப்ரல் 4

குறைந்தபட்சம் அந்த A Grade, B Grade என்று இருக்கின்ற நலிந்த பகுதிகளுக்காவது கொடுப்பதற்கு மத்திய அரசிடம் சிபாரிசு செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சி இருக்கின்றபோதும் இந்தத் திட்டம் இருந்தது. அன்றைக்கு இந்தத் திட்டத்தை வலியுறுத்தி இருந்தால், முன்பு இருந்ததைப்போல பேரூராட்சிகளுக்கும், தாழ்த்தப்பட்ட சமுதாயம் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மத்திய அரசு வழங்கி இருக்கலாம். ஆனால் அன்றைக்கு விட்டுவிட்டு, இன்றைக்குப் பேரூராட்சிப் பகுதிகளிலே, ஊரகப் பகுதி பேரூராட்சி, நகர்ப்பகுதி பேரூராட்சி என்று மத்திய அரசாங்கத்திற்கு நாம் தெரிவிக்கவில்லை. ஆனால் மாநில அரசு வேண்டுமானால் A Grade அல்லது Special Grade என்று பிரித்து வைத்திருக்கலாம். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், ஒட்டுமொத்தமாகப் பேரூராட்சிகள் அனைத்தையுமே நகர்பாலிகா சட்டத்தின் மூலமாக ஓரே மாதிரிதான் கருதுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியதைக் காரணம் காட்டி ஏற்கெனவே சொன்னதைப் போல மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மூலம் மத்திய அரசுக்கு, பேரூராட்சிப் பகுதிகளிலும் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கடிதம் எழுதப்படும் என்பதை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி என்று வந்துவிட்ட காரணத்தினாலேயே, அங்கு வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுடைய சமூக நிலை உயர்ந்து இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது. ஆனால் நகர்பாலிகா சட்டம் வந்ததனாலே எடுக்கப்பட்டுவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் A, B, C என்ற அந்த Category-யிலே குறைந்தபட்சம் கடைசியில் இருக்கிற பேரூராட்சிக்காவது கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். Selection Grade Town Panchayat-ல் வாழ்கிற மக்களும் அதிகமான பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள்.



2002 ஏப்ரல் 4]

ஏற்கெனவே 10 15 ஆண்டுகளுக்கு முன்பாக, இந்தச் சட்டம் அமலில் இல்லாத காலத்தில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த வீடுகளும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பது என்பது உண்மை. ஆகவே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கச்சா வீடுகளைக் கட்டுகிற திட்டத்தின் கீழும், தொகுப்பு வீடுகள் கட்டுகிற திட்டத்தின் கீழும், வித்தியாசம் இல்லாமல், அனைத்துப் பேரூராட்சிகளிலும் கட்டுவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரவும், வேண்டுமென்றால் மத்திய அரசு விரைவாகக் கொண்டு வர வேண்டும் என்று வற்புறுத்தவும், அல்லது நமக்கு அதிகாரங்கள் இருந்தால் நாமே செய்து கொடுக்கவும் முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, அதை விரைவாகச் செய்ய அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசிற்குக் கடிதம் எழுதுவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், தொகுப்பு வீடுகள் கட்டுகின்றபோது நகர்பாலிகா சட்டத்தின் மூலம் பேரூராட்சிகளுக்கு மைய அரசு அனுமதி வழங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநில வாரியாகப் பார்க்கின்றபோது இந்தத் திட்டங்கள் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகின்றன. நிதி நிலையிலே, amount-ல் வடநாட்டிலே பார்க்கின்றபோது, S.T. people தான் அதிகமாக இருக்கிறார்கள். தென்னகத்திலே பார்க்கின்றபோது S.T. people குறைவு. மாநில வேறுபாடுகளைப் பார்க்கின்றபோது தமிழகத்திலே S.T. குறைவு. S.C. அதிகம். இந்த நிலை மத்திய அரசாங்கத்திற்குத் தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது. அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, மைய அரசிற்குத் தெரிவிக்கப்படும் என்று சொன்னார்கள். அனுமதி பெற்றுக் கட்டித் தருவோம் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டிலே ஒதுக்கப்படுகிற வீடுகளில், பேரூராட்சிப் பகுதிகளுக்கும் ஒதுக்கித் தந்து, இந்த ஆண்டே அதற்கான அனுமதியை அரசு பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே என்று உறுதியாகச் சொல்ல முடியாது. மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்கின்றபோதுதான் பேரூராட்சிப் பகுதிகளில், தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வீடு கட்டுகின்ற திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி மட்டுமல்லாமல், மாநில அரசும் நிதி ஒதுக்குகிறதா? இந்தத் திட்டத்தில் கட்டப்படுகிற வீடுகளைப் பொறுத்தவரை ஒரு ஆண்டுக்கு ஒரு ஊராட்சிக்கு 10 வீடுகளுக்கு மேல் ஒதுக்கப்படுவது இல்லை. அந்த எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயம், பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கு மத்திய அரசாங்கம் ஒதுக்குகின்ற திட்டத்தில் மாநில அரசாங்கத்தினுடைய பங்கும் இருக்கிறது. ஆனால், ஒரு குறிப்பிட்ட ஊராட்சிக்கு 10 வீடுகள்தான் என்று விதிமுறை இல்லை. முன்னொரு காலத்திலே, குறைந்தபட்சம் 20 வீடுகளுக்கும் குறைவாகக் கட்டக்கூடாது என்றுகூட ஒரு விதிமுறை எல்லாம் இருந்தது. எனவே, 20 அல்லது 10 என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தேவைக்கேற்ற வகையில், ஒரு சில கிராமங்களிலே முன்னூறுக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் இருக்கலாம், ஆனால், ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கீடு செய்கின்றபோது, மக்கள் தொகை அடிப்படையிலே 200 அல்லது 150 வீடுகள் என்றுதான் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கடந்த காலங்களிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றியத்திலே பல்வேறு கிராமங்களிலே தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே ஒவ்வொரு ஊராட்சிக்கும் 10 அல்லது 15 அல்லது 20 வீடுகள் என்ற அடிப்படையிலேதான் கட்டப்படுகின்றன. 10 என்ற விதிமுறை எதுவும் பின்பற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே ஏழை எளிய தலித் மக்களுக்கு இத்தகைய வீடுகள் கட்டித் தரப்படுகிறபோது அதற்கு ஓர் அளவுகோல் இருக்கிறது. B.P.L. என்று சொல்லப்படுகிற below poverty line—வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் தரப்படும் என்ற ஒரு விதி இருக்கிறது. ஆனால், இந்த below poverty line என்ற பட்டியலைக் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, பெரும்பாலும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்காகவோ அல்லது அவர்கள் ஆதரவாளர்களுக்காகவோ, அவர்கள் விருப்பத்திற்கேற்ப தயார் செய்து, இதுதான் below poverty line என்று சொல்லக்கூடிய ஒரு நிலை இருந்து, என்னைப் போன்றவர்கள் வழக்கு மன்றத்திற்கு எல்லாம் போனோம். எனினும், அந்தப் பட்டியல் அப்படியே நீடிக்கிற நிலை இருந்தது. இப்போது below poverty line என்னும் அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற அந்தப் பட்டியல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், கேள்வியைக் கேளுங்கள். அமைச்சரிடமிருந்து என்ன விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களோ, அதைக் கேளுங்கள். அதிலே பழையவற்றை சொல்ல வேண்டாம்.

**திரு. செ.கு. தமிழரசன்:** என்னுடைய கேள்விக்கு ஒரு முன்னுரை தரவேண்டுமென்பதற்காகத்தான் அதைச் சொன்னேன். *(மணியடிக்கப்பெற்றது).*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னுரையெல்லாம் வேண்டாம். நேரடியாகக் கேளுங்கள். அமைச்சரிடம் கேளுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** இப்போது அந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கான பட்டியலின் இந்தப் பழைய மரபுகள் மாற்றியமைக்கப்படுமா? உண்மையாகவே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் மட்டும் அந்தப் பட்டியலிலே சேர்க்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாய, மிகவும் பிற்படுத்தப்பட்ட

[2002 ஏப்ரல் 4

சமுதாய மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுவது, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் என்று ஏற்கெனவே இருந்த விதிமுறைதான் இப்போதும் இருக்கிறது. அந்த வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் யார் அல்லது யாருக்குத்தான் வீடு கட்டிக் கொடுக்கலாம் என்பதைத் தீர்மானிப்பதில் அந்தந்த ஊராட்சி மன்றத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. ஊராட்சியிலே வைத்து அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்தான் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து வருகிறார்கள் என்பதுதான் நடைமுறை. இப்போதும் அதே விதிமுறையில்தான் வீடு கட்டுகின்ற திட்டம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது இருந்த அந்த ஓட்டு வீடுகள் எல்லாம் இன்றைக்கு கச்சா திட்டத்திலே புதுப்பிக்கப்படுகின்றன. அதற்குரிய பணம் என்பது, பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஏழையெளிய தாழ்த்தப்பட்ட மக்கள் அந்த வீட்டைப் புதுப்பிக்க முடியாமல் நீண்ட காலமாகக் காத்திருக்கக்கூடியவர்கள், அந்த வீட்டைக் கட்டி முடித்த பின்னால்தான் அந்தப் பணம் வழங்கப்படும் என்று தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்படுகிறது. அதனால் பல பேர் பயன் பெறாமல் அந்தப் பணம் திரும்பிப் போகிறது. ஆகவே அந்த amount-லே பாதியாவது பாதிக்கப்பட்ட, அந்த வீடு கட்டக்கூடிய நபர்களுக்கு, அந்தப் பயன்தாரர்களுக்குக் கொடுக்க அரசு உத்தரவை வழங்குமா? அதைப் பரிசீலிப்பதற்கான முடிவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதால், வீடு கட்டி, பழுதடைந்தவைகளைப் பொறுத்தவரை, ஒரே முறையில் ரூபாய் பத்தாயிரத்தைக் கொடுத்துவிட்டால், அவர்கள் வீடு கட்டாமல் அந்த ரூபாயை வேறு காரியத்திற்கு, வேறு திட்டத்திற்குப் பயன்படுத்தி விடுவார்களேயானால், என்ன செய்வது என்பதற்காகத்தான், வீடு கட்டி முடித்ததற்குப் பின்பு அவர்களுக்குப் பணம் கொடுக்கின்ற முறையைப் பின்பற்றி



2002 ஏப்ரல் 4]

வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பாதித் தொகையை முன்கூட்டியே வழங்கலாம் என்று சொல்கின்ற ஒரு முறை நல்ல முறை. இது தொடர்பாக அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 87, திரு. ப. சிதம்பரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**87—**

**மின் விளக்கு**

***13602—திரு. ப. சிதம்பரம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதியிலுள்ள உக்கரத்தில் அனைத்து மின் கம்பங்களுக்கும் உடனடியாக மின் விளக்கு வழங்கி, விளக்கு எரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் குறிப்பிட்ட ஊராட்சியில் தெரு விளக்குகள் அனைத்தும் எரிந்துகொண்டிருக்கின்றன என்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வென்றாரும் இல்லை, இனி வெல்வாரும் இல்லை' என்று ஆண்டிப்பட்டியிலே வெற்றி கண்டு, இன்றைக்கு அகில உலகத்திற்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்ற அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன். எனது பவானிசாகர் தொகுதியில் உக்கரம் ஊராட்சி மன்றம் போதுமான நிதி வசதி இல்லாத ஊராட்சியாகும். மேலும், இவ்வூராட்சியில் புதிய மின் விளக்குகள் அதிகமாகப் போட

[2002 ஏப்ரல் 4

வேண்டியுள்ளது; மிகவும் பிற்படுத்தப்பட்டோர்கள், ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் அதிகமாக இருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், இந்த ஆண்டு உதவி வழங்கி, இதற்கு விதிவிலக்கு அளித்து, புதிய மின் விளக்கு வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற உக்கரம் ஊராட்சியில் 221 டியூப் லைட்டுகளும், 15 சோடியம் ஆவி விளக்குகளும் ஏற்கெனவே இருக்கின்றன. அந்த ஊராட்சியினுடைய நிதி நிலைமையைப் பொறுத்து, அந்த ஊராட்சி மன்றத் தலைவர் விரும்பினால், ஊராட்சியின் தீர்மானத்தின் மூலமாக, ஊராட்சி நிதியின் மூலமாகக் கூடுதலாக விளக்குகள் அமைத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகவும் அந்த ஊராட்சிப் பகுதியிலே கூடுதலாக, புதியதாக மின் விளக்குகள் அமைத்துக் கொள்ளலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அந்த ஊராட்சிக்கு அவருடைய நிதியிலேயிருந்துகூடப் புதிய மின் விளக்குகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 88, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**88—**

**விவசாயக் கல்லூரி**

***4986—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரத்தின் பக்கத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை, திருவாரூரை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் என்பது காவிரி டெல்டா மாவட்டங்களாகும். முழுவதும் விவசாயத்தினைச் சார்ந்திருக்கின்ற அந்தப் பகுதிக்கு விவசாயக் கல்லூரி தேவை என்பது அந்தப் பகுதி விவசாயிகளினுடைய நீண்ட நாள் கோரிக்கை ஆகும். பாபநாசம் தொகுதியைப் பொறுத்தவரை, மிக அதிகமான அளவிலே விவசாயத்தை, விவசாயிகளைச் சார்ந்திருக்கின்ற ஒரு தொகுதியாக இருக்கிறது. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, இந்த அமைச்சரவையிலே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரை அந்தப் பகுதிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்து இருக்கிறார்கள். மண்ணின் மைந்தராக இருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மாவட்டங்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, எவ்வாறு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பெயருக்கு உலகப் புகழைச் சேர்க்கின்றதோ அதேபோல மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெருமையை இந்த உலகிற்கும், தமிழகத்திற்கும் அறிவிக்கும் வண்ணம், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், என்னுடைய பாபநாசம் தொகுதியில் அந்த மேற்படி வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே தஞ்சை நஞ்சையும், புஞ்சையும் கொண்டு பூத்துக் குலுங்கியது. ஆனால் தஞ்சையிலே பாய்கிற காவிரி வறண்ட நிலையிலே இன்றைக்கு இருக்கிறது. அதை வைத்து எல்லாம் கேட்க முடியாது. ஆனால் இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலே 10 கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. கோவை, மதுரை, கிள்ளிகுளம் மற்றும் திருச்சி; வேளாண்மைப் பொறியியல் கல்லூரி - கோவை மற்றும் குமுளூர், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - கோவை மற்றும் பெரியகுளம், வன இயல் கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மேட்டுப்பாளையம், மனை இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மதுரை, இப்படி 10 இடங்களில் கல்லூரிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

முற்பகல் 10-50

கிட்டத்தட்ட, ஒரு ஆண்டுக்கு 531 மாணவர்கள் பயின்று வெளியே வருகிறார்கள். ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் படித்து வெளிவரவேண்டுமென்று சொன்னால், ஒரு மாணவருக்கு ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரம் ரூபாய் செலவாகிறது. அது மட்டுமல்ல; புதிதாக ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், 500 ஏக்கர் நிலமும், கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் பணமும் தேவைப்படுகிறது. ஆகவே, இருக்கிற நிதிநிலையையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்று பணிவோடு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சிவபுண்ணியம், இல்லை. உங்கள் கேள்விக்குப் பதில், 'இல்லை.'

**திரு. வை. சிவபுண்ணியம்:** நீங்களே சொல்லிவிட்டீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பழைய வேளாண்மைத் துறை அமைச்சர்.

வினா எண் 89, திரு. கே.என். இலட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**89—**

### கம்பளிப் புழுத் தாக்குதலைத் தடுத்தல்

***9727—திரு. கே.என். இலட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பளிப் புழு தாக்கி, நிலக்கடலை நாசமாவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?





**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலக்கடலையில் சிகப்பு கம்பளிப் புழுத் தாக்குதல் தென்பட்டால், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் என்.பி.வி. வைரஸ் மூலம் சிகப்பு கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துககொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயிகள் மிகத் துயரத்தில் இருக்கிறார்கள். புஞ்சை நிலத்திலே விளைகின்ற நிலக்கடலை மிகவும் தாக்கப்பட்டு வருகிறது. அதனால் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்; எடுக்கப்படுகிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிகப்பு கம்பளிப் புழுக்கள் ஆண்டுக்கு ஒரு முறை தாக்குதலைத் தொடங்கும்; அதாவது ஜூன், ஜூலை மாதங்களில். ஆனாலும், இந்தச் சிகப்பு கம்பளிப் புழுக்களின் தாக்குதல் இப்போது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் உசிலம்பட்டியில், அந்தச் சிகப்பு கம்பளிப் புழுக்கள் இரயிலையே நிறுத்தியிருக்கின்றன. ஆனால், அப்படியெல்லாம் இப்போது இல்லை. இப்போது அவை கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேர்க்கடலையைச் சிகப்பு கம்பளிப் புழு தாக்குவதைப் பற்றி, அதை அழிக்கக்கூடிய நிலையைப் பற்றியெல்லாம் இங்கே அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இப்படி அந்தக் கம்பளிப் புழுவை ஒழிப்பதில் இன்னும் விவசாயிகளை ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலே தொடர்ந்து விவசாயிகளே அதைச் செய்யக்கூடிய நிலை இருக்கிறது. விவசாயப் பலகலைக்கழகங்களிலே பயிலக்கூடிய மாணவர்கள் படித்துவிட்டு, பட்டம் பெற்று, வேலை இல்லாமல் இப்போது அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்; இந்தச் சூழ்நிலையிலே,

[2002 ஏப்ரல் 4

அப்படி விவசாயப் பட்டம் பெற்ற அந்த மாணவர்கள், தொடர்ந்து விவசாயத் தொழிலை மேற்கொள்ளச் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு, மருத்துவப் படிப்புப் படித்த மாணவர்கள், அரசு வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை என்று சொன்னாலும், மருத்துவத் தொழிலைச் செய்கிறார்கள். இப்படி விவசாயப் பட்டப் படிப்புப் படித்தவர்களை, அரசு வேலைவாய்ப்புக் கிடைக்காத பட்சத்தில், விவசாயத் தொழிலிலேயே ஊக்குவிக்கலாம். விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதற்கு, அரசு அவர்களை ஊக்குவிக்குமா, அவர்கள் விவசாயத் தொழிலைச் செய்வதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், படித்துப் பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருக்கிற அந்த மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகிற வகையிலே, வேளாண் விஞ்ஞானியாக இருக்கிற டாக்டர் சுவாமிநாதன் அவர்களுடைய ஆலோசனையின்பேரிலே, அந்த மாணவர்களுக்குப் பயன்படுகிற வகையிலே, Agri business தொடங்குவதற்கு, அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. அப்படித் தொடங்குகிறபோது, வேலையில்லாமல் இருக்கின்றவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகிற நிலை உருவாகும். அவர்களுக்கு, நபார்டு வங்கியின் மூலமாக ரூ.25 இலட்சம் வரை உதவி கிடைப்பதற்கான வாய்ப்பும் ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தங்களின் மூலமாகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது விவசாயத் தொழிலில் பயன்படுத்தப்படுகின்ற பூச்சிக்கொல்லி மருந்துகள், கம்பளிப் புழுக்களை அழிக்கக்கூடிய மருந்துகள், இவையெல்லாம் தற்போது வீரியமற்ற மருந்துகளாக இருக்கின்றன. அவற்றை விவசாயத்திற்குப் பயன்படுத்தும்போது, அந்தப் பூச்சிகள் சாவதில்லை. ஆகவே, இதை மனதிலே கொண்டு, அரசு வீரியமிக்க பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா, அதேபோலத் தனியார் தயாரிக்கின்ற அந்த மருந்துகளின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2002 ஏப்ரல் 4]

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தரமான மருந்துகள்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அப்படி எந்தப் பூச்சிக்கு எந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டுமென்று தெரியாமல் செய்கிறபோதுதான், பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. பூச்சி மருந்துகளின் தரம் குறைவாக இருக்குமானால், அதைத் தயாரித்த அந்தக் கம்பெனிகள் மீது வழக்குத் தொடரப்படுகிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிலக்கடலைப் பயிரை இங்கே தாக்கி நாசமாக்கிக் கொண்டிருக்கிற கம்பளிப் புழுவிற்கு சைனாவில் நல்ல வரவேற்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை உயிரோடு பிடித்து எக்ஸ்போர்ட் செய்து ஏதாவது வருவாயை ஈட்டுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கேட்டால் எப்படி?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் முன்வந்து அதைச் செய்தால், அரசு அவருக்கு உதவி செய்யும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**90—**

**உதவித் தொகை**

**•7166—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவை, ஊனமுற்றோர் மற்றும் முதியோர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை உயர்த்தி வழங்கிட அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் உயர்த்தி வழங்கப்படும்?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மூலம் விதவைகளுக்கும், ஊனமுற்றோர்களுக்கும், முதியோர்களுக்கும் மாதம் 200 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் இந்த 200 ரூபாய் அவர்களுக்குப் போதுமானதாக இருக்குமா என்பதை அரசு பரிசீலனையில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு ரூ.500 அளவிலாவது வழங்குவதற்கு முன்வர வேண்டும். அத்துடன் விதவைகளுக்கு 35 வயது என்று வயது வரம்பு விதிக்கப்பட்டு இருக்கிறது. பெண்கள் 17, 18 வயதிலேயே கிராமத்தில் திருமணம் செய்துகொள்கின்றனர். எந்த நேரத்திலும், எந்த வயதிலும் விதவையாகக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு உள்ள வயது வரம்பை முற்றிலுமாகத் தவிர்த்துவிட்டு, எப்போது விதவையாகிறார்களோ, அந்த நாளிலிருந்தே அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படுமா? ஊனமுற்றோருக்கு வயது வரம்பு 45 வயது என்றும், முதியோருக்கு 65 வயது என்றும் நிர்ணயித்து உதவித்தொகை வழங்கப்படுவதாத் தெரிகிறது. அத்தகைய வயது வரம்பை ஊனமுற்றோருக்கும், முதியோருக்கும் ஒரு நிபந்தனையாக வைக்காமல், தளர்த்திட அரசு முன்வருமா?

மேலும் ஊனமுற்றோர் பட்டியலில் காது கேளாதோர், வாய் பேச இயலாதோர், பார்வை இழந்தோர் ஆகியோரெல்லாம் பயன் பெறுவதாகத் தெரியவில்லை. ஆகவே, அத்தகைய காது கேளாதோர், பேச இயலாதோர், பார்வை இழந்தோர் ஆகியோரையும் ஊனமுற்றோராக ஏற்று, அவர்களுக்கும் மாதந்தோறும் உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகை என்பது அரசால் நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கின்ற தொகை. இதிலே, நம்முடைய நாட்டிலே



மட்டும் 5 இனங்களாகப் பிரித்து, அதாவது முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவை ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியம், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியம் என்று 5 இனங்களாகப் பிரித்து வருடந்தோறும் நாம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையிலே 2002 பிப்ரவரி மாதம் வரை 11 இலட்சத்து 73 ஆயிரத்து 82 பேர் இதுவரைக்கும் ஓய்வூதியத் திட்டத்திலே பயன் அடைந்து இருக்கிறார்கள். ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வழங்குகிறது. முதியோர்களைப் பொறுத்தவரை, சத்துணவுக் கூடங்களிலே போய் உணவு அருந்திக்கொள்ளலாம் என்கிற சலுகை அவர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல, சத்துணவுக் கூடங்களிலே உணவு சாப்பிட விருப்பம் இல்லாமல் இருப்பவர்களுக்கு அரிசி வழங்கக்கூடிய திட்டத்தையும் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல விதவைத் தாய்மார்களைப் பொறுத்தவரை, எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெண்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிற பல்வேறு சலுகைகளிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து இருக்கிறார்கள். வேலைவாய்ப்பாக இருந்தாலும், கல்வியாக இருந்தாலும் அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே விதவையின் மகளுக்குத் திருமணம் என்றாலும்கூட ...:

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவையின் மகளுக்குத் திருமணம் என்றாலும்கூட அந்தச் சுமை ஓய்வூதியம் பெறுகிற தாய்க்கு வரக்கூடாது என்பதற்காக, 7000 ரூபாயை அரசு வழங்குகிறது. அதற்கும் மேலாக, அவர்களுக்கு ஆதரவே யாரும் இல்லை என்றால்—அரசு நடத்துகிற ஆதரவற்றோர் இல்லங்கள் 25 நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்றன --- ஆதரவற்றோர் இல்லங்களில் கொண்டு போய்க் குழந்தைகளை விட்டுவிட்டு, அவர்களும் ஏதாவது வேலைவாய்ப்புப் பயிற்சி பெற்றுக்கொள்ளலாம் என்கிற உத்தரவையும் அரசு பிறப்பித்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, உடல் ஊனமுற்றோருக்கு இதே ஓய்வூதியம் வழங்குவதாக

[2002 ஏப்ரல் 4

மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். உடல் ஊனமுற்றோரைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழ்நாட்டிலே மொத்தம் 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ஓய்வூதியம் என்பதைப் பொறுத்தவரை கிராமப்புறங்களிலே, வெளியிலே வந்து ஏதாவது வேலை செய்ய முடியாத உடல் ஊனமுற்றவர்கள் யாராவது இருந்து ஊருக்குள்ளேயே தங்களுடைய சொந்தக்காரர்களோடு, உறவினர்களோடு வாழுகிறவர்கள் என்றால் அவர்கள் இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு வாழ முடியும் என்கிற ஒரு சூழ்நிலைக்கு வருவதற்காகத்தான் இந்தப் பணம் வழங்கப்படுகிறது. தனியாக உடல் ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அரசு வழங்கிக்கொண்டு இருக்கிறது. இதுசம்பந்தமாக, உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்க அரசு தயாராக இருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**91—**

### தொழிற்சாலை

***7480—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், தோகைமலையில் வெட்டி எடுக்கப்படும் கிரானைட் கற்களுக்குப் மெருகூட்டி விற்பனைக்கு ஏற்ற வகையில் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, தொழில் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளித்தலை வட்டம், தோகைமலையில் வெட்டி எடுக்கப்படும் கிரானைட் கற்களுக்கு மெருகூட்டும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.



2002 ஏப்ரல் 4]

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை வட்டம், தோகைமலை என்பது பின்தங்கிய பகுதி. அங்கே பல வண்ணங்களில் கிரானைட் கற்கள் எடுக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, டாமின், தனியார்கள் மூலமாக நிரம்பக் கற்கள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் பர்கூரில் ஒரு மெருகூட்டும் தொழிற்சாலை தொடங்கியதுபோல, கற்களுக்கு மெருகூட்டும் தொழிற்சாலை ஒன்றை தோகைமலைப் பகுதியில் தொடங்கிவிட்டால், அந்தப் பகுதி தொழில் வளம் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அங்கே, பக்கத்திலே இருக்கிற மதுரை வரையிலும்கூட அந்த மெருகூட்டும் தொழிற்சாலை இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் அந்த மெருகூட்டும் தொழிற்சாலையை அமைத்துக் கொடுக்க அம்மா அவர்கள் ஆட்சியிலே முயற்சி எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது திட்டம் ஏதுமில்லை. மாண்புமிகு அம்மாவின் அரசு சிந்திக்கும்; மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**92—**

### சுகாதாரக் கேடு

***7086—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரும் நாற்றம் குடியிருப்புப் பகுதி மற்றும் அரசு கலைக் கல்லூரிப் பகுதிகளில் சுகாதாரக் கேடு விளைவிப்பதால் எண்ணெய் சுத்திகரிப்பின்போது வரும் நாற்றத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2002 ஏப்ரல் 4

விருத்தாசலம் நகரில் அரசுக்குச் சொந்தமான டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தற்போது நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது. எனவே, எவ்விதத் துர்நாற்றமும் வெளிவர வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கோவிந்தசாமி (குறுக்கீடு), திரு. ஜி.கே. மணி,

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரிலே டான்காப் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளிவரக்கூடிய கழிவுப் பொருளாலே அங்கே துர்நாற்றம் இருக்கிறது. துர்நாற்றம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை மணி, தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** ஆகவே, மீண்டும் அது திறக்கப்படுகிற நேரத்திலே வெளியேற்றப்படக் கூடிய அந்தக் கழிவுப் பொருளைச் சுத்திகரிப்புச் செய்து அங்கே நாற்றம் இல்லாமல் இயங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை இயக்கப்படுவதற்குமுன், துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான சாதனங்களைப் பொருத்தி இயக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி டான்காப் நிறுவனத்தை நிரந்தரமாக மூடுவதற்கு 30-11-2001 நாளிட்ட அரசாணை எண் 345-ல் தக்க உத்தரவை அரசின் வேளாண்மைத் துறை பிறப்பித்துள்ளது. எனவே, இனிமேல் மேற்படி நிலையத்திலிருந்து எவ்விதத் துர்நாற்றமும் வர வாய்ப்பு இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. பி.எஸ். அருள், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**93—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

***7414—திரு. பி.எஸ். அருள்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2002 ஏப்ரல் 4]

(அ) புவனகிரி தொகுதியில் செயல்படாத பால் குளிரூட்டும் நிலையத்தைச் செயல்பட வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சிறப்பு வாய்ந்த மாமன்றத்தில் பேசுகிற வாய்ப்பளித்த, நானும், என் குடும்பமும் போற்றி வணங்கும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களிலே என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

**விடை—**

(அ) புவனகிரி தொகுதியில் செயல்படாத பால் குளிரூட்டும் நிலையம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்குப் பதில் எழவில்லை.

முற்பகல் 11-05

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளில் 50 ஆண்டு கால அரசியல் அனுபவம் பெற்றுவிட்ட அன்புத் தாயை வணங்குகிறேன். எனது புவனகிரி தொகுதி முற்றிலும் கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியில் சேத்தியாத்தோப்பு பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1984 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் கடந்த ஆட்சியில் நிர்வாகச் சீர்கேட்டால் பாதிப்படைந்து, நலிவடைந்துள்ளது. சேத்தியாத்தோப்பு பகுதியைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. அங்குள்ள கிராம மக்கள், குறிப்பாகப் பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கி, பால் கொள்முதல் செய்வதன் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டுமென்ற இலட்சியத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்ட அந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தில் இன்றைய சூழ்நிலையில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. கொள்ளளவை 30 ஆயிரம் லிட்டராக

உயர்த்துவது கழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்தின் பால் குளிர்விக்கும் திறன் அளவீடான 10 ஆயிரம் லிட்டர் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையிலே 30 ஆயிரம் லிட்டராக அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக திட்டப் பணிகள் மேற்கொள்ள, ஒன்றிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குளிரூட்டும் நிலையத்தினை முழுத்திறனுடன் தொடர்ந்து நல்ல முறையிலே இயக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விழுப்புரம் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. கோவை தங்கம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**94—**

### சுற்றுலாத் தலம்

***899—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் உள்ள புல்மலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி என் கன்னிப் பதிலைத் தருகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் உள்ள புல்மலை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளதால்



அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க இயலாது. மேலும் சுற்றுலாத் துறை, எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாயந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி, நிதி ஆதாரங்களுக்கேற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் உள்ள இந்தப் புல்மலை, பார்ப்பதற்கு மிகுந்த அழகு வாய்ந்த இடமாகும். குறிப்பாக, இந்தப் புல்மலையைப் போல் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை. அந்த அளவுக்கு ஆள் உயரம் இந்தப் புல்மலை வளர்ந்திருக்கிறது. இந்தப் புல்மலையைச் சுற்றுலா மையமாக அமைத்தால், அங்கே ஏராளமான பொது மக்கள் அதைப் பார்ப்பதற்கு மிகவும் விரும்புகிறார்கள். அந்தப் புல்மலை இயற்கை அழகு வாய்ந்த, மிகவும் நல்ல அற்புதமான இடமாகும். ஸ்விட்சர்லாந்திற்கு அடுத்தபடியான அழகு வாய்ந்தது புல்மலை என்று சொல்லுகிறார்கள். இந்தப் புல்மலையை அரசு சுற்றுலாத் தலமாக அமைத்தால் --- அரசுக்கு மிகுந்த வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நுழைவுக் கட்டணம் வசூல் செய்யலாம். அங்கே வனத் துறையினர் வன விலங்குகளுக்குத் தொல்லைகள் ஏற்படும் என்பதற்காக அந்த இடத்தை மூடி வைத்திருக்கின்றார்கள். ஆனால், அதில் உண்மை இல்லை. புல்மலையைப் பார்க்க மக்கள் ஏராளமாக அந்தப் பகுதிக்கு வந்து திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வால்பாறையைப் பொறுத்தவரையில் யானை, சிறுத்தைப் புலி போன்ற வன. விலங்குகள் அன்றாடம் எஸ்டேட் பகுதியிலே குடியிருக்கின்ற வீடுகளுக்கு அருகிலே வந்து செல்கின்ற வண்ணம் இருக்கின்றன. ஆகவே, அதைக் காரணம் காட்டி புல்மலையை ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தங்கம், என்ன செய்ய வேண்டும்?

**திரு. கோவை தங்கம்:** புல்மலையை சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வால்பாறை தாலுக்காவில்

வால்பாறையிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இந்திரா காந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசியப் பூங்காவில் வால்பாறை காப்பு வனத்திற்கு உட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் அக்காமலைப் பகுதியில் புல்மலை அமைந்துள்ளது. இதன் பரப்பு 3122.50 ஹெக்டேர் ஆகும். இந்தப் பகுதி அரசு ஆணை எண் 58, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, நாள் 23-1-1989-ன்படி தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்புல்மலைப் பகுதி வால்பாறை தாலுக்காவில் ஒரு முக்கிய நீர்வளப் பகுதியாகவும், வற்றாத நீரோடைகள் உள்ளதாலும் மனித நடமாட்டத்தினால் ஏற்படும் பாதிப்பு எதுவும் இல்லாத சோலைப் பகுதியாக உள்ளதாலும் இங்கு அரிய வன உயிரினங்களான வரையாடுகள் மற்றும் நமது தேசிய விலங்கான புலி, மான், காட்டு எருமை, சிறுத்தை, யானை போன்ற மிருகங்கள் உள்ளன. மேலும், புல்மலைப் பகுதிக்குச் செல்வதற்குப் போதுமான சாலை வசதி கிடையாது. மேலும் இப்பகுதி அடர்ந்த காடுகளைக் கொண்டதாக உள்ளது. இப்புல்மலைக்கு கால்நடையாக ஒற்றையடிப் பாதையில் சுமார் 10 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டும். இப்புல்மலைப் பகுதி கோவை மாவட்டத்திலுள்ள ஒரு முக்கிய நீர்ப்பிடிப்பு மையமாக உள்ளது. மேலும், இப்பகுதியில் வன உயிரினங்கள், குறிப்பாக யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும், இப்பகுதிக்குச் சென்று வர சாலை வசதிகள் இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியாக உள்ளதாலும், தேசியப் பூங்காவாக அரசால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்புல்மலைப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியானதால் சுற்றுலாத் தலமாக அறிவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்று இந்த அவைக்குக் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்

### (அ) பிரதமர் தலைமையில் நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்த விவரம்

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்தில் ஒரு விளக்கத்தை நான் பெற விரும்புகிறேன்.

National Water Policy என்ற ஒரு கொள்கையை வகுப்பதற்காக 3 தினங்களுக்கு முன்னால் National Water Resources Council கூட்டம் ஒன்று பிரதமர் தலைமையிலே டெல்லியிலே நடைபெற்றது. National Water Policy-ஐ வகுப்பதில் நம்முடைய அரசுக்கும், அது தி.மு.க. அரசாக இருந்தாலும், அ.இ.அ.தி.மு.க. அரசாக இருந்தாலும் ஒரே கொள்கைதான். அதிலே மூன்று விவகாரங்களிலே, National Water Policy-ஐ வகுப்பதிலே அவர்களுடன் நாம் மாறுபட்டுநின்றோம். Guide-line for Inter-State Water dispute என்பதிலும், அதாவது பங்கிட்டுக்கொள்வதிலும், Ground water tapping, சர்க்காரியா கமிஷன், டிரிபினல் அமைப்பதிலும் நமது இந்த இரண்டு ஆட்சியிலேயும் ஒரே கருத்தைச் சொல்லியிருந்தோம். அதனால்தான் பல ஆண்டுகளாக ஒரு National Water Policy-ஐயே வகுக்க முடியவில்லை. ஆனால், இப்போது ஒரு consensus—கருத்து ஒற்றுமை வந்தது என்று தெரிவித்து இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது, நம் அரசினுடைய கருத்தை அவர்கள் முழுக்க ஏற்றுக் கொண்டார்களா அல்லது ஏதாவது விட்டுவிட்டிருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர், இப்போது இல்லாவிட்டாலும் பரவாயில்லை, இந்த அவையிலே ஓர் அறிக்கையாக அவர்கள் தெளிவித்தால் அது இந்த அவைக்கும் நல்லது, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் இருக்கும் என்ற காரணத்தினால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள், மூலம், மாண்புமிகு அமைச்சர் அவர்களை இதுகுறித்து விரிவான அறிக்கை ஒன்றை இந்த அவையிலே வைக்கும்படிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு அறிக்கை எதுவும் இது தொடர்பாக வைக்க முடியுமா?

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த விவரங்கள் அடங்கிய அறிக்கை பெறப்பட்டு, கூடிய விரைவில் சபையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2002 ஏப்ரல் 4

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) வடபழனியில் ஒரு பெண்ணைக் கொலை செய்து, வீட்டிலிருந்த பணம், நகைகளைக் கொள்ளையடித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வடபழனியில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணைக் கொலை செய்து, வீட்டிலிருந்த பணம், நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், திரு. எம். ராம்குமார், திரு. இ. புகழேந்தி, திரு. எ.வ. வேலு ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஜெ. அன்பழகன், திரு. ஐ. கணேசன், திரு. லா. சந்தானம் ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. டி. மணி, திரு.ஜே. ஹேமச்சந்திரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஜி.கே. மணி ஆகியோரும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறேன். தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை இதுபற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு அழைக்கிறேன். திரு. அன்பழகன்.

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் தொகுதி வடபழனி பகுதியில் நேற்றைக்கு முந்தையதினம் காலையிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. மிகவும் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற அழகர் பெருமாள் கோவில் தெரு, அடுக்குமாடிக் குடியிருப்புகளும் மற்றும் குடியிருப்புகள் அடங்கிய அந்தப் பகுதி தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் நடந்து செல்கிற வகையிலே இயங்கிக் கொண்டிருக்கிற தெரு. அங்கே ஒரு வீட்டிலே ஒரு தாயாரும், அவருடைய மகளும் வசித்து வருகிறார்கள்; பத்மாவதி என்ற அந்தத் தாயாரும், அவர் மகள் சுமதி என்பவரும். ஆசிரியை வேலை செய்து கொண்டிருக்கிறார் அந்தத் தாயார். காலை நேரத்தில் அவர் ஆசிரியை வேலைக்குச் சென்ற பிறகு வீட்டிலே தனியாக இருந்த அவருடைய மகள சுமதியை—கொள்ளை அடிப்பதற்காக, அந்த வீட்டிற்குள் புகுந்த சமூக விரோதிகள், அந்த வீட்டிற்குள் புகுந்து, அங்கே இருக்கின்ற சாமான்களையும், இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பொருட்களையும், நகைகளையும் அவர்கள் கொள்ளை அடித்தது மட்டுமல்லாமல், அந்தப் பெண்ணை--Tape recorder wire-ஆல் கழுத்தை நெறித்துக் கொலை செய்திருக்கிறார்கள். கொலை, கொள்ளை என்கிற அளவுக்கு அந்தப் பகுதியிலே நடைபெற்றிருக்கிறது. அதே தினத்திலே, பாண்டி பசார் பகுதியிலே...



2002 ஏப்ரல் 4]

*முற்கபல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த நிகழ்ச்சிதான். அதோடு முடியுங்கள். அதற்கு விளக்கம் சொல்வார்கள்.

**திரு. ஜெ. அன்பழகன் :** அந்த நிகழ்ச்சியிலே அன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்த இல்லத்திற்குள் அங்கே கொலையும், கொள்ளையும் நடைபெற்றிருக்கிற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் இன்றைக்கு ஒரு பதட்டமான சூழ்நிலையிலே வாழ்த்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறையைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை, இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற உதவி ஆணையாளர், எந்த நேரம் சென்றாலும் அங்கே காவல் நிலையத்திலே இருப்பதில்லை. பொதுவாக, சமூக விரோதிகள்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அவாகள் இன்றைக்கு வேறு பகுதியிலே தங்களுடைய கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். ஆகவே, காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய அக்கறையின்மையின் காரணமாகத்தான் இது அந்தப் பகுதியிலே நடைபெற்றிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூற விரும்புகிறேன். காரணம், ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற என்னையே அங்கேயிருக்கிற காவல் துறை உதவி ஆணையாளர். நான் பார்க்கச் சென்றால் சந்திப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த நிகழ்ச்சியைச் சொல்லுங்கள். முதலமைச்சர் விளக்கம் சொல்வார்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** என்ன காரணம் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற காவல் துறையைச் சேர்ந்த அந்த ஆய்வாளர்கள், உதவி ஆணையாளர்கள் இன்றைக்கு மக்கள் பிரச்சினையைக் கவனிப்பதை விட்டுவிட்டு, வேறு பிரச்சினையிலே கவனம் செலுத்துகிற காரணத்தால், இப்படிப்பட்ட கொலையும், கொள்ளையும் ஒரு இல்லத்திலே நடைபெறுகிறது. மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. ஆகவே, இந்த அரசு என்ன செய்ய இருக்கிறது என்பது குறித்து நான் உங்கள் மூலமாக அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, சென்னை, ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் தட்டச்சராகப் பணியாற்றி வந்த சுமதி என்ற 28 வயதுப் பெண்மணி, தனது தாயார் திருமதி பத்மாவுடன் சென்னை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 4

வடபழனியில் உள்ள அழகர் பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்துள்ளார். திருமதி சுமதிக்கு 1995 ஆம் ஆண்டு திரு. கோவிந்தராஜ் என்பவருடன் திருமணம் நடைபெற்று, பின்னர், கடந்த ஆண்டு தனது கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்று தனது தாயாருடன் வசித்து வந்துள்ளார். கொலை செய்யப்பட்டு இறந்து போன சுமதியின் தாயார் திருமதி பத்மா, அவர் வசித்து வரும் வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

சம்பவ தினமான 2-4-2002 அன்று காலை 9-00 மணியளவில், திருமதி பத்மா பணி நிமித்தமாக பள்ளிக்கூடம் சென்றுள்ளார். சுமதி மட்டும் வீட்டில் தனியாக இருந்துள்ளார். காலை சுமார் 10-00 மணியளவில், சுமதியின் அலுவலகத்தில் பணிபுரியும் முனுசாமி என்பவர், சுமதியின் வீட்டிற்கு வந்து, கதவு தாழ்ப்பாள் போடப்பட்டு இருப்பதைப் பார்த்துள்ளார். உடனடியாக அவர் அக்கம் பக்கத்தில் விசாரிக்க, அதனைக் கவனித்த பக்கத்து வீட்டுப் பெண் சந்தேகம் அடைந்து, சுமதியின் தாயார் திருமதி பத்மாவிற்குத் தகவல் தெரிவித்துள்ளார். திருமதி பத்மா காலை 10-30 மணியளவில் வீட்டிற்குத் திரும்பி வந்து பார்த்துள்ளார். அப்போது சுமதி படுக்கை அறையில் பாலிதீன் தாளின் மூலம் முகம் மூடப்பட்ட நிலையில் கிடந்திருக்கிறார். திருமதி பத்மா, தனது மகள் சுமதியின் முகத்தை மூடியிருந்த பாலிதீன் தாளை அகற்றிவிட்டு, சிறிது தண்ணீர் கொடுக்க முயற்சித்துள்ளார். ஆனால், சுமதியினால் தண்ணீர் அருந்த முடியவில்லை. அப்போதுதான் மகள் சுமதி இறந்துள்ளார் என்ற விவரம் அவருக்குத் தெரிய வந்திருக்கிறது. மேலும், சுமதி அணிந்திருந்த ஒன்றரைப் பவுன் தங்கச் செயின், ஒன்றே முக்கால் பவுன் ஜிமிக்கி, ஒன்றரைப் பவுன் வளையல், மோதிரம் ஒன்று மற்றும் ரொக்கம் சுமார் ரூ.10,000/- ஆகியவை திருடு போய் உள்ளன என்பது தெரிய வந்திருக்கிறது. திருமதி பத்மா உடனடியாக வடபழனி காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்க, காவல் துறையினர் விரைந்து வந்து சம்பவ இடத்தில் விசாரணை நடத்தியுள்ளனர். சம்பவ இடத்திற்கு 'இந்து' எனும் போலீஸ் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு, குற்றவாளி பற்றித் துப்புத் துலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், விரல் ரேகை நிபுணர்களும் மற்றும் தடய அறிவியல் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டு, அவர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு தடயங்களைச் சேகரித்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து வடபழனி காவல் நிலைய குற்ற எண் 576/2002 என்ற எண்ணில், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 302 மற்றும் 380-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது.



2002 ஏப்ரல் 4] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11-20

விசாரணை பல கோணங்களில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இறந்து போன சுமதியின் சகோதரர்கள் மற்றும் அவரை மணந்து அவரிடமிருந்து விவாகரத்துப் பெற்ற கணவர் ஆகியோரிடம் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முதன்முதலில் சம்பவ இடத்தைப் பார்த்த திரு. முனுசாமி இதுவரை போலீஸாரின் விசாரணைக்கு அகப்படவில்லை. இதனால் அவரைக் கண்டுபிடித்து விசாரணை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் மற்றும் இதர மூத்த காவல் துறை அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு விசாரணை அதிகாரிகளுக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி வருகிறார்கள். இறந்து போன சுமதியின் பிரேதப் பரிசோதனை 3-4-2002 அன்று சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் நடைபெற்றுள்ளது. சுமதியின் உடற்கூறுகள் வேதியல் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த வழக்கில் துரிதமாகத் துப்புத் துலக்கி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, 3 உதவி ஆணையர்கள் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தீவிரப் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குற்றவாளிகள் விரைவில் பிடிக்கப்படுவார்கள்.

இதுபோன்ற ஆதாயத்திற்கான கொலைச் சம்பவங்களும், கொலைக் குற்றங்களும் நடைபெறுவதைத் தடுக்கத் தக்க நடவடிக்கை எடுக்க சென்னை மாநகரக் காவல் துறை ஆணையருக்கு நான் ஆணையிட்டுள்ளேன். குற்றங்கள் நிகழாமல் தவிர்க்கும் பொருட்டு, ஏற்கெனவே குற்ற நடத்தையுடையவர்கள் பலர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் பிடிக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், இது மாதிரியான குற்றங்கள் நிகழாமல் தடுக்க, மிகவும் விழிப்புடன் இருந்து பணியாற்றுமாறு காவல் துறையினருக்குத் தக்க அறிவுரை வழங்கியுள்ளேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

## (ஆ) எழும்பூர் மார்ஷல் சாலை புனித அந்தோணியார் தேவாலயத்தில் 29-3-2002 அன்று உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எழும்பூர் தொகுதியில் மார்ஷல் சாலையில் அமைந்துள்ள புனித அந்தோணியார் தேவாலயத்தில்

கடந்த மார்ச் 29 ஆம் தேதியன்று நான்கு உண்டியல்கள் கொள்ளை அடிக்கப்பட்டது குறித்து விவாதிக்க தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி ஆகியோர், ஒத்திவைக்கக் கோரி அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் திரு. பரிதி இளம்வழுதி அவர்களைச் சுருக்கமாக விளக்குமாறு அழைக்கிறேன்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 29ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியிலுள்ள மார்ஷல் சாலையிலே இருக்கின்ற புனித அந்தோணியார் கோயிலிலே உண்டியல் கொள்ளை நடைபெற்று இருக்கிறது. இந்தக் கொள்ளை திட்டமிட்டே நடத்தப்பட்டதுபோலத் தெரிகிறது. காரணம், பெரும்பாலும் தேவாலயங்களிலே தினந்தோறும் மணி அடிப்பார்கள். ஆனால், அந்தப் புனித வெள்ளிக்கிழமையன்று மணி அடிக்க மாட்டார்கள். இதை நன்கு தெரிந்த கொள்ளையர்கள் — அன்று இரவு முழுவதும் ஜெபக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது — கூட்டத்தோடு கூட்டமாக ஊடுருவி உள்ளே சென்றிருக்கிறார்கள். அதன் பிறகு, அந்த மணி இருக்கின்ற இடத்திலே சென்று அவர்கள் பதுங்கியிருக்கின்றார்கள். பிறகு அவர்கள் கயிற்றின் மூலம் — மக்கள் எல்லாம் வெளியே சென்றுவிட்டு, தேவாலயம் பூட்டப்பட்ட பிறகு, கயிற்றின் மூலம் — இறங்கி அங்கே இரண்டு உண்டியல்கள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்ஷல் சாலையிலே உள்ள அந்தோணியார் ஆலய உண்டியல் கொள்ளை; அதோடு விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி விளக்குவார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மார்ஷல் சாலையிலே உள்ள அந்தோணியார் ஆலயத்தின் உண்டியல் கொள்ளை அடிக்கப்பட்டது. அதுகுறித்து நீங்கள் விளக்கம் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள் அதுபற்றி அறிக்கை கொடுப்பார்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** ஆக, இது தொடர்பாக, இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு**

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்ஷல் சாலையோடு உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மற்றவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. தொடர்புடைய சம்பவத்தைப் பற்றி அவர் சொன்ன விளக்கத்தைத் தவிர, மற்றவைகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புதுப்பேட்டை, மார்ஷல் சாலையில் உள்ள தூய அந்தோணியார் கத்தோலிக்க கிருத்துவ தேவாலயத்தின் பாதிரியார் திரு. ஏ. விஜய்கிரன் என்பவர் 30-3-2002 அன்று காலை சுமார் 7 மணி அளவில் எழும்பூர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்துள்ளார். அந்தப் புகாரில், 29-3-2002 அன்று இரவு, புனித வெள்ளி பிரார்த்தனையை முடித்த பின்பு, இரவு 8-30 மணி அளவில் ஆலயத்தின் கதவுகளை மூடிவிட்டுச் சென்றதாகவும், மறுநாள் 30-3-2002 அன்று காலை 5-00 மணியளவில் தேவலாயத்தின் கதவுகளை ஆலய ஊழியர் திறந்து பார்த்தபோது, ஆலயத்தின் உள்ளிருந்த ஐந்து உண்டியல்கள் உடைக்கப்பட்டிருந்ததாகவும் அதில் இருந்த ரூபாய் நோட்டுகள் மட்டும் திருடப்பட்டு இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

*முற்பகல் 11-25*

இந்தப் புகாரைப் பெற்றுக்கொண்ட காவல் துறையினர், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 457 மற்றும் 380-ன்கீழ், எஃப்-2, எழும்பூர் காவல் நிலைய குற்ற எண் 311/2002 என்ற எண்ணில் வழக்கு ஒன்றினைப் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். உடனடியாகக் கைரேகை நிபுணர்களும், தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்து உள்ளனர். மேலும் மோப்ப நாய்ப் பிரிவின் உதவியும் பெறப்பட்டு, இது தொடர்பாகப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது.

புலன் விசாரணையில், களவு போன ரூபாய் நோட்டுகளின் மதிப்பு சுமார் 15 ஆயிரம் இருக்கலாம் என்றும், இந்த உண்டியல்கள் மாதம் ஒரு முறை திறக்கப்பட்டு, காணிக்கைப் பணம் சேகரிக்கப்பட்டு வந்தது என்றும் பாதிரியார் தெரிவித்துள்ளார்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2002 ஏப்ரல் 4

இதற்கென காவல் துறையின் தனிப்படை அமைக்கப்பட்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. குற்றவாளிகள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று தெரிவித்து அமைகிறேன்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை

### கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுங்கக் கட்டண வசூல்

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அவைக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிழக்குக் கடற்கரைச் சாலையை நவீனப்படுத்தும் பணி மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில், அதாவது 1992 ஆம் ஆண்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். சமீபத்தில் அதனை மேம்படுத்தும் பணி மற்றும் நவீனப்படுத்தும் பணி ஆகியவை முடிக்கப்பெற்று, இந்தச் சாலை கடந்த 24-3-2002 அன்று முதல் கட்டண விதிப்புடன் மக்கள் உபயோகத்திற்கு விடப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையிலும், அதன் பின்னர், பாண்டிச்சேரி வரையிலும் செல்கின்ற இந்தக் கிழக்குக் கடற்கரைச் சாலையை TIDCO மற்றும் Integrated Leasing and Financial Services ஆகிய இரண்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியோடு உருவாக்கி, இயக்கி, ஒப்படைப்பது என்ற அடிப்படையில் தனியார் துறையினால் தொடங்கி முடிக்கப்பட்டு, தற்போது நிருவகிக்கப்பட்டு வரும் பணி ஆகும். இந்தத் திட்டத்திற்காக முதலீடு செய்த இந்தச் சாலையின் உரிமையாளரான ஒரு நிறுவனம், இந்தச் சாலையைப் பயன்படுத்துகின்ற வாகன உபயோகிப்பாளர்களிடமிருந்து கட்டண வசூல் மூலம் முதலீட்டினைப் பெறுவது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல் முறையே ஆகும். இதுபோலவே நாட்டின் பல பாகங்களிலும், குறிப்பாக நவீனப்படுத்தப்பட்ட மும்பை-பூனா நெடுஞ்சாலை, நவீனப்படுத்தப்பட்ட வதோதரா-ஹலோல் நெடுஞ்சாலை ஆகியவை



2002 ஏப்ரல் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

உருவாக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இன்னும் சொல்லப் போனால், கடந்த தி.மு.க. ஆட்சியில் கோயம்புத்தூர் புறவழிச் சாலை மற்றும் நவீனப்படுத்தப்பட்ட கரூர் பாலம் ஆகியவை இதுபோன்ற தனியார் துறையின் கூட்டு முயற்சியினால்தான் உருவாக்கப்பட்டு தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றில் விதிக்கப்பட்டுள்ள கட்டணங்களைக் காட்டிலும் தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலையில் வசூலிக்கப்படும் கட்டண வீதங்கள் மிக, மிகக் குறைவு என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். குறிப்பாக, கார் மற்றும் ஜீப் முதலிய வாகனங்களுக்காக, கோயம்புத்தூர் புறவழிச் சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு 72 பைசாவாகவும், மதுரை மேம்பாலம் மற்றும் புறவழிச் சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு 99 பைசாவாகவும், கரூர் பாலத்தில் ஒரு கிலோ மீட்டருக்கு 14 பைசாவாகவும் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. மேலும் நவீனப்படுத்தப்பட்ட மும்பை-பூனா நெடுஞ்சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு 85 பைசாவாகவும், நவீனப்படுத்தப்பட்ட வதோதரா-ஹலோல் நெடுஞ்சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு 94 பைசாவாகவும் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. ஆனால், சென்னையை அடுத்துள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையில் இருந்து ஈப்பு மற்றும் சீருந்துக்கு, ஒரு கிலோ மீட்டருக்கு, மிகவும் குறைவாக 42 பைசா என்ற அளவில்தான் கட்டணம் விதிக்கப்பட்டு வருகிறது. மேலும், மினி வேன், டெம்போ முதலிய இலகு வாகனங்களுக்கான கட்டண வீதங்கள் கோயம்புத்தூர், மதுரை, கரூர் ஆகியவற்றில், ஒரு கிலோ மீட்டருக்கு, முறையே ரூபாய் 1.08-ம், ரூபாய் 1.58-ம், ரூபாய் 0.34-ம் என்ற அளவில் இருக்கும்போது, கிழக்குக் கடற்கரைச் சாலையில் சிறு வணிக ரக வாகனங்களுக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 52 பைசா மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதுபோன்று, கனரக வாகனங்களான பேருந்து மற்றும் லாரி ஆகியவற்றுக்கான கட்டணங்களை ஒப்பிட்டுப் பார்த்தாலும், கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஒரு கிலோ மீட்டருக்கு வசூலிக்கப்படுகின்ற கட்டண விகிதம் மிக, மிகக் குறைவாக உள்ளது. கோயம்புத்தூர், மதுரை மற்றும் கரூர் ஆகிய இடங்களில் ஒரு கிலோ மீட்டருக்கு, முறையே ரூபாய் 2.13-ம், ரூபாய் 1.98-ம், ரூபாய் 0.41-ம் என்ற அளவில் முந்தைய தி.மு.க. ஆட்சியினால் கட்டணங்கள் விதிக்கப்பட்டன. ஆனால், தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலையில் பேருந்துக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 62 பைசாதான் கட்டணமாக விதிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், இரண்டு சக்கர வாகனங்கள், டிராக்டர்கள், மோட்டாரால் இயங்காத வண்டிகள் மற்றும் பொது உபயோகத்திற்குப் பயன்படும்

வாகனங்களான பால் வண்டி, தீயணைப்பு வண்டி, தபால் வண்டி போன்ற வாகனங்களுக்கு, கட்டணம் வசூலிப்பதிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

*முற்பகல் 11-30*

மேலும், இதர சாலைகளில் இல்லாத பல சிறப்பு அம்சங்கள் கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ளன. அவையாவன— பெரும்பான்மையான சாலை ஒலிக் குறீயிடுகள், சாலையின் மத்தியில் அடையாளக் கோடுகள் மற்றும் பூனைக் கண் பிரதிபலிப்பான்கள், மத்திக் கோடு மற்றும் சாலையோரக் கோட்டினை ஒளி பிரதிபலிக்கும் வண்ணத்தைக் கொண்டு தெளிவுபடுத்திக் காட்டுதல், விபத்துத் தடுப்பான்கள்.

மேலும், கீழ்க்காணும் மதிப்புக் கூட்டப்பட்ட (Value added) சேவைகளும் அளிக்கப்படுகின்றன. 24 மணி நேர நோயாளிகள் ஊர்தி- ஆம்புலன்ஸ்; 24 மணி நேர சாலைக் கண்காணிப்புப் பணி; ஒவ்வொரு 3 கிலோ மீட்டர் இடைவெளியிலும் உதவிக்கு அழைக்கும் தொலைபேசி வசதி; பழுதுபட்ட வாகனங்களை உடனுக்குடன் அகற்றும் வசதி; சாலையோர வசதிகள் மற்றும் இயற்கைக் காட்சிகள் காணும் இடங்கள்; நவீனப் பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பயணிகள் தங்கும் இடங்கள்; சாலையின் இரு மருங்கிலும் மரம் மற்றும் செடி வளர்ப்பு.

தற்போதைக்கு நாட்டிலேயே மிக நீண்ட சுங்கச் சாலையான கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஓட்டுநர் வசதி, சாலைப் பாதுகாப்பு, வாகன இயக்கச் செலவு, பயண நேரக் குறைவு, நேரத்தில் சிக்கனம் மற்றும் சேமிப்பு முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இச்சாலையைத் தினமும் பயன்படுத்துவோரின் நியாயமான கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு சுங்கக் கட்டணத்தில் 10 முதல் 40 சதவிகிதம் வரை தள்ளுபடிகளும், சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. திரும்பி வரச் சலுகை, தினசரி அட்டை, மாதாந்திர அட்டை மற்றும் 50 முறை சென்று வரும் அட்டை முதலிய பல வழிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சுங்க வரி விதிப்பில்கூட சிறப்புக் கவனம் செலுத்தி, இது இந்திய நாட்டிலும், இதற்கு முந்தைய ஆட்சியில் தமிழ்நாட்டிலும் வாங்கப்பட்ட சுங்க வரியைக் காட்டிலும், எந்த வகையிலும் பொதுமக்களையும், குறிப்பாக, கீழ்த்தட்டு,





நடுத்தட்டு மக்களையும் பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டார்கள் என்பதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்பதனைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir, I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த (குறுக்கீடு) சரி, திரு. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**THIRU C. GNANASEKARAN:** Speaker Sir, I, don't want to even go into the merits of this one. Already I had given notice of an adjournment Motion under Rule 56. Yesterday itself, the reply was ready. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் வேறொரு கொஸ்டினைக் கேட்க, அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தர ஆரம்பித்தார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புவதெல்லாம், ஏற்கெனவே நாங்கள் 56 ஆவது விதிப்படி கொடுத்திருக்கக்கூடிய அந்தப் பொருள் குறித்து, எங்களையும் நீங்கள் பேச அனுமதித்துவிட்டு, பிறகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைச் சொல்லியிருந்தால், ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள் விழிப்போடு செயல்படுகிறார்கள் என்ற எண்ணமாவது மக்களுக்கு வரும். இப்போதோ, நாங்கள் எதுவுமே செய்யவில்லை என்பதுபோல ஒரு தோற்றம் வெளியிலே வந்துவிடும். நாங்கள் ஏற்கெனவே அறிவிப்புக் கொடுக்காத நிகழ்வுகள் இருக்குமேயானால் அமைச்சர் அவர்கள் 110 ஆவது விதிப்படி நிச்சயமாக அவைக்கு அறிக்கை வைத்திருக்கலாம். (மணியடிக்கப்பெற்றது) நான் இதைப் பற்றிப் பேசி உள்ளே போக விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பு, சிறப்புக் கவன ஈர்ப்பு எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இது ரொம்ப முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி, முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக 'இந்து' பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருந்தது. அதனால்தான் அமைச்சர்

[பேரவைத் தலைவர்] [2002 ஏப்ரல் 4

அவர்கள் 110ஆவது விதியின்கீழ் அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். மற்றவை, சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கக்கூடிய கவன ஈர்ப்பு ஆகியவையெல்லாம் உரிய முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படுகின்றன. பேரவை விதி...

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,...

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே ...

**திரு. கே. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே ...

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விதி 56-ன்கீழ்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதி, 110ஆவது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் இதை வழங்கியிருக்கிறார்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய கவன ஈர்ப்பு, சிறப்புக் கவன ஈர்ப்பு எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. (குறுக்கீடு) எஸ்.ஆர்.பி. அவர்கள்.

*முற்பகல் 11-35*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்பு முன்னறிவிப்போ உறுப்பினர்களாலே கொடுக்கப்பட்டிருந்தால், அந்தப் பிரச்சினையை அவர்கள் எழுப்பவிட்டு, பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும். எனவே யாரும் கேட்காத ஒன்றுக்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது விளக்கம் கொடுக்க வேண்டியிருக்கின்ற நேரத்திலேயும், கொள்கை பற்றிச் சொல்லும்போதும் மட்டும் 110-ஐப் பயன்படுத்தினால் முறையாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அதையே நாம் நடைமுறையாகப் பின்பற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்காலத்திலே நீங்கள் சொன்ன ஆலோசனை பரிசீலிக்கப்படும். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி, நீங்கள் உட்காருங்கள்.



## 5. கவன ஈர்ப்பு

### (அ) வேலூரில் இன்னும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் இன்னும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று* அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

அரசாணை (நிலை) எண் 257, மக்கள் நல்வாழ்வு, நாள் 26-7-2000-ல் வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த அரசு ஆணையிட்டது. இந்தக் கல்லூரியை வேலூரிலுள்ள களிஞ்சூர் என்னுமிடத்திலுள்ள 45.04.5 ஹெக்டேர் நிலத்தில் ஏற்படுத்தலாம் என முடிவு செய்து மைய அரசின் ஒப்புதல் வேண்டி, செயற்குறிப்பு 26-7-2000-ல் அனுப்பப்பட்டது. மைய அரசு 22-3-2001 நாளிட்ட கடிதத்தில், கல்லூரி அமைக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலம், வேலூர் பெண்ட்லேண்ட் மருத்துவமனையிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது என்று கூறி, மாநில அரசின் கருத்துருவைத் திருப்பி அனுப்பிவிட்டது.

2. எனவே, பென்னாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள டி.பி. சானடோரியம் மருத்துவமனை வளாகத்தில் உள்ள 35.17 ஏக்கர் நிலம் ஏற்றதாக இருக்கும் எனக் கருதப்பட்டது. இதற்கிடையில் மைய அரசிற்கு புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான விண்ணப்பம் அனுப்பக் கடைசித் தேதி 31-8-2001 ஆக இருந்ததால், மீண்டும் இதற்கான விண்ணப்பம் 30-8-2001 அன்று மைய அரசிற்கு அனுப்பப்பட்டது.

[2002 ஏப்ரல் 4

3. மைய அரசு, 13-11-2001 நாளிட்ட கடிதத்தில் அடுக்கம்பாறை கிராமத்திலுள்ள (பென்னாத்தூர்) டி.பி. சானடோரியம் நிலத்திற்கு இடையே பிரதான சாலை உள்ளதால், இந்த நிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்று கூறி, மாநில அரசின் கருத்துருவைத் திருப்பி அனுப்பியுள்ளது.

4. இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதற்கான புதிய விண்ணப்பத்தை விரைவில் அனுப்புவதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு செய்து வருகிறது.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஒரு வகையில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசு நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டு, இப்போது டெல்லியிலே இருக்கக் கூடிய Medical Council of India-வுடன் பலமுறை தொடர்பு கொண்டிருப்பது குறித்து அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே, வேலூரிலே ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்காக 29-7-1998 ஆம் தேதியே அரசு ஆணை 426 போடப்பட்டு, ஒரு Special Officer-ஐப் போட்டார்கள். பிறகு 26-7-2000 அன்று formal orders-for starting Medical College-ஒரு G.O. போட்டார்கள். பிறகு, வேலூரிலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையிலே, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்று பெரிய Board-ஐப் போட்டுவிட்டார்கள். ஆனால், இன்று வரை அங்கே மருத்துவக் கல்லூரி வரவில்லை. அதிலே Medical Council of India சில சட்ட திட்டங்களைச் சொல்லி, எப்படியோ இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய வேலூரைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.டி. சண்முகம் அவர்களே மத்தியிலே அந்தத் துறையினுடைய அமைச்சராகக்கூட இருந்தார்கள். நான்கூட அவரிடம் பல முறை முறையிட்டேன். நீங்கள் மத்திய அமைச்சராக, Health Minister ஆக இருந்து கொண்டிருக்கிறீர்கள். M.C.I. இப்படித் தேவையில்லாத கேள்விகளையெல்லாம் கேட்டு, இன்னும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இழுத்தடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே நீங்கள் தீர்வு காண வேண்டும் என்று பலமுறை சொல்லியும்கூட, இன்னும்



2002 ஏப்ரல் 4] [திரு. சி. ஞானசேகரன் ]

அதே நிலையில்தான் Medical Council of India செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கடைசியாக, M.C.I. வேறு எந்தத் தப்பும் கண்டுபிடிக்க முடியவில்லை. நடுவிலே ஒரு பிரதான சாலை போகிறது என்ற ஒரு சாக்கைச் சொல்லி, நம்முடைய மனுவை இப்போது மீண்டும் திருப்பியனுப்பியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த Medical Council of India-வுக்குச் சரியான தலைமையும் இல்லை. சரியான நிர்வாகமும் இல்லை என்று கருதுகிறேன். எதைச் சொன்னாலும் கேட்டுக் கொள்ளவே மறுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களே பிரதமரோடு பேசி, Health Minister-உடன் பேசி, இதற்கு—ஏனென்றால் அந்தச் சாலை போடுவது மாநில அரசிற்கு ஒரு பெரிய விஷயமே இல்லை. இந்த 37 ஏக்கரிலே நடுவிலே ஒரு சாலை போகிறது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன்; அந்தச் சாலையை—அந்த 37 ஏக்கரிலே மருத்துவக் கல்லூரி இப்போது தொடங்கப்பட இருக்கக்கூடிய பகுதியில் வரும் சாலை—ஒரு ஓரத்திலே போட்டுவிட்டோம் என்று சொன்னால், அந்தப் பிரச்சினை முடிந்துபோய் விடுகிறது. இதைச் சொல்லியே இப்போது Medical Council of India நம்முடைய இந்தத் திட்டத்தை இப்படி இழுத்தடித்துக் கொண்டிருப்பதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டே எங்களுடைய மாவட்டத்தில் அந்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கவன ஈர்ப்பிலே என்ன Point of order?

**திரு. ஜி.கே. மணி:** குற்றச்சாட்டு சொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை.

**திரு. ஜி.கே. மணி:** அவர் என்ன பண்ணினார் என்று நான் விளக்கம் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, கவன ஈர்ப்பிலே இடையிடையே இப்படியெல்லாம் பேசக்கூடாது. அமைச்சர் விளக்கம் சொல்வார்; மணி, நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை போடுவது, அறிவிப்புச் செய்வது என்ற அந்த அளவோடு கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்தப் பிரச்சினையிலே மெத்தனமாக இருந்தது என்பது மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்யத் தவறிய இதுபோன்ற மக்கள் நல நல்ல காரியங்களில் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவிற்கு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதும் இந்த அறிக்கையிலே தெளிவாக்கப்பட்டு இருக்கிறது.

*முற்பகல் 11-40*

இந்தக் காலதாமத்திற்குக் காரணம், இடப் பிரச்சினை என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்குத் தகுதியில்லாத இடம், களிஞ்சூர் ஏரி; நீர்ப் பிடிப்பு உள்ள பகுதியைத் தேர்ந்தெடுத்ததனாலே முதலிலே அது நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு, வேலூர், பென்ட்லேண்ட் மருத்துவமனையிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு அப்பால் அது இருக்கிறது, என்ற காரணம் காட்டி, அந்த இடம் மீண்டும் நிராகரிக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, பென்னாத்தூர் கிராமத்திலுள்ள அடுக்கம்பாறை, டி.பி. சானடோரியம் மருத்துவமனை வளாகத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்திலே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதை அனுப்பிய பிறகு புதிதாக அவர்கள் ஒரு நிபந்தனையைச் சொன்ன காரணத்தினாலே, மீண்டும் அந்த மனு திருப்பி



அனுப்பப்பட்டுவிட்டது. இப்போது மீண்டும் இரண்டாவது முறையாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு அந்தக் குறைபாட்டையும் சரி செய்து அனுப்பிய பிறகு, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அந்த இடத்தினை ஒரு பிரதான சாலை பிரிக்கிறது என்ற ஒரு காரணத்தைக் காட்டித் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான இடம் 25 ஏக்கர் இருந்தால் போதும். ஆனால், அந்த டி.பி. சானடோரியம் மருத்துவமனையினுடைய வளாகத்தில் மொத்தம் 35.17 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்த பிரதான சாலையைக் கிட்டத்தட்ட 4 ஏக்கர் நிலம்தான் பிரிக்கிறது. எனவே, அதை நீக்கி, மீதமுள்ள அந்த 30 ஏக்கர் நிலத்தை அளவாக வைத்து, காரணம், அது எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல் இருந்து வருவதாலே அந்த இடத்தைத் தேர்வு செய்து, மைய அரசு சுட்டிக்காட்டியுள்ள அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து, மைய அரசினுடைய ஒப்புதலைப் பெறுவதற்காக நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த விண்ணப்பத்தை அனுப்புவதற்கான கடைசி நாள் 31-8-2002. எனவே, அந்தக் கால அளவிற்குள் நிச்சயமாக நம்முடைய அரசு அதற்கான விண்ணப்பத்தை அனுப்பி, விரைவாக அங்கே மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கந்தசாமி அவர்கள் . . .

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாம்தான் கேட்டு விட்டீர்களே, பதிலும் சொல்லிவிட்டாரே!

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-8-2001-க்குள் அந்த மனு அனுப்பப்பட வேண்டும், அனுப்பியாகி விட்டது. 31-8-2001 last date. 30-ஆம் தேதியே comply-பண்ணி our Department has already sent a reply. Now again they have returned the file saying that there is one road in between the Medical College place. இப்போது நாம் கேட்க வேண்டியது என்ன? கடந்த வாரம்கூட

மீண்டும் D.M.E. அவர்கள் டெல்லிக்குச் சென்று, அவர்கள் சொல்லியிருந்த அந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து வந்ததாக நான் அறிகிறேன். அது எந்த அளவிற்கு இருக்கிறது? அப்படி இல்லையென்று சொன்னால், பிரதான சாலையை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல ஒதுக்கிவிட்டுக்கூட கொடுக்கலாம். அல்லது வேறு சாலையைக் கூட ஓரத்திலே நாம் போட்டுக் கொடுத்துவிடலாம். அபபடிப் போட்டுக் கொடுத்து இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே காரணத்தைக் காட்டித்தான் 13-11-2001-ல் அவர்கள் அந்த மனுவைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். அப்படித் திருப்பி அனுப்பப்பட்ட மனு இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இடத்தைத் தேர்வு செய்து, நீங்கள் சொன்னதைப்போல, அந்த நிலத்தை விடுவித்து, மீதமுள்ள இடத்தை அந்த விண்ணப்பத்திலே காட்டி அந்த இடத்தை முடிவு செய்த பிறகு விண்ணப்பத்தை அனுப்பக் கடைசி நாள் 31-8-2002. அதற்குள்—நிச்சயமாக விண்ணப்பம் அனுப்பப்பட்டுவிடும்.

## (ஆ) பெண் சிசு கொலைகள் பரவலாக நடைபெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "பெண் சிசு கொலைகள் பரவலாக நடைபெறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

பெண் சிசு கொலை 19ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு சமூகப்





பிரச்சினையாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் நிலப் பிரபுத்துவ முறை இருந்ததால் பெண்கள், கல்வி, பொருளாதாரம் போன்ற அமைப்புகளில் சம அந்தஸ்து பெற முடியாத சூழ்நிலை இருந்தது. இதனால், பெண்கள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டாலும், ஒரு சுமையாகக் கருதப்பட்டதன் விளைவாகப் பெண் சிசு கொலை நமது நாட்டில் வளர ஆரம்பித்தது.

தமிழ்நாட்டில் சேலம், மதுரை, திண்டுக்கல், தேனி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு போன்ற மாவட்டங்களில் பெண் சிசு வதை பரவலாக இருப்பது கண்டறியப்பட்டது.

அதன் விளைவாக 1992ஆம் ஆண்டு தொட்டில் குழந்தைத் திட்டம் என்னும் புரட்சிகரமான திட்டம் தமிழக அரசால் சேலத்தில் தொடங்கப்பட்டது. 1992 முதல் 1996 வரையில் 140 பெண் குழந்தைகள் இத்தொட்டில்களில் பெறப்பட்டன.

இத்திட்டம் மேலும் சீரமைக்கப்பட்டு, அரசாணை நிலை எண் 158, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 24-10-2001-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, தமிழக அரசால் 2001ஆம் ஆண்டில் மதுரை, தேனி, திண்டுக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டு, தொட்டில்கள் வைக்கப்பட்டு, பெண் குழந்தைகள் இறப்பினின்று பாதுகாக்கப்படுகின்றனர். இதற்காக 2001-2002 ஆம் ஆண்டில் தமிழக அரசு ரூ.12.96 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்தது.

அவ்வாறு பெறப்படும் குழந்தைகள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட 18 தன்னார்வ தத்து நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு, தகுதி வாய்ந்த, குழந்தை இல்லாத தம்பதியருக்குத் தத்துக் கொடுக்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசின் சமூக நல ஆணையரகமும், யூனிசெஃப்—UNICEF—நிறுவனமும் ஒருங்கிணைந்து ஒரு பணிமனையை 27-11-2001 அன்று சேலத்தில் நடத்தினர்.

இப்பணிமனையை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்கள். இதில், சேலம், தருமபுரி, நாமக்கல், ஈரோடு, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

[2002 ஏப்ரல் 4

அரசு உத்தரவின்படி மாவட்டங்களில், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கூட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலர்கள் கலந்துகொண்டு, பெண் சிசு வதையினை முற்றிலுமாகத் தடுப்பது குறித்துத் தகுந்த ஆலோசனை பெற்று நடைமுறைப்படுத்தும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், தத்துத் திட்டத்தின் மூலம், உரிமம் பெற்ற தத்து நிறுவனங்கள், குப்பைத் தொட்டியிலும், மருத்துவமனையிலும், இரயில் நிலையங்களிலும் ஆதரவற்ற நிலையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளையும், பெற்றோர்களால் வளர்க்க இயலாமல் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளையும், பாதுகாத்து, குழந்தை இல்லாத தம்பதியருக்கு தத்துக் கொடுத்து வருகின்றனர்.

தற்பொழுது, தமிழக அரசால் புத்துயிர் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் தமிழக அரசு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமும் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றனர். மேலும், 20-வது ஆண்டு முடிவில் அதிகப் பணப்பயன் கிடைக்கும் வகையிலும் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து வழிகளிலும் பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தற்போதுள்ள அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் அடைந்த இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித நேருவிற்கு இந்திரா காந்தி அவர்கள் ஒரே பெண்மணி ஆவார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள், பாகிஸ்தான்மீது படையெடுத்து வங்காள தேசம் என்று ஒரு புதிய நாட்டையே உருவாக்கிக் காண்பித்தார்கள். பெண்ணாக இருந்து வீராங்கனை என்ற பெயரினைப் பெற்றவர்கள்.

இப்போது நமக்கு முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு பெண்மணி ஆவார். அவர் ஆண்களுக்கு நிகரான, ஆண்கள் பயப்படுகின்ற, நடுங்குகின்ற அளவிற்கு ஒரு திறமையான ஆட்சியை ... (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கந்தசாமி, எல்லா ஆண்களையும் நடுங்க வைக்கவில்லை அவர்கள். (சிரிப்பு)



2002 ஏப்ரல் 4]

**திரு. கா. கந்தசாமி:** கிராமப்புறங்களில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன், அந்தக் குழந்தைகள் வேண்டாம் என்று நினைக்கின்றபோது, அந்தக் குழந்தைகளின் வாயிலே நெல்லைப் போட்டு, எருக்கம் பால், ஒடுவந்தலைச் சாற்றை ஊற்றிக் கொல்லுகின்ற சூழ்நிலை இன்றும் நிலவி வருகின்றது. பெண் சிசு கொலைகள் பரவலாக நடைபெறுவதற்குக் காரணம், பெண்களுக்கு சமுதாயத்தில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவி வருவதுதான். சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகள் ஆகியும், சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமைகள் இல்லாமல் உள்ளது.

பெண்களுக்குச் சிறிய வயதில் திருமணம் செய்வதும், வரதட்சணைக் கொடுமைகள் தொடர்ந்து நடைபெறுவதும், பெண் சிசு கொலைகளுக்குப் பெரிதும் காரணங்களாக உள்ளன. குழந்தைகள் தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே, ஆணா, பெண்ணா என்று ஸ்கேன் செய்வதும், பெண் சிசு கொலைகளுக்குத் தூண்டுகோலாக உள்ளது.

குழந்தைகள் இல்லாத தம்பதிகளுக்குத் தொட்டில் குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படும் என்று விவர அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அப்படித் தத்து எடுப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. அதனை எளிமையாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, தொட்டில் குழந்தைகள் திட்டத்தால் மட்டும் பெண் சிசு கொலைகளைத் தடுக்க முடியாது. எனவே, பெண் சிசு கொலைகளைத் தடுத்திட டாக்டர்கள், சட்ட நிபுணர்கள், பெண் சமூக சேவகிகள் ஆகியோரைக் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மதுரை, சேலம், தருமபுரி, ஈரோடு போன்ற மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை இருந்து வந்தது. வரப்போகின்ற வரதட்சணைக் கொடுமைக்காக, இன்றே போடப்படும் தடுப்பு அரணாகப் பச்சிளம் குழந்தைகளைக் கொலை செய்து வந்த பழக்கங்கள் நடைபெற்று வந்தன. ஆனால், பெண் சிசு வதை என்ற கொடிய பிரச்சினையைத் தடுக்கின்ற நோக்கத்துடன், 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், அன்னை சந்தியா ஈன்றெடுத்த சந்தனத் தென்றல், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், சிசு வதையைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு, அந்தக் கொலை பாதகத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, தொட்டில் குழந்தைத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

[திருமதி பா. வளர்மதி] [2002 ஏப்ரல் 4

அதற்குப் பிறகு, படிப்படியாகப் பெண் சிசு கொலை குறைய ஆரம்பித்து, மக்களே வறுமையின் காரணத்தால், வளர்க்க முடியவில்லை என்று, மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கொண்டு வந்து, அம்மாவிடம் கொண்டு போய் இந்தப் பிள்ளையைச் சேர்த்து விடுங்கள் என்று கூறி குழந்தைகளை ஒப்படைத்துவிட்டுப் போகின்ற செய்திகளைப் பத்திரிகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

1993 ஆம் ஆண்டு ஜப்பான் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், 22,40,440 ரூபாய் நிதியுதவி பெற்று, இந்தத் திட்டத்தைச் சிறப்போடு நடத்துவதற்கு ஊக்கத்தைத் தந்தார்கள். 1991-லிருந்து 1996 வரை பெறப்பட்ட குழந்தைகளுடைய விவரம்; 140 குழந்தைகள். அதற்குப் பிறகு, 1996-லிருந்து 2000 ஆம் ஆண்டு வரைக்கும் ஒரு குழந்தைகூட தொட்டிலுக்கு வரவில்லை. இந்தத் திட்டத்தின்படி சேலத்திலே 5.50 இலட்சம் ரூபாய் செலவிலே தொட்டிலை வைத்து, குழந்தைகளை வளர்க்க முடியாதவர்கள் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போகலாம் என்று அறிவுறுத்தியும்கூட, 1996-லேயிருந்து 2000 வரை குழந்தைகள் வரவில்லை. ஆனால், அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, 4-7-2001 முதல் 21-3-2002 வரை பெறப்பட்டிருக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை 82. இந்த 140 குழந்தைகளையும், இந்த 82 குழந்தைகளையும்—1991-96 வரை; பிறகு 2001—இன்றைக்கு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு பல்வேறு தத்து நிறுவனங்களுக்குக் கொடுத்து, குழந்தைகள் நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வளர்ந்து வருகிறார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். குழந்தைகளைத் தத்துக் கொடுப்பதற்கு இருக்கிற விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே சிக்கல் என்னவென்றால், குழந்தை இல்லாதவர்கள் தத்து எடுக்கிறபோது மிகவும் ஆர்வத்தோடு வருகிறார்கள். அதற்குப் பிறகு இன்றைக்கு நவீன விஞ்ஞானத்தின் மூலமாக குழந்தை பெறுவதற்கு, தனக்கே சொந்தமாகக் குழந்தை வேண்டும் என்று எண்ணுகிறபோது, தனக்குக் குழந்தை பிறந்ததற்குப் பிறகு, இந்தக் குழந்தையை அவர்கள் விட்டுவிடக் கூடாது



2002 ஏப்ரல் 4] [திருமதி பா. வளர்மதி]

என்கிற ஒரே காரணத்திற்காக, அதாவது அரசு ஆதரவும் இல்லாமல், தொண்டு நிறுவனங்களின் ஆதரவும் இல்லாமல் யாராவது ஒருவர் கையிலே அந்தக் குழந்தை போய்ச் சிக்கித் தவித்து விடக்கூடாது என்பதற்காகத்தான் இப்படிப்பட்ட விதிகளை அரசு விதித்திருக்கிறது என்று அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 6. அறிவிப்பு

**கவன ஈர்ப்புகளுக்கான பதில்களைத் துறைகள் உரிய காலத்தில் அனுப்ப வலியுறுத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55(3)-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அனுமதிக்கப்பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகள் பெரும்பாலான துறைகளிடமிருந்து உரிய காலத்தில் அனுப்பிவைக்கப் பெறுவதில்லை என்று என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அனுமதிக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகளைப் பேரவைச் செயலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்க துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்துத் துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

**(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்**—தொடர்ச்சி

***திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாபட்டி, கீரிப்பட்டி சம்பந்தமாகக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள். அதுபற்றி விளக்கம் சொல்கிறேன்.

[2002 ஏப்ரல் 4

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு புகைபிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்தல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி சம்பந்தமாக . . .



2002 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமாவளவன், என் அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

**திரு. இரா. திருமாவளவன்:** கவன ஈர்ப்பு குறித்துப் பேச அனுமதிக்காததால், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் வெளிநடப்புச் செய்கிறேன்.

(உறுப்பினர் திரு. இரா. திருமாவளவன் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்கவேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஈ) தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. வரவு-செலவுத் திட்டம், 2002-2003, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம், திரு. கோ.சி. மணி.

முற்பகல் 11-55

***திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் 2002-2003ஆம் ஆண்டிற்காகக் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் கலந்துகொண்டு எங்கள் கட்சியின் சார்பாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*2002-2003* ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய், நம்முடைய நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது ரூ. *29,502* கோடி. மொத்தச் செலவு ரூ. *30,832* கோடி. பற்றாக்குறை ரூ. *1* ஆயிரத்து *330* கோடி; புதிய வரிகள் மூலம் வருவாய் திரட்ட வேண்டியிருப்பது ரூ. *690* கோடி. இறுதிப் பற்றாக்குறை ரூ. *640* கோடி. நான் தெரிவிக்க விரும்புவது, பற்றாக்குறை எப்படியும் ரூ. *640* கோடியாக இருக்கின்றபோது, புதிய வரிகளையும், பழைய வரியினுடைய உயர்வையும், கூட்டு வரியையும், இப்படித் தாங்க முடியாத சுமையைச் சுமத்த வேண்டுமா என்ற கேள்வியை முதலில் நான் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நேற்றையதினம் பேசிய எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினரும், வணக்கத்திற்குரிய மேயருமான ஸ்டாலின் அவர்கள் இங்கே குறிப்பிடும்போது, எல்லாத் துறைகளிலும், அதிலும் மிக முக்கியமான துறைகளில், சென்ற ஆண்டும், அதற்கு முன்னாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் எதிர்காலத்தில் அந்தப் பணிகளுக்கெல்லாம் தொய்வு ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை இங்கே தெளிவுபடுத்திக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையினால், எனக்கும் அவை பற்றிச் சொல்ல வேண்டுமென்ற விருப்பமிருந்தாலும், அவர் இங்கே நேற்றையதினம் பேசியதை முன்மொழிந்ததாகக் கருதி, நான் வழிமொழிய விரும்புகிறேன்.

எது எப்படியிருந்தாலும், நாட்டு நலனைக் கருதி, பொதுப் பணிகளும், தேவையான திட்டங்களும் உரிய காலத்தில் நிறைவேற்றப்படாமல் போனால், நாம் மக்களுக்குக் கடமை செய்யத் தவறிய குற்றத்திற்கு ஆளாவோம் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதேநேரத்தில், இன்றைக்குச் சில முக்கியமான துறைகள், அதிலும் ஆதிதிராவிடர் நலத் துறை, வேளாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, இப்படிப்பட்ட மிக முக்கியமான துறைகளுக்கு—என்னதான் நிதி நெருக்கடி இருந்தாலும்கூட அதற்கான நிதி ஒதுக்கீடு ஆண்டுக்கு ஆண்டு சற்று உயர்த்திக் கொண்டு வந்தால்தான், நிச்சயமாக ஒரு நாட்டின் முன்னேற்றத்தை நாம் காண முடியும்.

இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் தரமாக ஆக்க வேண்டுமென்று சொன்னால், இவற்றிலே மிக முக்கியமான கவனம் இருந்தே தீர வேண்டும். அது இல்லையென்பதை நான் குறையாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதுபோலவே, இன்னும் போட்டிருக்கிற வரிகள் எல்லாம், தாங்கக்கூடியவர்கள்மீது போடப்பட்டிருக்கின்றனவா, அந்த வரிகளைச் செலுத்துவதற்கான தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதை ஆராயாமல் போடப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். ஒரே குறிப்பு, இந்த வரிகள் வெளி மாநிலத்தில் போடப்பட்டிருக்கின்றன, ஆகையினால் நாம் முதல் முறையாகப் போட்டால்கூட என்ன தப்பு என்று வாதத்திற்காகக் குறிப்பிடுவதைப் போலக் கருதப்படுகிறதே தவிர, எந்த மாநிலத்தில் போட்டாலும், இப்போது நாம் போடுகிற இந்த வரியை நம் நாட்டு மக்கள் தாங்கும் தகுதியில் இருக்கிறார்களா, அதனால் ஏற்படுகின்ற விலைவாசி ஏற்றத்தை வாங்கும் சக்தி முலம் அவர்கள் நுகர இருக்கிறார்களா என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகின்றேன்.

குறிப்பாகவும், சிறப்பாகவும் ஒரு சிறிய தொகைதான். அது ஒன்றும் பெரிய தொகை உங்களுக்கு வரப்போவதில்லை. பட்டுப் புடவைகளுக்கு வரி போட்டிருக்கிறீர்கள். அதிலே ஒரு சதவிகிதம்தான். அதையும்கூட நீங்கள் போட்டதாக நான் கூற விரும்பவில்லை. ஒரு சதவிகிதத்தைக்கூட அவர்கள் தாங்குவார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காரணம், பட்டுப் புடவை என்பதாலே, நீங்கள் குறிப்பிட்டிருப்பதன்படி ஆடம்பர வரிச் சட்டத்திற்குள் அதைச் சேர்த்து, ஆடம்பர வரிச் சட்டத்தை இதற்காகத் திருத்தி, அந்த ஒரு சதவிகித வரியை நீங்கள் அதற்குப் போடுவதாக இருக்கிறீர்கள். பட்டுப் புடவை என்றாலே ஆடம்பரப் பொருள் என்ற எண்ணம் இந்த அரசுக்கு வந்திருக்கிறது என நான் கருதுகிறேன். அது தவறு. பட்டுப் புடவை என்றால் ஒரு ஆடம்பரப் பொருள் எனக் கருதி வைரத்தை, தங்கத்தையெல்லாம் நீங்கள் அதோடு சேர்த்து சட்டத்தைத் திருத்திவிடலாம் என்ற ஒரு எண்ணத்திற்கு வந்திருக்கிறீர்கள். அதிலேகூடக் குறிப்பிட்டிருப்பது ரூ. *3000*-க்கு மேற்பட்ட பட்டுப் புடவைகள் இருப்பில் இருப்பதற்கு—விற்பதற்குக்கூட அல்ல, இருப்பில் இருப்பதற்கு—*3001* ரூபாய்க்கு ஒரு புடவை விலை இருக்குமானால், அதிலே அந்த வரி நுழையும். ஆனால், இந்த வரி யாருக்குப் பயன்படும்? யாரை அது பாதிக்கும் என்று எண்ணுகிறபோது அதை ஆடம்பரச் வரிச் சட்டத்தில் சேர்ப்பதால், பெரிய பணக்காரர்கள்தான் பட்டுப் புடவை வாங்குவார்கள், அவர்களுக்குத்தானே அந்த வரி கூடப் போகிறது, ஏழைகளோ, நடுத்தர மக்களோ அதுபற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருப்பதாக நான் சந்தேகிக்கிறேன். ஆனால்,

அதைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை. காரணம், என்னுடைய தொகுதியில் ஏராளமான பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கிறார்கள். காஞ்சிபுரத்திற்கு அடுத்தபடியாக குடந்தை நகரத்திலும், சுற்று வட்டாரத்திலும் ஏராளமான பட்டு நெசவாளர்கள் இருக்கிறார்கள். ஓரளவிற்கு அவர்களும் என்னிடத்தில் இது குறித்து அஞ்சி பல முறை தொலைபேசியிலே பேசியிருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலும், முதலமைச்சர் அவர்களிடத்திலும் நான் அதை நேரில் கூறுவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.

நண்பகல் 12–00

ரூபாய் மூவாயிரத்திற்கு மேல், மூவாயிரத்து ஒரு ரூபாய், ஒரு பட்டுப் புடவை இருப்பில் இருந்தால், எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறதோ, அதற்கு ஒரு சதவிகிதம் வரியை நீங்கள் முதலிலே போட ஆரம்பித்திருக்கிறீர்கள். அந்த மூவாயிரம் ரூபாய் பட்டுப் புடவையைப் பணக்காரர்கள் மட்டும் வாங்கவில்லை; சுப காரியங்களுக்கு, என்ன கஷ்டம் இருந்தாலும்கூட, அந்தப் பட்டுப் புடவையை வாங்கித்தான் அந்தக் காரியத்தை நடத்த வேண்டும் என்பது, தமிழ்நாட்டினுடைய மரபாகவே இருக்கிறது. அவர்கள் எல்லாம் இதை வாங்கத்தான் போகிறார்கள். நடுத்தர வர்க்கத்து மக்கள், ஏழையெளிய மக்கள், ஒரு திருமணம் என்றாலோ, ஒரு சடங்கு என்றாலோ அல்லது ஒரு புது மனைப் புகுவிழா என்றாலோ, இப்படிப்பட்ட சுப நல்ல காரியங்களுக்கு அவர்கள் பட்டுப் புடவையை உபயோகப்படுத்துகிற நிலையிலேதான் இருக்கிறார்கள். இதற்கு முன்பே அவர்கள் தாங்க முடியாத சக்தியில் இருக்கிறபோது, நீங்கள் மறுபடியும் அதுபோன்ற ஒரு வரியை விதிப்பது நல்லதல்ல. சற்றுச் சிந்தித்து அந்த வரியை முழுவதும் ரத்து செய்ய வேண்டும். பாதிக்கப்படுபவர்கள் நுகர்வோர்கள்; வாங்குபவர்கள் மட்டுமல்ல; அதை உற்பத்தி செய்கிற உற்பத்தியாளர்கள், அந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கிற தொழிலாளிகள், அவ்வளவு பேரும் பாதிக்கப்படுகிறார்கள். அந்தத் தேக்க நிலையோடு மீண்டும் தேக்கம் ஏற்பட்டு, அது விற்பனைக்குரிய நிலை இல்லாமல் இருந்தால், நிச்சயமாக வேதனைக்கு ஆளாக்கப்படப் போகிறோமோ என்ற அச்சத்தைத் தெரிவிக்கிறார்கள். அதை நான் எதிர்க் கட்சி என்ற முறையிலே என்னுடைய கருத்தை உங்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். உங்களுடைய கடமையில், அதை அருள்கூர்ந்து பரிசீலித்து, அதை ரத்துச் செய்கிற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று முதலில் உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



அதற்கு அடுத்தாற்போல, இன்னும் சொல்லப்போனால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றி, இரண்டு, மூன்று நாட்களாகப் பேசினோம். அதிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஏறத்தாழ அரை மணி நேரம் எடுத்துக்கொண்டார்கள்; ரொம்ப விவரித்தார்கள். நான் இப்போது குறிப்பிடுவது; சுருக்கமாகச் சொல்கிறேன். 'எனக்கு உடல்நிலை சரியாக இல்லை; மணி அடிக்கிற அளவுக்கு நான் போகமாட்டேன். ஆகையினால் அதைச் சுருக்கமாக விளக்க வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது, ஒரு தொகுதிக்கு ஒரு பஞ்சாயத்தைத் தேர்வு செய்து, அதிலே, நீளச் சாலைகள், குறுக்குச் சாலைகள், இணைப்புச் சாலைகள் மிக முக்கியமாக எடுக்கப்படும். பல மாவட்டங்களை இணைக்கிற சாலைகூட, அது உள்ளே, அந்தப் பஞ்சாயத்தில் நுழைந்து போனால், அதைப் பஞ்சாயத்துதான் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலை இருப்பதால், அவற்றையெல்லாம் முன் கவனம் கொடுத்து, அதிக மக்கள் தொகை கொண்ட அந்தப் பஞ்சாயத்தைத் தேர்வு செய்து, அதற்குரிய அத்தனை பணிகளையும் நிறைவேற்றி, ஒரு முன் மாதிரி கிராமமாக அதை ஆக்க வேண்டும். அதைப் பார்த்து, ஏனைய ஊராட்சிகளும் பின்பற்றி, இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டும் என்பதற்காக கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் முதன்முறையாகக் கொண்டு வரப்பட்ட புதிய திட்டம்தான் இது. ஆனாலும், நம்முடைய நிதியமைச்சர் இங்கே குறிப்பிட்டது; ஓர் ஆண்டுக்கு, ஒரு தொகுதிக்கு, ஒரே ஒரு பஞ்சாயத்துதான் எடுக்கப் போகிறீர்கள். அப்படி ஒரு ஆண்டுக்கு எடுத்தால், 234தானே எடுக்க முடியும்; ஐந்தாண்டுக்கு ஓர் ஆயிரத்து சொச்சம்தானே வரும். அதுவரையிலே, நீங்களும் இருக்கப் போவது இல்லை; நாங்களும் இருக்கப் போவது இல்லை என்று பெருந்தன்மையோடு எங்களையும் சேர்த்து, நமக்காகத்தான் திட்டம் போடுகிறோம் என்பதைத் தெளிவுபடுத்தினார். நான் குறிப்பிட விரும்புவது, திட்டம் என்பது, இப்போது யார், யார் இங்கே இருக்கிறோமோ, அவர்களுக்கு மட்டுமல்ல; நமக்கும் உண்டு; நம்முடைய சந்ததியினருக்குத்தான் திட்டங்கள் பயன்பட வேண்டிய அளவுக்கு, தொலைநோக்குத் திட்டங்களாக அமைக்கப்பட வேண்டும். அப்படி அமைக்கப்படுகிற திட்டத்தின் அடையாளம்தான் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். முதலிலே சொன்னீர்கள்; அதைத் தனியாரிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்கிறீர்கள். அதற்குப் பிறகு இப்போது தொழிற்சாலை வைக்கப் போகிறோம் என்கிறீர்கள். 385 தொழிற்சாலைகளுக்கு 385 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்

போகிறோம் என்கிறீர்கள். ஒரு தொகுதியிலே எல்லோருக்கும் பயன்படாது என்று அந்தப் பழைய திட்டத்தைச் சொன்னீர்கள். நான் இப்போது உங்களைக் கேட்பது; ஓர் ஒன்றியத்தில் நீங்கள் அமைக்கிற ஒரு கோடி ரூபாய்த் திட்டத்தில் கட்டப்படுகிற தொழிற்சாலையிலாவது, அந்த ஒன்றியத்திற்குட்பட்ட அத்தனை வேலையற்றோர்களும் பங்குபெற முடியும்; பங்கு பெறுவார்கள்; இவ்வளவு காலத்திற்குள் என்று அதிலே அறிவிக்கவில்லை. ஏனென்றால், நீங்கள் (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். நீங்கள் பிறகு சொல்லுங்கள். நீங்கள் இதற்கு முன்னாலே ....(குறுக்கீடு)

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில், 27-வது பக்கம், 64-வது பத்தியில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது; "சமுதாய மக்களைப் பங்கேற்கச் செய்யக்கூடிய கிராமத் தன்னிறைவுத் திட்டத்திற்கு ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை விரிவுபடுத்தி, தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் குறைந்தபட்சம் 1 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு தொழில் தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறோம். ஆனால், அதோடு கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டம், தொடர்ந்து நடைபெறும் என்றுதான் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறோம்.

*பிற்பகல் 12-05*

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களாக இருந்தாலும், நகர்ப்புறங்களாக இருந்தாலும், ஒரே திட்டத்தில், ஒரே காலத்தில் அதை நிறைவு செய்து மக்கள் பயனுக்குக் கொண்டு வர முடியாது. ஊருக்கு ஒரு திட்டத்தைப் போட்டு முடித்து விட்டால், அந்த ஊர் பயன்பட்டுவிட முடியாது; பலவும் வேண்டும். ஒவ்வொரு துறையிலேயும் அப்படிப்பட்ட திட்டங்கள் போடுவதற்கு, இப்போது நீங்கள் சொன்ன அந்த 70 கோடி ரூபாய் பயன்படுத்தப்படுவதிலே மகிழ்ச்சிதான். ஆனால், அதோடு முடிந்துவிட முடியாது. அதற்குப் பிறகும் தேவைப்படுவதால் 1, 2, 3 என்று பல திட்டங்களை அதிலே எடுத்துச் சேர்த்துச் செய்வதிலே தப்பு ஒன்றுமில்லை. (குறுக்கீடு) 20 கோடி; நான் குறிப்பிடுவது எல்லாம், ஒரு திட்டம் இருக்கிறது; அதைவிட நல்ல திட்டமாகப் போட வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருப்பதிலே ஆச்சரியம் இல்லை; இருக்கிறது என்று



வைத்துக்கொள்வோம். ஆனால், அந்தத் திட்டத்தைப்போல, அதைவிட நல்ல திட்டமாய் இன்னொரு திட்டத்தைக் கொண்டு வருவதிலே தப்பில்லை. நான் கேட்பது, இது ஒரு தொழிற்சாலை மட்டும்தான். வேலைவாய்ப்பைத்தான் அதிகரிக்க நீங்களும் திட்டமிட்டு இருப்பதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.....

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு விளக்கத்தைச் சொல்கிறேன். இந்த ஒரு கோடி ரூபாய் என்பது, ஒரு குறைந்தபட்சம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; Rural based Industry—இந்த ஒரு தொழிற்சாலை என்றால், Agro based Industry, குறைந்தபட்சம் ஒரு கோடி என்று. அதிகப்படியாகவும் இருக்கலாம்; ஆனால், அந்தத் தொழிற்சாலையை ஒட்டி விவசாய விளைபொருள் உற்பத்தி எல்லாப் பஞ்சாயத்துகளிலும் வர இருக்கிறது. எல்லாப் பஞ்சாயத்துகளிலும், எந்தந்தப் பகுதியில், நிலத்தினுடைய தன்மையை அறிந்து, எத்தகைய பயிரைப் பணப் பயிராகக் கொண்டு வரலாம்—வழக்கமாக இருக்கிற கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற இலாபமற்ற பயிரினங்களுக்குப் பதிலாக இலாபம் தரக்கூடிய, எளிதில் விற்கக்கூடிய, உழவர்களுக்குக் கட்டுமானம் ஆகக்கூடிய, கட்டுப்படி ஆகக்கூடிய விளைபொருட்களைக் கண்டறிந்து அந்த விளைபொருட்களை value added ஆக மாற்ற வேண்டும். Value added ஆக மாற்றுவதற்கு ஆங்காங்கே சிறு தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும்; அதற்கான அடிப்படை வசதிகளைத் தர வேண்டும்—என்ற ஒரு நல்ல நோக்கத்தோடுதான் குறைந்தபட்சம் என்ற முறையிலே அது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய எண்ணமும் இதில் ஈடேறுகிறது. ஆனால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஏற்கெனவே இருக்கின்ற திட்டம், ஒரு பஞ்சாயத்திலே வருகிறபோது, ஒரு சட்டப் பேரவைத் தொகுயில், ஒரு பஞ்சாயத்து யூனியனில் ஏற்கெனவே இருக்கிற சுமார் 30 பஞ்சாயத்துகளுக்குக் கிட்டாத நிலை ஏற்படுகிறது. 30-வது பஞ்சாயத்துக்குக் கிட்ட வேண்டும் என்றால், 30 ஆண்டு காலம் ஆகிவிடுகிறது. பரவலாக ஒட்டுமொத்த வளர்ச்சியை ஒரு குறுகிய காலத்தில் கொண்டு வர வேண்டுமென்ற நோக்கோடு இது முதற்கட்டமாகத் துவக்கப்படுகிறது.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் சொல்வதிலே எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. அந்த ஒரு கோடி ரூபாய்க்கோ அல்லது இன்னும் சேர்த்தோ, 9 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய்க்கோ நீங்கள் செய்யுங்கள். அதை

வேண்டாமென்று நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், இப்படிப்பட்ட ஒரு பஞ்சாயத்தைத் தேர்வு செய்து அதை எடுத்துக்கொள்வதற்குக் காரணமே, அதிக மக்கள் தொகை கொண்ட பெரிய பஞ்சாயத்தாக இருந்தாலும், வருவாய் இல்லாதபோது அங்கே இருக்கிற அத்தனை பணிகளையும் அவர்களால் செய்து கொள்ள முடியாது என்பதும், அந்தப் பஞ்சாயத்து மட்டுமல்லாமல், அதனுடைய தொடர்பாக இருக்கிற அடுத்த பஞ்சாயத்துக்கும் அவைகளைச் செய்கிற காரணத்தால் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருப்பதால், அதைச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்டதே தவிர, வேறு எண்ணம் இல்லை என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி. இந்த நிதிநிலை அறிக்கையில் சென்ற ஆண்டுகூட அதற்கான ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்கள். 72 இலட்சமாக இருந்ததை 82 லட்சமாக உயர்த்தித் தந்தீர்கள். (குறுக்கீடுகள்). 77 லட்சமாக இருந்ததை 82 இலட்சமாக உயர்த்திக் கொடுத்தீர்கள். அதற்குப் பிறகு அதிலேயே சில வெட்டையும் போட்டீர்கள். இது, இது, இன்னின்னது செய்துதான் ஆக வேண்டும்; உங்கள் இஷ்டத்திற்குச் செய்ய முடியாது என்று, ஒரு 10 இலட்சமோ, என்னமோ (குறுக்கீடு) 50 இலட்சம், சட்டமன்ற உறுப்பினர்கள் இது, இதற்கு ஒரு தகுதியாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்புக் கொடுத்தீர்கள். அதைக்கூட அரசாங்கமே எடுத்துக்கொள்ளவில்லை; வேறு வேலை செய்ய வேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். அதைக்கூட நான் வரவேற்கிறேன். ஆனால், அப்படி ஒரு திட்டம், ஒரு பெரிய திட்டம், அந்தத் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்னர் ஆளுநர் உரையில் அந்தத் திட்டத்தைப் பற்றி விரிவாகச் சொல்லி இருக்கிறோம். அதனால்தான் மீண்டும் அதையே நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் அதற்குப் பிறகு இந்தத் துறையினுடைய அமைச்சர், நிதித் துறைச் செயலாளரை விட்டு — அல்லது அவராகச் சொன்னாரோ அல்லது இவர்தான் சொன்னாரோ; இதைப்பற்றிக்



கவலைப்படாதீர்கள். 192 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். நிச்சயமாக இந்தத் திட்டம் அமலுக்கு வரும். அது நிதி அமைச்சர் வாயாலேயே அந்த பட்ஜெட்டிலே இடம் பெற்று அல்லது முதலமைச்சர் வாயாலேயே அந்த பட்ஜெட்டில் இடம் பெற்று இருக்கலாம், இதைவிடச் சிறியதை எல்லாம் சொல்லி இருக்கிறீர்கள். 2 கோடி, 10 கோடி, 20 கோடி இதெல்லாம் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஒரு 192 கோடி. அதுவும் சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதி. இதைக் குறிப்பிட்டால் என்ன தவறு? ஏன் கவர்னர் உரையிலே சொன்னதெல்லாம் இதிலே வரவில்லையா? Repetition-ஆக, திரும்பச் சொன்னதாகக் குறை, குற்றம் வந்துவிடுமா? வரப்போவது இல்லை. ஆகையினால் நான் இதை நினைவூட்டி அதை உறுதிப்படுத்துவதற்காக உங்களிடத்திலே கேட்டேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

பிற்பகல் 12-10

இன்னொன்று நான் குறிப்பிட விரும்புவது, விவசாய நிலை. விவசாயத்தினுடைய நிலையை இப்போது நீங்கள் எண்ணிப் பார்த்தால், காவிரி டெல்டாப் பகுதி, எப்போதுமே குறை சொல்லிக் கொண்டுதான் இருப்போம். எந்த ஆட்சி இருந்தாலும் குறை இருக்கத்தான் செய்கிறது. அதை யாரும் இல்லை என்று சொல்ல முடியவில்லை. ஆனால் கண்ணுக்குத் தெரிந்து, பெய்யாத பெருமழை, பருவம் தாண்டிப் பெய்து, பெய்ய வேண்டிய காலத்தில் தவறிப் பெய்து, அதுவும் அவன் அறுவடைக்குத் தயாராகிற நேரத்திலேயும், விளைவதற்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கிற காலத்திலேயும் வீணாகி, நஷ்டம் ஏற்பட்டு, திரும்ப சாகுபடியைக் காலம் தவறித் தொடங்கிக்கூட அறுவடை முடியாத நேரத்தில் மழை வந்து ஒரு முறை கெடுத்தது. அதற்கு இது நிவாரணம் என்று அறிவித்தீர்கள். அறிவித்த தொகை குறைவு, கூட என்றுகூட நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. கொடுத்த முறை சரிதானா? உங்களுக்கு அந்த முறையை வகுத்து, அதை அறிவித்து, அதன்படி அதிகாரிகள் செய்தது அல்லது கொடுக்கச் சொன்னவர்கள் கொடுத்தார்கள், பெற்றார்கள் என்று பத்திரிகை மூலம் செய்தி வருகிறதே தவிர, எந்த அடிப்படையில் கொடுத்தார்கள்? ஒருவனுக்கு விளைநிலம் எவ்வளவு? அவன் சிறிய விவசாயியா? குறு விவசாயியா? பெரிய விவசாயியா? அவனுக்குப் பாதித்த நிலம் எவ்வளவு? அந்த பாதித்த நிலத்திற்கு நம்மால் கொடுக்க முடிந்த சதவீத உதவி எவ்வளவு? இதை அப்படியே, இத்தனை சதவிகிதம்

இத்தனை நிலத்திற்கு அல்லது இன்ன சாகுபடிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்து ஒரு நாள்கூட நான் பத்திரிகையில் பார்க்கவில்லை. அதை மொத்தத்திலே சொன்னார்கள். 300, 200, 500, 400, 1500, 2000, இப்படித்தான் ஒரு கணக்கு வந்ததே தவிர, இன்னின்ன அடிப்படையில் கொடுத்து இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்காவது காவிரி டெல்டாப் பகுதியிலே வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் மழையால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டாப் பகுதியில் எக்டேர் ஒன்றுக்கு 2500 ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டஈடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் பார்வையிட்டு, எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். விவசாயிகள் திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் திருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பது விவசாய அமைச்சருக்குத்தான் தெரிகிறது. இங்கே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் உங்கள் ஊர்க்காரர். உங்கள் ஊர்க்காரர்தான் சொல்கிறார்.

**திரு. கோ.சி. மணி:** எங்களவர்தான்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கு மட்டும் கொடுக்கவில்லை. உளுந்துக்கும், பயறுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோ.சி. மணி:** அது அவருக்கு மட்டும்தான் தெரிகிறது. அவருக்கு மட்டும்தான் தெரிந்திருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விளம்பரம் தேவையில்லை, மக்களுக்குத் தெரியும் நன்றாக.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of order.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள் அண்ணே, உடல் நலனைக் கருதி, 5 மணித் துளிகளில் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு பழனிசாமி பேசும்போது சொல்வார். திரு. கோ.சி. மணி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவரும் உங்கள் ஊர்க்காரரா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்காக ஒன்றையும் சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நிவாரணம் திருப்தியாக இருந்தது என்பதைப் பற்றித்தான் அவர் சொல்கிறார். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது நிதி அமைச்சர் அவர்களோ, நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம், போதுமானதாக நிவாரணம் வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது, நமது நிதிநிலை அறிக்கையிலேயே. ஆகவே, அமைச்சர் அவர்கள் திருப்தி கொள்வது என்பது எப்படிப் பொருந்தும் என்பதுதான்.

பிற்பகல் 12-15

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதும் அதுதான். அமைச்சருக்கு மட்டும்தான் தெரிந்து இருக்கிறது, எங்களுக்கு எல்லாம் தெரியவில்லை என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நான் இப்போதும் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுச் சொல்வது, இதையே திரும்பத் திரும்பச் சொல்கிறீர்களே, அரைத்த மாவையே அரைக்கலாமா என்று கேட்டால், பட்ட காலிலேயே படுகிறது, கெட்ட குடியே கெட்டுக் கொண்டு வருகிறது. அதற்காகத்தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல விரும்புவது, ஏதோ கடன் வட்டியைத் தள்ளினீர்கள். எல்லாம் செய்தீர்கள். இதிலேயெல்லாம்கூட நான் உள்ளே நுழையவில்லை. அதிலேகூட, அறிவித்துவிட்டு, அந்தந்தச் சங்கங்களே அதிலே ஈடுசெய்துகொள்ள வேண்டும் என்று சொல்லி, அதற்கு 100 கோடி ஒதுக்கீடு காட்டி, அதற்குப் பிறகு 80 கோடி தந்து, இப்படி எல்லாம் இரண்டு, மூன்று கட்டமாக அந்தக் கடன் சுமையைக் குறைத்திருக்கிறீர்கள்; குறைத்துக் கொண்டு வந்து கொண்டிருக்கிறீர்கள். இது அப்படி வருவது, அரசாங்கத்தில் ஒரு கடனைத் தள்ளுபடி செய்வது என்றால், அரசாங்கம் இவ்வளவு ரூபாய் தந்து, அந்த உதவித் தொகையை முதலிலேயே கொடுத்து, அவர்களுக்குக் கொடுக்கச் சொல்ல வேண்டியதுதான் நியாயம். இதற்கு முன்னாலேயே அப்படித்தான்

நடந்திருக்கிறது. மத்திய, மாநில சர்க்கார் உதவி கொண்டு ஏறத்தாழ 486 கோடி ரூபாய் கலைஞருடைய ஆட்சி தள்ளுபடி செய்து கொடுத்தது. ஒரே நேரத்தில் அரசாங்கம்தான் செய்தது. ஆனால், அந்தச் சங்கங்களைக் கொடுக்கச் சொல்லவில்லை. அதிலேகூட, மாநிலக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருக்கிறது. ஓரளவுக்கு சக்தி வாய்ந்த சங்கமாகத்தான் இருக்கிறது. அதிலே அதிகமான வெளித் தலையீடு, விவசாயிகளுடைய தொல்லைகள் இல்லை. அவர்கள் ஓரளவுக்கு, பெரிய வியாபாரிகள் போலப் பணத்தை வைத்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடத்திலே எடுத்துக் கொடுக்கச் சொன்னால்கூட நான் அதிலே குறுக்கிட விரும்பவில்லை. கீழே இருக்கிற கிராமக் கூட்டுறவு வங்கியில் தொடங்கி, மாநில வங்கி வரையிலும் பங்கு கொடுக்க வேண்டும், அவர்கள்தான் அந்தக் கடனை ஈடு செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, அதன்படி அவர்கள் கொடுத்த பிறகு, அவர்கள் இருநூற்று சொச்சம் கோடி கொடுத்துவிட்டு, 80 கோடியை நாம் கொடுத்தால், இந்த 6, 7 மாத காலத்தில், இடைவெளியில் ஏற்பட்டிருக்கிற வட்டியை யார் செலுத்துவது? உள்ளபடியே கூட்டுறவு வங்கிகளில் எல்லாம் எதற்கெடுத்தாலுமே வட்டிதான். அந்த வட்டியைச் செலுத்துகின்ற வாய்ப்பினை அவர்களுக்கு நாம் தரவில்லை. எனவே, இப்போது நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். கீழே இருக்கிற கூட்டுறவு வங்கிகளுடைய கடன் அடைப்பில் எவ்வளவு தொகை வருகிறதோ, அதற்கு நீங்கள் கொடுக்கச் சொல்லித் திரும்பக் கொடுக்கிறபோது, ஒரே தவணையாகவும், அதற்குள்ள வட்டி என்ன ஆகி இருக்கிறதோ அதையும் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். அதைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து கொள்முதல். கொள்முதலிலே, ஜனவரி மாதம் 1ஆம் தேதியே திறந்து விட்டோம், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்தாகிவிட்டது என்று ஒரு வரியிலே சொல்லிவிட்டீர்கள். நான் இப்போது கேட்கிறேன், 1ஆம் தேதி உத்தரவு போட்டது உண்மை, பத்திரிகையிலே செய்தி வந்தது உண்மை. ஏறத்தாழ 12, 13 தேதி வரையிலும் எங்கேயும் நெல்லையே வாங்கவில்லை. என்ன காரணம்? ஒரு முறை சாக்கு வரவில்லை என்று சொன்னார்கள். ஒரு முறை பணம் வந்திருக்கிறது. 50 ஆயிரம் ரூபாய்தான் இருக்கிறது, அதற்குள்தான் வாங்குவோம் என்று சொன்னார்கள். இப்படி, கொண்டுபோன நெல்லை, கடைசி வரையில், நீங்கள் சாத்திய 15 ஆம் தேதி வரையில் எத்தனை பேர், எத்தனை மூட்டையைக் கொண்டு போனார்களோ,



அவர்கள் அத்தனை பேர்களிடமிருந்தும் அத்தனை மூட்டையையும் வாங்கியதாக ஒரு நாள்கூடக் கிடையாது. இன்னமும் சாலையிலே வண்டியைப் போட்டுவிட்டு, மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். வீட்டிலேகூட நெல் இல்லை. இப்படி இருக்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன ஒரே காரணம், வெளி மாவட்டத்திலிருந்து வியாபாரிகள் நெல்லைக் கொண்டு வந்து விற்கிறார்கள், அதனாலே வாங்கவில்லை என்று. நான் கேட்கிறேன், இவ்வளவு பெரிய ஒரு அரசாங்கத்தை வைத்துக் கொண்டு, இன்னும் இங்கே ஓர் உறுப்பினர் சொன்னதுபோல, நடு நடுங்க வைக்கின்ற நீங்கள்—அவர்கள் சொன்னதை நான் சொல்கிறேன். அப்படிப்பட்ட நீங்கள்—ஏன் அந்த வியாபாரிகள் கொண்டு வருகின்ற நெல்லை, இது வியாபாரிகள் நெல்தானா, விவசாயிகளுடைய நெல்தானா என்று தெரிந்து, அதைக் கட்டுப்படுத்தி, விவசாயிகளுடைய நெல்லை வாங்கிக்கொண்டு, வியாபாரிகளுடைய நெல்லை நிராகரிப்பதற்கு என்ன அச்சம்? ஏன் செய்ய முடியவில்லை? இவ்வளவு பெரிய நிர்வாகத்தில் அதைச் செய்ய முடியாதா? செய்திருக்கலாம். அது ஒன்று. இப்போது தாங்கள் அறிவித்தீர்கள், தாலுக்கா மையத்தில் அந்த நெல்லை வாங்கலாம் என்று சொன்னீர்கள். அதிலே மட்டும் வியாபாரிகள் நெல்லை வாங்கலாமா? அப்படி வாங்குகின்றபோது, அதேபோல்....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றித் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறேன். இனிமேல் இந்த மாதம் 15-4-2002 வரை தாலுக்காக் கிடங்குகளிலும், சேமிப்புக் கிடங்குகளிலும் விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல்லைத்தான் கொள்முதல் செய்யச் சொல்லி ஆணையிடப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அதேபோல ஆங்காங்கே இருக்கிற, திறந்து வைத்திருந்த இடத்தில் கிடைக்கின்ற நெல்லை வாங்குவதற்கு வாய்ப்புக் கொடுத்தால் என்ன? ஏன் வட்டம் வாரியாக வரவேண்டும் என்பது ஒன்று. தாங்களே ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள் முந்தாநாள்; இது தற்போது அறுவடை ஆகிற பகுதிகளில் விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல்லை தாலுக்கா மையத்தில் வாங்கலாம். அதற்குப் பிறகு நாங்கள் இரண்டொருவர் கேட்டோம். இதிலே அதிகமான வண்டிச் சத்தம் எல்லாம் ஆகிறது என்று. ஒரு 15 ரூபாய்; அதற்கான செலவையும்

ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், அந்த விவசாயிகள் இன்னும் நெல்லை விற்கவில்லை என்பது உங்களுக்குத் தெரிகிறது. அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஏன் அந்த 40 ரூபாயை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது? இந்த ஊக்கத் தொகை 40 ரூபாயை ஏன் தரக்கூடாது? (குறுக்கீடு) அதிலே வரவில்லை. அந்த 15 ரூபாய் என்றுதான் அதிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நான் இப்போது உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்வது, இப்போது இதுவரையிலும் அடுக்கி இருக்கிற நெல்லைக் கணக்குப் பாருங்கள். விவசாயிகளுடைய நெல்லா, இல்லை அது வியாபாரி நெல்லா என்பதை உங்களுடைய தலைமை அதிகாரிகளை விட்டு விசாரிக்கச் சொல்லி, உள்ளபடியே விவசாயிகளுடைய நெல்லாக இருந்தால் அவர்கள் மற்றவர்கள் பெற்றதைப்போல இந்த ஊக்கத் தொகை 40-ம் பெறுவதற்கான ஒரு வாய்ப்பைத் தயவுசெய்து உண்டாக்குங்கள். அதில் பிடிவாதம் வைத்துக் கொள்ளாதீர்கள். ஒரு பெருந்தன்மையோடு நடந்துகொண்டால்தான் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) நான் இப்போது என்ன சொன்னேன் ஐயா?

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை நான் மணியடித்தது, உரையை முடிக்கச் சொல்வதற்காக. நீங்கள் அவசரமாக ஊருக்கு வேறு போக வேண்டியதிருக்கிறது. உடல்நலம் வேறு சரியில்லை. நீங்கள் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கோ.சி. மணி:** ஒரு கருத்தைச் சொல்லி நான் முடிக்கின்றேன். எது எப்படி இருந்தாலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயர்ந்த இடத்தில் இருக்கிறார்கள். எதற்காக, குறை சொன்னால்கூட கோபம் வரவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோபம் வரவில்லையே!

**திரு. கோ.சி. மணி:** ரொம்ப உயர்ந்த இடத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் அதிலும்கூட இப்போது என்னைப் போன்றவர்களை எல்லாம் எப்போது சிறைக்கு அனுப்புவது....

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதற்கு நான் எந்த பதிலும் கூறாமல், பேசாமல் உட்கார்ந்து இருக்கும்போது, நான் கோபப்படுகிறேன் என்று ஏன் கூறுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. தாராளமாக, பெருந்தன்மையாக இருந்து ஏன் இந்த ஊக்கத் தொகையை இன்னும் கொடுக்கக்கூடாது என்று கேட்டார். நான் இதற்குள் எல்லாம் போக வேண்டாம் என்று கருதினேன். அவர் வயதிற்கு மதிப்பளித்து, அவருடைய உடல் நிலைக்கு மதிப்பளித்து இதற்குள் எல்லாம் செல்ல வேண்டாம் என்று கருதினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் விடமாட்டேன் என்கிறார். நான் பேசாமல் அமர்ந்திருந்தால்கூட என்னை வம்புக்கு இழுக்கிறார். தி.மு.க ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட மோசமான நிதிநிலைமையை எப்படியாவது சரிப்படுத்தி, அந்த மோசமான சூழ்நிலையிலிருந்து இந்த மாநிலத்தை எப்படியாவது மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் போராடிக் கொண்டு இருக்கிறோம், அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே தேவைக்கு மேல் நெல் கொள்முதல் செய்தாகிவிட்டது. இருக்கின்ற நெல்லையே என்ன செய்வது என்று தெரியாத நிலையில்தான் அரசாங்கம் இருக்கிறது. அரசாங்கத்திடம் பணம் இல்லை, நிதியில்லை. இதை எத்தனை முறை திரும்பத் திரும்பச் சொல்வது? வெளிப்படையாகவே சொல்கிறோம். வெளிப்படையாகவே வெள்ளை அறிக்கையை இங்கே வைத்திருக்கிறோம். இன்றைய நிலையில் மேலும் கொள்முதல் செய்யும் நிலையில் இந்த அரசு இல்லை, ஊக்கத்தொகை கொடுக்கும் நிலையில் இந்த அரசு இல்லை. இருந்தாலும், ஏழையெளிய விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக்கூடாதே என்பதற்காக, இன்னும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாதம் 15 ஆம் தேதி வரை ஒரு கருணை அடிப்படையில்தான் கொள்முதல் செய்ய அரசு ஆணையிட்டுள்ளது என்பதை விளக்கிக் கூற விரும்புகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வியாபாரிகள் நெல் வருகிறது, அதனால் வாங்கவில்லை என்று சொன்னதன் அடிப்படையிலேதான் கேட்டேன். ஆனால் இப்படி நீங்கள் சொன்னால் ஒரு 40 ரூபாயை, இப்போது அறுவடை செய்திருப்பவர்களுக்கு—பாவம்—கொடுக்கக்கூடாதா? இதைத்தான் கேட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோ.சி. மணி:** இருக்கட்டும், பரவாயில்லை. ஒன்று நான் சொல்கிறேன். எங்களைப் போன்றவர்களை எப்போது சிறைக்கு அனுப்புவது; எவ்வளவு காலம் தண்டனை பெற வைப்பது என்ற நோக்கத்தில் வெகு வேகமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். இந்தக் கருத்துகளை உள்ளடக்கிச் சொல்கிறேன். உங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரை எப்போது சிறைக்கு அனுப்புவது, எப்படி சிறைக்கு அனுப்புவது என்பது குறித்து வேகமாகப் பணிகள் நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் எப்படிச் சொல்கிறார்? (மேசையைத் தட்டும் ஒலி) எந்த அடிப்படையில் சொல்கிறார்? எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்கிறார் என்பதைத் தெரியப்படுத்தினால் நன்றாக இருக்கும்.

**திரு. கோ.சி. மணி:** நாங்கள் எவ்வளவு ஆதாரத்தை வைத்துக்கொண்டு........

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு என்ன தோன்றுகிறது என்றால், அவருக்கு ஏற்பட்டுள்ள பயத்தின் அடிப்படையில் இப்படிப் பேசுகிறாரே தவிர, ஆதாரபூர்வமாகப் பேசுவதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. கோ.சி. மணி:** எனக்கு—பயம் உள்ளவன் என்பது நாடறியும். அதிலே ஒன்றும் எனக்கு சந்தேகம் இல்லை. உங்களுக்கு நான் துணிச்சல்காரன் என்று சொல்வதற்கு இங்கே வரவில்லை. ஒன்றே ஒன்றை மட்டும் நினைவுபடுத்துகிறேன். நீங்கள் எப்போது அனுப்பினாலும்—நாடு அறிகிறது, இந்த ஊர் முழுக்கத் தெரிகிறது, எனக்குத் தெரிவது என்பதல்ல, உங்களுக்கும் தெரிகிறது. இருந்தாலும் நினைவூட்டுகிறேன். நீங்கள் அறிவித்ததைப் போல, எந்தக் கஷ்டம் வந்தாலும், எந்தச் சிறைக்கு அனுப்பினாலும், எத்தனை ஆண்டு காலம் இருந்தாலும் நீங்கள் சொன்ன அந்த தி.மு.க. ராஜாவோடு இருந்துதான் வெளியிலேயோ, உள்ளேயோ சாவேன் என்பதைச் சொல்லி முடிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன். (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறினார்கள். எந்த ஆதாரத்தின் அடிப்படையில் இப்படி உறுப்பினர் பேசுகிறார், அச்ச உணர்வா?—தேவையில்லாமல் நீங்கள் ஏற்கெனவே உடல்நலம் குன்றியிருக்கிறீர்கள். மேற்கொண்டும் அச்சம் ஏற்பட்டால், that may result in cardiac problem. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தேவையற்ற அச்சத்திற்கு உள்ளாக வேண்டாம், குற்றமிருந்தால் சட்டம் அதன் கடமையைச் செய்யும். உங்கள் மீது குற்றமில்லையென்றால் நீங்கள் அச்சப்படத் தேவையில்லை.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள், தேவையில்லாமல் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கிறார். அவர் இப்போது, நீங்கள் குறிப்பிட்டீர்களே, தி.மு.க.-வின் ராஜா என்று, அந்தத் தலைவரை உயிர் போனாலும் சரி, நான் கடைசிவரை, அவரைப் பிரிந்து வரமாட்டேன், சிறைக்கு அனுப்பினாலும் நான் அவரைப் பிரிந்து வரமாட்டேன் என்றெல்லாம் இங்கே பேசினார். அவரை அவருடைய தலைவரிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று யாரும் இங்கே விருப்பப்படவில்லையே! அவரை விட்டுவிட்டு நீங்கள் வருவதாகச் சொன்னால்கூட, நாங்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நாங்கள் விரும்பவில்லை.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் பேசுகின்றபோது தன்னையே சிறைக்கு அனுப்புவதற்கு ஏதோ நடவடிக்கை இருப்பதாக ஒரு கருத்தை அவர் சொன்னதற்குக் காரணம், பத்திரிகைகளிலே அப்படியொரு செய்தி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஒரு சிலர் பெயரை, அமைச்சர்களாக இருந்த பல பேரைப் பற்றித் தொடர்ந்து செய்திகள் வருகின்றன. வருகின்ற செய்தியினுடைய விளைவாக, அப்படியிருந்தாலும், என்பதற்காக அவர் சொன்னார். ஆனால், அதற்கு மாறாக, தி.மு.க. தலைவரிடமிருந்து அவரைப் பிரிப்பதாக எங்களுக்கு ஒன்றும் நோக்கமில்லை என்று சொல்லிவிட்டு, அப்படி வந்தாலும் நாங்கள் சேர்ப்பதாக இல்லையென்று அம்மையார் சொல்வது, முதலமைச்சர் சொல்வது அவ்வளவு சிறப்பாக அமையாது. என்ன காரணமென்றால், அங்கே

வருவதாக அவர் சொல்லவில்லை. அவர் சொன்னது, பிரிப்பது என்பது, கலைஞரிடமிருந்து பிரிப்பது என்று பொருளே தவிர, அங்கே வருவது என்று பொருளாகாது. அதற்கு வேறு பொருள், இதற்கு வேறு பொருள். ஆகவே, அப்படியொரு நிலையை எடுத்து இப்படியொரு பதில் சொல்ல வேண்டிய அவசியத்தை இந்த அவையில் உருவாக்குவது சரியில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானாக இதைப் பற்றிப் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் தெரிவித்த சில கருத்துகளுக்கு நான் பதில் தெரிவித்தேன், அவ்வளவுதான். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு நிதிநிலை அறிக்கையின்மீது மட்டும் பேச வேண்டுமென்று அறிவுறுத்தினால் நல்லது. இப்படிப்பட்ட தேவையற்ற கருத்துகளை மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பேசாமல் இருந்தால், இங்கிருந்து இத்தகைய பதில்களும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன். (குறுக்கீடு) உரையை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) முடித்துவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோ.சி. மணி அவர்கள் எங்கள் தலைவரிடமிருந்து என்னைப் பிரிக்க முடியாது என்று சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உங்களை நாங்கள் அழைக்கவில்லை, நீங்களாகவே வந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதனை ஆணித்தரமாகச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், உங்கள் இயக்கத்திற்கு வருவதாக என்ற நோக்கத்தில் அவர் சொல்லவில்லை என்று சொன்னார்கள். ஆக, அவர் சொன்ன நோக்கம், அவருடைய தலைவரோடு சேர்ந்துதான் சிறைக்குச் செல்வேன், தனியாகச் சிறைக்குச் செல்ல மாட்டேன் என்ற நோக்கத்தில் சொன்னார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. பாண்டுரங்கன். (குறுக்கீடு) முடியுங்கள். நீங்கள் சொன்னீர்கள், பதில் சொல்லியாகி விட்டது. (குறுக்கீடு)



உட்காருங்கள். பாண்டுரங்கன், பேசுங்கள். (குறுக்கீடு) பாண்டுரங்கன், பேசுங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடிச் சிங்கம், ஈரோட்டுத் தங்கம், பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்களுடைய வேகத்தையும், தென்னகத்து காந்தியாகத் திகழ்ந்து வருகின்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய அறிவையும், அன்னை சத்யா அவர்கள் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வராக விளங்கி வருகின்ற ராமாவரம் தோட்டத்து ரோஜாவாக என்றென்றைக்கும் சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, துப்பாக்கித் தோட்டாவிற்குக்கூட தன்னுடைய தொண்டையிலே இடம் வழங்கி, கடையேழு வள்ளல்களில் எல்லாம் சிறப்பை ஏற்படுத்துகின்ற அளவிலே எட்டாவது வள்ளலாக வாழ்ந்து, மறைந்தும் மறையாமல், நம்முடைய இல்லங்களிலே மட்டுமல்லாமல், உள்ளங்களிலேயும் வாழ்ந்து வருகின்ற புன்னகை வேந்தன், பூவிழிக் கண்ணன் புரட்சித் தலைவர் அவர்களுடைய தாயுள்ளத்தையும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற தலைவியாக, மலை குலைந்தாலும் நிலை குலையாத மாதரசியாக, மக்கள் நலன் பேணிக் காக்கத் தொடர்ந்து போராடுகின்ற பேரரசியாக, தமிழகத்தின் வளமை உயிர்மூச்சாக, இரவு, பகல் பாராமல் அயராமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற ஆறு கோடி தமிழ் மக்களின் ஒளிவிளக்காகவும், நூறு கோடி இந்திய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் வாழ்ந்து வருகின்ற, எங்களது குடும்பத்தினுடைய குலவிளக்கு, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகின்றேன்.

பிற்பகல் 12-30

உலகத்தில் எந்தவொரு பெண்மணிக்கும் இழைக்க முடியாத கொடுமைகளை, அநீதிகளை, கடந்த ஆட்சியாளர்கள் ஏற்படுத்தியதற்குப் பிறகும், தேர்தலிலே போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படாத நிலையிலும், நடந்து முடிந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, தமிழ்நாட்டு மக்கள், தாயே, நாங்கள் உங்கள் பக்கம்தான், அஞ்சாதீர்கள், என அஞ்சாமல் பெருவாரியாக வாக்களித்து, தமிழக அரசுக்கு அரசியாக ஆட்சி நடத்துவதற்கு இக்கோட்டைக்கு அனுப்பி வைத்தார்கள்.

கோட்டைக்கு அனுப்பிய தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும், குறிப்பாக ஆண்டிப்பட்டி தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும் நான் தலைவணங்கி நன்றியை உரித்தாக்கிக்கொள்கின்றேன். மக்களின்

எதிர்பார்ப்பிற்கு, விருப்பத்திற்கு எதிராகச் செயல்பட்ட, மக்கள் விரோத. நயவஞ்சகக் குள்ளநரிகள், மகாபாரத அரசியல் சகுனிகள், இராமாயணக் கூனிகள், என் தாயைத் தொடர்ந்து ஆட்சி செய்யவிட்டார்களா, மக்கள் நலத் திட்டங்களைச் செய்ய அனுமதித்தார்களா, ஒத்துழைத்தார்களா, என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கையில் காசு இல்லாமல், கண்ணில் நீர் வடிய, கடைத் தெருவில் நின்றிருக்கும் ஏழைத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்திட, அரிய பல திட்டங்களைச் செயல்படவிட்டார்களா? திரைமறைவு வேலைகளை அல்லவா செய்தார்கள். அவர்களால் தொடர்ந்து வெற்றி பெற முடிந்ததா? அவர்களின் எண்ணம் ஈடேறியதா? அவர்கள் எல்லாம் இன்றைக்கு அடங்கிப்போய் இருக்கின்றார்கள்; முடங்கிப் போய் இருக்கின்றார்கள்; நலிந்து போய் இருக்கின்றார்கள். இதுதான் வரலாறு.

"தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்;
தர்மமே மீண்டும் வெல்லும்"

என்ற வாக்கினை மெய்யாக்கி, அரியணையில் மீண்டும் அமர்ந்து, இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்குவதற்கு ஏதுவாக 15 அம்சத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். குறிப்பாக, சிறப்பாக, 2002-2003, பட்ஜெட், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் பட்ஜெட் என்று அனைவராலும் பாராட்டப்படுகின்ற நிலையில் தொலைக்காட்சியினராலும் பாராட்டப்படுகின்ற நிலையில் அறிஞர்களால் பாராட்டப்படுகின்ற நிலையில், பொருளாதார வல்லுநர்களால் பாராட்டப்படுகின்ற நிலையில், அரசியல் காழ்ப்புணர்ச்சியற்றவர்களால் பாராட்டப்படுகின்ற நிலையில், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழை எளிய மக்களால் பாராட்டப்படுகின்ற அளவில், அரசு அலுவலர்கள் பாராட்டுகின்ற அளவில், தொழிலாளர் நண்பர்கள் பாராட்டுகின்ற அளவில், இன்றைக்கு ஒட்டுமொத்தத் தமிழகமே பாராட்டுகின்ற நிலையில், சில சூதுமதி படைத்தோர், இது மக்கள் நலன் பாதிக்கும் பட்ஜெட் என்று புலம்புகின்றனர். இதைச் சொல்பவர்கள் யார் என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

கடந்த கால ஆட்சியில் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ஆகியவற்றைத் தராமல் 1,820 கோடி ரூபாயை வீணாகச் செலவழித்தவர்கள் இதைச் சொல்லலாமா என்று நாட்டு மக்கள்



கேட்கின்றார்கள். பொது விநியோகத்தில் மட்டும் தமிழகத்தினுடைய தேவைக்கு மேல் 16 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்து, கொள்முதல் செய்ததோடு மட்டுமல்லாமல், ஏறக்குறைய 1,445 கோடி கடன் வாங்கி, எங்கள் அன்னையின் மீது கடன் சுமையைச் சுமத்தியவர்கள், இன்றைக்குக் கொள்முதல் செய்யவேண்டும், கொள்முதல் செய்ய வேண்டும் என்று ஒப்பாரி வைக்கின்றார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-35

அவர்கள் அந்த அளவிற்கு நிர்வாகச் சீர்கேட்டைச் செய்து இன்றைக்கு அரசு கஜானாவைத் திவாலாக்கிவிட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு நெல் கொள்முதல் செய்வதைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறதா? தகுதி இருக்கிறதா, என்பதை நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நடுநிலையோடு எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பணியை முடித்த ஒப்பந்ததாரர்களுக்கு, பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு மருந்துகள் வழங்கிய வகையிலாக இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறையிலே பணிகளைச் செய்த ஒப்பந்ததாரர்களாக இருந்தாலும் சரி, அந்த ஒப்பந்ததாரர்களுக்குப் பணம் தராமல், சுமார் 200 கோடிக்கு மேல் எங்கள் மீது கடனைச் சுமத்தியவர்கள் இன்றைக்குக் கூப்பாடு போடுகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் கூறுவதற்கு என்ன தகுதி இருக்கிறது? என்ன உரிமை இருக்கிறது? இவர்களை நாட்டு மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நாட்டு மக்கள் இதைக் கேட்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, சிறப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய ராயல்டி பணத்தை முன்பணமாக, ரூபாய் 250 கோடியை முன்கூட்டியே பெற்று, வீணாகச் செலவழித்தவர்கள் இவர்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கூட்டுறவு நூற்பாலைகளில் நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக, ஏறக்குறைய சுமார் 352 கோடிக்கு மேலாக நட்டத்தை உருவாக்கியவர்கள், உண்டாக்கியவர்கள் நீங்கள்

அல்லவா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். போக்குவரத்துத் துறையாக இருந்தாலும், பிற பொதுத் துறை நிறுவனங்களாக இருந்தாலும், நிர்வாகச் சீர்குலைவு காரணமாக ஏறக்குறைய 2300 கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் நீங்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது, உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி விமர்சிக்க என்று நாட்டு மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்குக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் சீரான பொருளாதார அணுகுமுறை இல்லாத காரணத்தாலே தங்களது ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய 850 கோடி ரூபாய் நட்டத்தை உருவாக்கியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் உறுதியாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளைப் பற்றிப் பேசுகின்றார்கள். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் விவசாயிகளைப் பற்றிப் பேசினார்கள். நான் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விவசாயிகளுடைய நலனைப் பற்றிப் பேசுவதற்கு அருகதை இல்லை என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல, கடந்த காலத்திலே அரவைக்கு பல்வேறு கூட்டுறவு மற்றும் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை செய்த வகையிலே, அந்த விவசாயிகள் சப்ளை செய்த கரும்புக்கு 175 கோடி ரூபாய் 31-5-2001ஆம் தேதி வரை கடனை வைத்துவிட்டுச் சென்றவர்கள், அந்த விவசாயிகளுக்குக் கடனை வழங்க முடியாமல் சென்றவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவியாக, தங்கத் தலைவியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழை எளிய விவசாயப் பெருமக்கள் சப்ளை செய்த கரும்புக்கு —அவர்கள் காலத்திலே சப்ளை செய்து இருந்தாலும்கூட —உடனடியாகப் பணத்தைப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்று பண்டிகைத் திருநாளான தீபாவளிப் பண்டிகைக்கு முன்பாக, கடந்த ஆண்டு பாதித் தொகையையும், இப்போது மீதித் தொகையையும் வழங்கியிருக்கின்றார்கள் என்கின்ற மகிழ்ச்சியான



செய்தியை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விவசாயிகளுடைய நலனைப் பற்றிப் பேசுவதற்கோ, விவசாயிகளைப் பற்றிப் பேசுவதற்கோ, கரும்பு விவசாயிகளைப் பற்றிப் பேசுவதற்கோ அருகதை இல்லை என்பதை நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒட்டுமொத்தமாக சுமார் 13 ஆயிரம் கோடி ரூபாய் கடன் சுமையைத் தமிழக அரசுக்கு ஏற்படுத்தி கஜானாவைக் காலி செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழக மக்களின் நலன் காக்கும் வளர்ச்சிப் பணிகளைப் புறக்கணித்தார்கள். உங்களையும், உங்களுடைய ஆட்சியையும் வளர்க்கின்ற விளம்பரத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தீர்கள். இதன் மூலம் தமிழகத்தைக் கடன் வலையில்தான் மூழ்கடிக்கச் செய்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் ஆட்சிக்கு வந்த எங்கள் அன்னையின் தலையின் மீது நீங்கள் சுமத்திய கடனுக்கு, ஏழை எளியோரைப் பாதிக்காத வண்ணம், வெறுமனே ரூபாய் 135 கோடிக்குத்தான் முதலில் வரி போட்டார்கள். நீங்கள் அலறினீர்கள், நீங்கள் மினி பட்ஜெட் என்று சொல்லுகின்ற நிலையிலேகூட, அரசு கஜானாவுக்கு வந்த வருவாய் ஏறக்குறைய 140 கோடி மட்டுமே என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்குத் தவறான விளம்பரத்தை, தவறான பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் மினி பட்ஜெட் என்று சொல்லப்படுகின்ற அந்த நிலையிலும் அரசினுடைய கஜானாவிற்கு வந்த தொகை ஏறக்குறைய 140 கோடியேயொழிய அதற்கு மேல் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்கின்ற அடிப்படையில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய உயிர் மூச்சு. ஆனால், மைய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கும் நிதியினை ரூபாய் 512 கோடியாக இந்த ஆண்டு குறைத்துள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை நான் பணிவோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், தமிழகத்தை வளர்ந்துவிட்ட மாநிலம் என்ற காரணம் கூறி, 2000—2005 வரையிலான 5 ஆண்டு காலத்திற்கு சுமார் ரூபாய் 2946 கோடியை இழந்திருக்கிறது தமிழகம் என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பகல் 12-40

பொதுவாக இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களும் கடுமையான நிதி நெருக்கடிகளுக்கு உள்ளானபோதும், பூனைக்கு யார் மணி கட்டுவது என்று புரியாமல், தொலைநோக்குச் சிந்தனையில்லாமல்— புதிய தொலைநோக்குச் சிந்தனையில்லாமல்— தவித்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், சீரழிந்துவிட்ட நிதிநிலைமையைச் சீரமைக்கும் நோக்கத்தில் அனைத்து மாநிலங்களுக்கும் ஒரு கட்ட உதவி மானியம் one time package என்று சொல்லப்படக்கூடிய அளவிலே வழங்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கோரியுள்ளார்கள். மேலும், தமிழ்நாட்டிற்கு இந்த மானிய வகையிலே மட்டும் ரூபாய் 3000 கோடி கொடுக்க வேண்டுமென்று கோரி இருக்கின்றார்கள். நான் இங்கே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துச் சுட்டிக்காட்டுவதெல்லாம், உங்களுக்குத் தமிழகத்தினுடைய மக்கள்மீது நம்பிக்கை இருக்குமேயானால், தமிழக மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று உங்களுக்கு எண்ணம் இருக்குமேயானால், இந்த 3000 கோடியை நீங்கள் ஆண்டு கொண்டிருக்கின்ற, மத்தியிலே பங்கு கொண்டிருக்கின்ற பாரதிய ஜனதா கட்சியினுடைய மைய அரசிலே கேட்டுப் பெற்றுத் தாருங்கள். அப்படி இந்த 3000 கோடியை நீங்கள் பெற்றுத் தருவீர்களேயானால், நிச்சயமாகத் தமிழக மக்கள்மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது; தமிழக மக்களுடைய வளர்ச்சியின் மீது உங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பது பொருள் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த யோசனையை வணக்கத்துக்குரிய ஆந்திர முதலமைச்சர் அவர்களும், பாண்டிச்சேரி முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டு பாராட்டியுள்ளார்கள். மேலும், இந்தச் சீரிய முயற்சியை நாங்களும் மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் எடுத்துச் சொல்வோம் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும் வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற அனைத்து மாநில முதலமைச்சர்களும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய முன் யோசனையை, தொலைநோக்கு யோசனையைப் பாராட்டுகின்ற செய்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



கடுமையான நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும் தமிழகத்தை முதன்மையான மாநிலமாகக் கொண்டு வர பல்வேறு திட்டங்களை அம்மா அவர்கள் தொலைநோக்கோடு அறிவித்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகப் பொதுமறையாம்—நம் வள்ளுவம்—திருக்குறள், பாமரர் முதல் படித்தவர் வரை, குழந்தை முதல் பெரியவர் வரை, மாணவர் முதல் ஆசிரியர் வரை, தொண்டன் முதல் தலைவர் வரை எல்லோருக்கும் வாழ்க்கையைச் சொல்லித் தந்தது. 2000 ஆண்டுகளுக்கு முன்னரே நாம் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தின் வெளிப்பாட்டை எடுத்துரைத்தவன் வள்ளுவன். எட்டையபுரத்து மகாகவி பாரதி சொல்லுவான் —

'கம்பனைப்போல், வள்ளுவனைப்போல், இளங்கோவைப்போல் இந்தப் புவிதனில் யாம் கண்டதில்லை' என்று. அந்தக் கூற்றிற்கிணங்க

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு,
எங்கள் தாய்த் தமிழகம்'

என்ற வகையில் வள்ளுவனுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக, கோடையில் இளைப்பாற, குளிர்தரும் நிலவாக, சுடுமணலைக் குளிர்விக்கும் மழையாக, குளிப்பாட்டும் அலைகளாக, சுட்டெரிக்கும் வெப்பத்தை விரட்டியடித்து இதமான தென்றலாக, ஏழையின் கண்ணீர் கன்னத்தைத் தாண்டும் முன்னரே துடைக்கின்ற விரலாக, பசியால் வாடுகின்ற மக்களுக்கு உணவூட்டிய அட்சயப் பாத்திரமாக, வயற்காடுகளில், வரப்பு வெளிகளில், கண்மாய்க் கரைகளில், களத்து மேடுகளில், முளைக்குச்சி பற்றிய கட்டை வண்டிகளில் செல்கின்ற தன்னம்பிக்கை கொண்ட உழவனின் கனவுகளான, தன் பிள்ளைகள் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற தணியாத தாகத்தைத் தணித்து, அழியாத சொத்து கல்விதான் என்பதை உணர்ந்து தெய்வப் புலவர் வள்ளுவன் பெயரால் வையகம் புகழும் விதமாக வேலூரில் பல்கலைக்கழகம் அமைத்துப் பெருமை சேர்த்த அன்னைக்கு வேலூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், காலமெல்லாம் எங்கள் நன்றியறிதலை, எங்கள் உயிர் உள்ள வரை, கார் உள்ளவரை, கடல் நீர் உள்ள வரை மறக்கமாட்டோம். எங்கள் கண்ணீர் அன்பில் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே, வணக்கத்திற்குரிய வேலூர் சட்டப் பேரவை உறுப்பினராக அமர்ந்திருக்கின்ற அருமை அண்ணன் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது வேலூருக்கு மருத்துவக் கல்லூரி வேண்டும், வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். நான் இந்த நேரத்திலே பணிவோடு கோடிட்டுக் காட்டுவதெல்லாம், முகராசியாக வாழ்ந்து வருகின்ற மகராசி அம்மா அவர்கள் ஆட்சியிலே அமர்ந்திருக்கின்றார்கள்; வேலூர் மாவட்டத்திற்கு கேட்காமலேயே, நிச்சயமாக உரிய காலத்திலே எதையும் செய்வார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலூர் பெருமொத்த மக்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலேயிருந்து தண்ணீர் வேண்டுமென்று கோரவில்லை. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலூர் மாவட்ட மக்களின்மீது அக்கறை கொண்டு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வேலூர் மாவட்டத்திற்கும் வரும் என்று சொன்னதை வணக்கத்துக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நான் கனிவோடு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.** நீங்கள் எதை வேண்டுமானாலும் செய்ய வேண்டாம் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொண்டு, நிச்சயமாகக் கடந்த கால ஆட்சியாளர்களாலே புறக்கணிக்கப்பட்ட அந்த மருத்துவக்கல்லூரி இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே உரிய நேரத்தில் வரும். எந்தத் தடைகள் இருந்தாலும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தத் தடைகளை எல்லாம் உடைத்தெறிந்து அந்த மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வருவதற்குண்டான (மேசையைத் தட்டும் ஒலி) வாய்ப்புகளை உருவாக்கித் தருவார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேதகால நாகரீகம் என்று அழைக்கப்படக்கூடிய ஆதிகாலத்தில் தொடங்கி, சங்க காலமாகட்டும், சங்கம் தழுவிய காலமாகட்டும், இடைப்படும் இடைக்காலமாகட்டும், இக்காலமாகட்டும், எக்காலமாகட்டும், பெண்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அண்ணல் காந்தியடிகள் சொன்னார், 'ஆண் ஒருவன் கல்வி கற்றால், அவன் மட்டுமே முன்னேறுவான், ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அந்தக் குடும்பமே முன்னேறுகின்றது' என்று. அண்ணலுக்கு அடுத்தபடியாக அன்னைதான்; 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று உரைத்த மூட நம்பிக்கையின் முதுகெலும்பை உடைத்து, பெண்ணின விடுதலைக்காக எங்கள் தலைவி போர்க்களம் தன்னில் போரிட்டுக் கொண்டிருக்கின்றார். தாயை மதிக்காதவனுக்கு இந்த வாழ்க்கையில் உயர்வில்லை. "பெண்கள்தான் நம் கண்கள்" என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் 10,000 பெண்கள் பயன்பெறும் விதமாக 145 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்ளை 7 மாவட்டங்களில் அமைத்து, அதில் வேலூர் மாவட்டத்தையும் சேர்த்து பெண் குலத்தின் திருவிளக்காக விளங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா, உங்களுக்கு வேலூர் மாவட்ட மக்களின் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றியை மீண்டும் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

"மாடு கட்டிப் போர் அடித்தால் மாளாது செந்நெல்" என்று, யானை கட்டிப் போர் அடித்த தமிழகத்தில் பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை தரிசு நில மேம்பாட்டிற்காக என்று எந்த ஆட்சியாளர்களும் செயல்படுத்தாத அரிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, இந்த நிதிநிலை அறிக்கையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும்கூட 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏழை விவசாயிகளின் கடன் பளுவைக் குறைக்க ஒரே தவணையில் கடன் தீர்க்கும் சலுகைத் திட்டத்தைத் தாயுள்ளத்தோடு அறிவித்துள்ளார்கள். One time settlement scheme என்ற அடிப்படையிலே அறிவிக்கப்பட்டது இந்தத் திட்டம் தமிழகத்தில் இருக்கின்ற, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற, இந்திய நாட்டின் முதுகெலும்பாக விளங்கிக் கொண்டிருக்கின்ற வேளாண் பெருமக்கள் எல்லாம் இந்தத் திட்டத்தை அறிவித்ததற்குப் பிறகு மிகவும் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"அன்னமிட்ட கை, இது ஆளுகின்ற கை" வாழ்நாள் முழுமைக்கும் சத்துணவுத் திட்டத்திற்காக ஏறக்குறைய ரூபாய் 286 கோடி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. சொல் ஒன்று, செயல் மற்றொன்று என்ற

அடிப்படையில் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த முந்தைய ஆட்சியாளர்களைப்போல் இல்லாமல், சொல்லும், செயலும் ஒன்றே என்ற அடிப்படையில் ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலில் அளித்த வாக்குறுதியின்படி ரேஷன் அரிசி ரூபாய் 3.50 என்ற அளவில் தொடர்ந்து நீடிக்க ஏறக்குறைய 1240 கோடி ரூபாய் மானியமாக வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாமன்றத்தினுடைய உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காலையில் செய்த உதவியை மாலையிலேயே மறந்துவிடும் வஞ்சக மனிதர்கள் இந்த நாட்டிலே வாழ்கின்ற நிலையில், பலனை எதிர்பாராமல் பயன் தரும் நன்றியுள்ள கால்நடைகளுக்காக, கால்நடைப் பாதுகாப்பு மற்றும் மீன் வள மேம்பாட்டிற்காக ஏறக்குறைய 2 கோடியே 30 இலட்சத்திற்கும் மேலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கார் மேகக் கண்ணனாய், முகில் கண்ட வேகமாய், வருண பகவானாய் தமிழகத்தில் செழுமை தழைத்திட ஆட்சி நடத்தும் அம்மா அவர்கள் தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி அவர்கள், அவினாசி-அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, எவ்வளவோ நெருக்கடிகள் இருந்தாலும்கூட (மேசையைத் தட்டும் ஒலி) 270 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து சரித்திர சாதனை புரிந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதற்கேற்ப, நோய், நொடியில்லாத வாழ்க்கையைத் தமிழக மக்களுக்கு வழங்க சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளார். ஒரு நாட்டின் முதுகெலும்பாகத் திகழ்வது கிராமப்புறங்களாகும். அதனுடைய அடிப்படையிலே 385 ஒன்றியங்களிலும் ரூபாய் 1 கோடி முதலீட்டில் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நிலைகளில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நான் சுட்டிக்காட்டுவதெல்லாம்; பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கூறினார்கள். “கூழ் குடிப்பவனுக்கு உப்பை வழங்க வேண்டிய நிலையிலே இருக்கின்ற அரசு, அதே நேரத்திலே தேநீர் அருந்துபவனுக்கும் சர்க்கரை வழங்குகின்ற அரசாக இருக்கின்ற அரசு” என்று. ஆக, ஏன்



இதற்கு முன்னுரிமை என்று கேட்பீர்களேயானால், நிச்சயமாக, கூழ் குடிக்கின்ற அவனுக்கு உப்பு வழங்குவதுதான் எங்களுடைய முதற்பணி என்பதை நான் இந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அண்ணாவின்பால் அன்பு கொண்டவர்களுக்கு, அண்ணாவையே நாங்கள் நேசிக்கின்றோம் என்று சொல்லுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையிலே அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்குக் குருவிக்குக்கூட ஒரு கூடு உண்டு. ஆனால், குடியிருக்க வீடு இல்லாமல் வாழும் பல இலட்சக்கணக்கான ஏழையெளிய மக்களின் துயரினைப் போக்கிடும் வகையில், ஆதிதிராவிடர்களுக்கும், ஏனையோருக்கும் புதிதாக 31,000 வீடுகள் கட்டிக் கொடுக்கவும், தற்போதுள்ள 15,000 சாதாரண வீடுகளை நிலை உயர்த்தவும் ஏறக்குறைய 57 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கடந்த ஆட்சியில் இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிமயமாக்கும் நோக்கத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் கூடங்குளத்தில் ஏறக்குறைய 2000 மெகாவாட் திறன் கொண்ட அணு மின் நிலையம் அமைக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தன் நலத்தை முன்னிறுத்தி, மக்கள் நலத்தைப் பின்னிறுத்தி ஆட்சி செய்து வந்த கடந்த கால ஆட்சியில், ஓடவா, நிற்கவா, கவிழவா, மோதவா என்று அழுது புலம்பி, உறுமி, உறுமி ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளைத்தான் சாலையிலே காண முடிந்தது. ஆனால், இந்த உறுமலை முடக்க வேண்டும், இந்தப் புலம்பலை நிறுத்தியாக வேண்டும் என்கின்ற மனிதாபிமான அடிப்படையில் கடுமையான நிதி நெருக்கடி இருந்தபோதிலும்கூட, ஏறக்குறைய 227 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து 2,275 பேருந்துகளை விடுவேன் என்று இன்றைக்கு ஆணித்தரமாக மட்டுமல்ல, சிங்கமாகக் கர்ஜித்து நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருக்கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

இந்தியத் திருநாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மகளிர் மீதான குற்றங்களை விசாரிப்பதற்கென்றே சென்னையிலும், கோவையிலும் மகளிர் நீதிமன்றங்களை அமைக்க அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கருத்தை நான்

கோடிட்டுக் காட்டுகின்றபோது, இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டுமல்ல, இன்றைக்கு அகில உலகத்திற்கே பெண் குலத்தினுடைய பெரும் விளக்கு, திருவிளக்கு, டாக்டர் புரட்சித் தலைவி மணி விளக்கு என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுடைய விடிவெள்ளியாக விளங்கி வருகின்ற, இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கனவை நனவாக்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

கடந்த வருடத்திலே பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலே இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த ஒரு மாநிலமும் நிறைவேற்ற முடியாத சிறப்பு மிக்க சாதனையான இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி, தன்னுடைய திருக்கரங்களாலே வழங்கியதோடு மட்டுமல்லாமல், அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகள், மலைவாழ் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவிகள், பிளஸ் 1 படிக்கின்ற மாணவிகள், பிளஸ் 2 படிக்கின்ற மாணவிகள், அத்தனை பேருக்கும், ஒருவரைக்கூட விடாமல் இலவச சைக்கிள் வழங்கிய அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் அமைந்திருக்கிற அரசு என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய கனவை நனவாக்குகின்ற அளவிலே அந்தத் திட்டத்தினை மீண்டும் செயல்படுத்துவதற்காக ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கின்றார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதிதிராவிட மாணவ, மாணவிகளுக்கு, ஹாஸ்டல் என்று சொல்லப்படுகின்ற விடுதிகளில் படிப்பதற்காகப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக 15 கோடி ரூபாய்க்கும் மேலாக அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள் என்பதை உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைக்குச் சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய பாதுகாவலர் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூறிக்கொள்கிறார்கள். கண்ணிய அரசியலைக் கட்டிக் காப்போம் என்று, இங்கே புகைப்படமாக நின்று கொண்டிருக்கிற காயிதே மில்லத் அவர்களோடு நாங்கள் பக்கத்திலே இருந்தோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். பல ஆண்டுகளாக ஆட்சிக் கட்டிலிலே இருந்தும்கூட வக்ஃபு வாரியத்திற்கென்று சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யாத அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு என்பதை உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு மேடை போட்டு, சிறுபான்மைச் சமுதாயத்தினுடைய பாதுகாவலர்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கு அருகதை இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு 40 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணியை மேற்கொள்ள உத்தரவு வழங்கிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இன்றைக்குச் சிறுபான்மை சமுதாயத்தினரின் உண்மையான பாதுகாவலர் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இன்றைக்குச் சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவிற்காக, குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த செலவிற்காக, தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்திற்காக, கிராம வேலைவாய்ப்புகள் திட்டத்திற்காக ஏறக்குறைய 1,406 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் ஒட்டுமொத்தமான நோக்கம், சுதந்திரம் பெற்று 55 ஆண்டுகள் ஆகியும்கூட கிராமப்புறங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் காண முடியவில்லை. ஒட்டுமொத்த மக்களில் ஏறத்தாழ 70 சதவிகிதத்திற்கும் மேலானவர்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர், பசியோடும், பட்டினியோடும் உள்ள நிலையில் உள்ளார்கள். இவர்களுடைய வறுமையைப் போக்கிட, கிராமப் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்பதே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உயிர் மூச்சான கொள்கை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி டாக்டர் திருவாளர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று அதிக

விளைச்சல் தரும் பயிர் வகைகளை, இலாபம் தரும் விவசாயப் பயிர்களை உருவாக்குதல், விவசாய விளைபொருட்களை இலாபகரமாக விற்க மார்க்கெட் வசதி போன்றவற்றின் மூலம் கிராமப்புறங்களை மேம்பாடு அடையச் செய்து, கிராமத் தொழிற்சாலைகளை உருவாக்குவது என்ற அம்மா அவர்களுடைய அணுகுமுறை. இந்த நிதிநிலை அறிக்கையிலே தெளிவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஆணை எண் 75-ஐ நீக்கியதன் மூலம் இன்றைக்குச் சிறு மற்றும் குறுந்தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடைசியாக, இறுதியாக, என்னுடைய தொகுதியைப் பற்றி மட்டும் ஒரு மணித்துளியிலே பேசி முடித்துவிடலாம் என்று கருதுகின்றேன். வேலூர் மாவட்டத்திலே இருக்கின்றது அணைக்கட்டு தொகுதி. அந்தத் தொகுதிக்கென்று ஒரு வரலாறு உண்டு. அந்தத் தொகுதியினுடைய பெயருக்கு ஒரு வரலாறு உண்டு. அணைக்கட்டு, அணைக்கட்டு, அணைக்கட்டு என்று அந்த ஊருக்குப் பெயர் இருக்கின்றதேயொழிய சான்றோர்கள் காலம் முதல் அந்த அணைக்கட்டுப் பகுதியில் இருக்கின்ற மேலாசம்பட்டு கிராமத்திற்கு ஓர் அணை கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், அடக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். முற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆகிய அனைவரும் பல ஆண்டு காலமாகக் கேட்டார்கள். இந்த மேலாசம்பட்டு கிராமத்திலே அணை கட்ட வேண்டும், அணை கட்ட வேண்டும், அணை கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்து, காலப்போக்கிலே அந்தக் கிராமத்திற்கே அணைக்கட்டு என்ற பெயர் வந்தது என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (சிரிப்பு) அந்த வேதனையான கருத்தை நான் சொல்ல வேண்டுமென்றால், அங்கே அணை கட்டினால் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாண்டுரங்கன், அணையைக் கட்டு என்றுதான் சொல்கிறார்கள். அணையைக் கட்டச் சொல்லித்தான் சொல்கிறார்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** ஒரு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன். அணையைக் கட்டு, கட்டு என்று சொல்கின்றார்களேயொழிய,



யாராலும் இதுவரையும் கட்ட முடியவில்லை. ஆனால், யாராலும் செய்ய முடியாத செயலைச் செய்து காட்டுகின்ற வல்லமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு என்கின்ற அடிப்படையிலே (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அணைக்கட்டு தொகுதியில் இருக்கின்ற மேலரசம்பட்டு கிராமத்தில் அணையைக் கட்டிக் கொடுப்பார்கள் என்று உறுதியாக நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டிலேயே மேலரம்சம்பட்டு கிராமத்திலே அணையைக் கட்டுவார்கள். (மணியடிக்கப்பெற்றது) அதற்குத் தோராய மதிப்பீடு ஏறக்குறைய 25 கோடி ரூபாய்தான் (சிரிப்பு) என்று பொறியாளர்கள் சொல்கிறார்கள். அதனால், பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விவசாயம் நடைபெறும்; நிலத்தடி நீர் பெருகும்; உப்பு நீராக இருக்கின்ற பல்வேறு பகுதிகள் நல்ல நீரைப் பெறுவதற்கு, அந்த மேலரசம்பட்டு கிராமத்திலே அணையைக் கட்டவேண்டும், அணையைக் கட்டவேண்டும் என்று, தாயுள்ளத்தோடு வாழ்ந்து வருகின்ற, அமர்ந்திருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதங்களை நான் பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

வாணியம்பாடி வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆம்பூர் நகரத்தை மையமாகக் கொண்டு, ஆம்பூரிலே ஒரு வட்டாட்சியர் அலுவலகம் திறக்க வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி, இன்றைக்கு வேலூர் மாவட்டம் மட்டுமல்ல, காஞ்சிபுரம் மாவட்டம் மட்டுமல்ல, திருவண்ணாமலை மாவட்டம் மட்டுமல்ல, அத்தனை மாவட்டத்து மக்களுக்கும் இந்தக் கருத்து பொருந்தும் என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு காலத்திலே பாலாறாக இருந்தது, அந்தப் பாலாற்றுக்குத் தாயாறு என்று பொருள். ஆனால், அந்தத் தாயாறு இன்றைக்குக் காய்ந்தாறாகப் பாழடைந்து, [illegible]டைந்து இருக்கின்றது என்பதை நான் உங்களின் [illegible] கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கி[illegible]. [illegible]

224487
சென்னை

இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம், அதாவது தமிழகமே ஒட்டு மொத்தமாக, காவிரியில் தண்ணீர் வரவில்லை என்றால் போராடுகின்றது. ஆனால், பல ஆண்டு காலமாக, வருடம் 365 நாட்களும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த பாலாறு, இன்றைக்குப் பாழாறாகக் கிடக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். நான் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கும், திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தினுடைய மக்களுக்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்வது; காவிரி நீர் பாய்கின்ற அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு இருக்கின்ற ஒற்றுமை, இந்த மூன்று மாவட்டத்தினுடைய மக்களுக்கும் வரவேண்டும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், பாலாற்றுக்கு வருகின்ற நீர் வரத்தை எல்லாம் கர்நாடகம் மறித்து விட்டது, தடுத்து விட்டது. அந்தக் காரணத்தாலே, இன்றைக்குத் தாயாறு என்று சொல்லப்படுகின்ற பாலாறு, பாழாறாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பாழாறாகிக் கொண்டிருக்கின்ற அந்தப் பாலாற்றை, தாயுள்ளம் கொண்ட தானைத் தலைவி, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கர்நாடகத்தோடு தொடர்புகொண்டு, கடந்த காலங்களிலே நமக்கு எந்த அளவிற்கு உரிய முறையிலே தண்ணீர் அந்தப் பாலாற்றிற்கு பேத்தமங்கலம் அணையிலிருந்து வந்ததோ, அந்த நீரை, உரிய நீரை, நமக்குரிய பங்கினை, நமக்கிருக்கின்ற உரிமையைப் பெற்றுத்தர வேண்டும் என்பதை நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரணத் தொண்டனாக இருக்கின்ற எனக்கு, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த அளவிற்கு வாய்ப்பினை நல்கியிருக்கிறார்கள். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'உழைப்பே உயர்வு தரும்' என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 'பக்தனின் சிரிப்பிலே பகவானைக் காண்போம்' என்ற அடிப்படையில் அன்னதானத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, ஏழ்மையை ஒழித்து, வறுமைக் கோட்டை அழித்து, வளமான தமிழகத்தை உருவாக்கிட, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மையான மாநிலமாக ஆக்க, சாதனை சகாப்தத்தைப் படைக்கும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு 6 கோடி மக்களுக்கு வழிகாட்டுகின்றார்கள். வெகுவிரைவில் நிச்சயமாக 100 கோடி மக்களுக்கும் வழிகாட்டும் காலம் வெகுதொலைவில் இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான்



உறுதியாகத் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினையும், வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு, "ஆர்வத்திற்கு ஏற்ற கல்வி, கல்விக்கு ஏற்ற திறமை, திறமைக்கேற்ற வாய்ப்பு, வாய்ப்புக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம், ஊதியத்திற்கேற்ற வாழ்வு எல்லோரும் பெறுகின்ற சூழ்நிலை வகுக்கப்படுவதே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உயிர் மூச்சாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, உரைக்குத் திரையிடுகின்றேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரே சொல்லவேண்டிய அளவுக்குச் சொல்லிவிட்டார், நீங்கள் உட்காருங்கள், திரு. சந்தானம் (குறுக்கீடு) என்ன ? மைக் கொடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டுரங்கன் அவர்கள் சொல்கிறபோது, இங்கே நான் வேலூருக்கு மருத்துவக் கல்லூரியைக் கேட்டது ** என்கிற வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார். அப்படியென்று .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கோரிக்கையை வலியுறுத்தி இருக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** எல்லாம் ** என்று அவர் சொல்லியிருக்கிறார்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கின்ற அரசாக, தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டு வருகிறது. யாரும் வேலூர் மாவட்டத்திலே அய்யன் திருவள்ளுவருடைய பல்கலைக்கழகம் வேண்டுமென்று கோரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மாவட்டத்தின்மீது தனிப்பற்றை வைத்துக்கொண்டு, கேட்காமலேயே திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள். ஆக,

அந்த அடிப்படையிலே நிச்சயமாக, எந்த அளவிற்கு விரைவாக, எவ்வளவு தடைகள் இருந்தாலும், அந்தத் தடைகளையெல்லாம் அகற்றுகின்ற ஆற்றல் பெற்ற டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வருவார்கள் என்பதை நான் பணிவோடு, மெத்தக் கனிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் வீராவேசமாகப் பேச வைத்துவிட்டீர்கள் அவரை. *(சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் இருக்கக்கூடிய ** என்ற வார்த்தையை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியிருந்தால் அதை எடுத்துவிடச் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் ஏற்கெனவே வேலூருக்குப் பல்கலைக்கழகம் கேட்டிருக்கிறேன். ஒகேனக்கல் திட்டத்தைக் கேட்டிருக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளப்பூர்வமான நன்றியினைக் காணிக்கையாக்கி, இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை சற்றுப் பற்றாக்குறையுள்ள நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும்கூட, தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளிய மக்கள், நலிந்த பிரிவு மக்கள், கிராமப்புறத்திலே இருக்கின்ற மக்களுடைய நன்மையைக் கருத்தில் கொண்டு, பாச உணர்வோடு, பற்றுதல் உணர்வோடு, தமிழகத்தின் முதல்வர் அவர்களும், தமிழகத்தின் நிதியமைச்சர் அவர்களும் இணைந்து தயாரித்திருக்கின்ற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாகவே இது தென்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். கடுமையான நிதி நெருக்கடி உள்ள இந்த நேரத்தில், 'நீரொழியப் பாலும் குறுகின் தெளிந்து' என்று

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சொல்வதுபோல, அன்னப் பறவையானது, தண்ணீரையும், பாலையும் கலந்து வைக்கின்ற நேரத்தில், தண்ணீரை விடுத்து, பாலை மட்டும் அருந்துகின்ற ஒரு தன்மையைப் பெற்றிருப்பதுபோல, இன்றைக்கு நலத் திட்டங்கள் நிறைய இருந்தாலும்கூட, அவற்றிலே எது ஏழையெளிய மக்களுக்கும், கிராமப்புற நலிந்த பிரிவு மக்களுக்கும் பயனுள்ள திட்டங்களாக இருக்கும் என்பதை ஆராய்ந்தறிந்து, அன்னப் பறவையாகத் தேர்வு செய்து இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்குக் கூறியவர்களெல்லாம் சென்ற காலங்களிலே வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகளிலே பல்வேறு துறைகளிலும் அறிவிக்கப்பட்ட நிதிகளைக் காட்டிலும் இந்த ஆண்டு சற்றுக் குறைவாகவே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே எடுத்து வைத்தார்கள். ஆனால், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் அதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்றைக்கு 11-வது நிதிக் குழுவின் ஓரவஞ்சனையின் காரணமாக 512 கோடி ரூபாய் நமக்கு இந்த ஆண்டிலே ஒதுக்கப்படவில்லை என்கின்ற நிலையைக் குறிப்பிட்டு, மாநிலத்திலே வருகின்ற நிதி வரவினையும், செலவினங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சமன்பாடற்ற நிலை இருக்கின்ற காரணத்தினால், சில திட்டப் பணிகளைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதோடு, பொதுத் துறையிலே இயங்கி வருகின்ற பேருந்து போன்றவைகளையும், மின்சார வாரியத்திலே ஏற்படுகின்ற இழப்பீடுகளையும் கணக்கிலே சேர்க்கும்போது, அதுபோலவே, அரிசி வழங்குகிற திட்டத்திலே, பொது விநியோகத் திட்டத்திலே ஏற்படுகின்ற பெருவாரியான இழப்பீடுகளையெல்லாம் கணக்கிலே கொள்கிறபோது, இந்தத் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது; திட்டங்களுக்கு ஒதுக்குகின்ற நிதிகளைக் குறைக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை ஒளிவு மறைவில்லாமலே இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்தது.

இங்கே சொல்கின்றபோது, பூஜ்ஜிய பட்ஜெட்டைப் போட்டு, இராஜ்ஜியத்தை எப்படி முதல் மாநிலமாக ஆக்க முடியும் என்கின்ற கேள்வியெல்லாம் எழுப்பப்பட்டது. பூஜ்ஜியம் என்பது தனியாக நிற்கின்றபோது, அதற்கு மதிப்பு இல்லையென்றாலும், அந்த பூஜ்ஜியத்திற்கு முன்னால் எண்களைச் சேர்க்கும்போது, ஒன்றைச் சேர்த்தால்

பத்தாகிறது. அந்தப் பத்தோடு இன்னும் ஒரு பூஜ்ஜியத்தைச் சேர்த்தால் நூறு ஆகிறது. அதோடு இன்னொரு பூஜ்ஜியத்தைச் சேர்த்தால் ஆயிரம் ஆகிறது. இப்படிக் கூட்டிக் கொண்டு போனால், ஆயிரத்தோடு ஒரு பூஜ்ஜியத்தைச் சேர்த்தால், பத்தாயிரம், இலட்சம், பத்து இலட்சம், கோடி என்கின்ற அளவிற்கு அந்த பூஜ்ஜியத்திற்கு ஒரு மரியாதை வருகிறது என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் அறியாதவர்கள் அல்ல. அந்த பூஜ்ஜியத்தோடு சேர்க்க வேண்டியதைச் சேர்த்து, நிச்சயமாக இந்த மாநிலத்தை முதல் மாநிலமாக ஆக்குகின்ற தன்மை படைத்தவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்கின்ற காரணத்தினால், நிச்சயமாக இந்த மாநிலத்தை முதன்மையாக ஆக்குகின்ற நல்ல பல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-05

இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. 1505 கோடி ரூபாய் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அந்த உள்ளாட்சி மன்றங்களினுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

அதுபோல, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக, கிராமப்புறங்களிலே இருக்கின்ற விவசாயக் கூலிகள் பயன்படுகின்ற அளவிற்கு, கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கின்ற அளவிலே அந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் அமைந்து இருக்கிறது.

அதுபோல, சிறு பாசனத் திட்டங்களை விரிவுபடுத்தி மேம்படுத்துவதன் மூலம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற அளவிலே, கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுடைய நிலங்களைச் சீர்செய்கின்ற நிலைமையை ஏற்படுத்துவதற்காக 250 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதுபோல, சென்ற ஆண்டு விவசாயிகள் பட்டிருந்த கடன் சுமையைப் போக்குவதற்காக 310 கோடி ரூபாயை ஒதுக்கிய இந்த அரசு, அவர்கள் முழுமையாகப் பயன்பெறவில்லை என்பதை உணர்ந்து, இந்த ஆண்டும்



அதற்காக 110 கோடி ரூபாயை ஒதுக்கி, அவர்கள் வாழ்விலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்திட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு செய்திருக்கிறார்கள்.

அதுபோல, கிராமப்புறங்களிலே ஏழையெளிய குழந்தைகள் பயன்படுகின்ற அளவிற்குச் சத்துணவுத் திட்டத்திற்காக 286 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

பொது விநியோகத் திட்டத்திலே வழங்கப்படுகின்ற அரிசி; இன்றைக்கு நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம். இந்தியாவிலே இருக்கின்ற அனைத்து மாநிலங்களிலும் மிகக் குறைவான விலைக்கு, ரூ.3.50 காசுக்கு வழங்கப்படுகின்ற மாநிலம் தமிழ் மாநிலம்தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்ற அளவிற்கு, இப்போது ரூ.3.50 காசுக்கு இந்த அரிசி வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களிலே பார்த்து இருக்கிறோம். கேரளாவில்கூட, இந்த பொது விநியோக முறையிலே வழங்கப்படுகிற அரிசி இப்போது ரூ.4.25-க்கு வழங்கப்படுகிறது; ஆந்திராவிலே ரூ.4.75-க்கு வழங்கப்படுகிறது. மேற்கு வங்க மாநிலத்தில்கூட ரூ.4.25-க்கு வழங்கப்படுகின்ற அந்த நிலையிலே, தமிழகத்தில் மட்டும் ரூ.3.50-க்கு ஏழையெளியவர்களுக்குப் பயன்படுகின்ற அளவில் அந்த அரிசியினுடைய விலையை ஏற்ற மாட்டோம் என்று அறிவிப்பைச் செய்திருக்கிறார்களே, அதற்காக நாம் பாராட்ட வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி)

கூப்பன் முறை என்பது ஏதோ, அது சில பேரைப் புறக்கணிக்கின்ற முறை என்று கருதுவதுபோல இங்குப் பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். இந்தக் கூப்பன் முறை என்பது எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்படுகின்றது. நாங்கள் கேரளாவிற்குச் சென்று பார்க்கின்றபோது, அங்கு இந்தக் கூப்பன் முறையைப் பயன்படுத்துகிறார்கள். ஆந்திராவிலே பார்த்தால் அங்கும் இந்தக் கூப்பன் முறையைப் பயன்படுத்துகிறார்கள். அதன் மூலமாக, அந்தப் பொது விநியோகத் திட்டம் சிறப்பாகவும், சீரோடும் நடந்துகொண்டுதான் இருக்கின்றது என்பதைக் கருத்தில் கொண்டுதான் இங்கும் அந்தக் கூப்பன் முறையைப் பயன்படுத்துகிற நிலையை தமிழக அரசு ஏற்படுத்தி இருக்கிறது.

அதுபோல, 200 சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவது, அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை அபிவிருத்தி செய்கின்ற அளவிலே 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்துகின்ற நிலை, அதுபோல, ஆதிதிராவிடப் பெண்களுக்கு சைக்கிள்

வழங்குவதற்கு இந்த ஆண்டும் நிதியொதுக்கியிருக்கின்ற நிலை, இப்படிப் பல்வேறு நலத் திட்டங்கள் இந்த அரசின் மூலமாகச் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நாம் வரவேற்காமல் எப்படி இருக்க முடியும் என்பதை நான் இங்கு எதிர்க் கட்சியினரை கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தாலும், நன்மைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு மாறாக சில காரியங்களை அறிவுரை சொல்கின்ற நிலையிலே அரசுக்குச் சொல்வதற்கும் கடமைப்பட்டவர்கள் என்கின்ற முறையில் சொல்ல வேண்டுமென்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பற்றி இங்குப் பேசுகின்றார்கள். மத்தியிலே இருக்கின்ற அரசு, ஏழையெளிய மக்கள் பயன்படுத்துகின்ற மண்ணெண்ணெய்க்கு விலையை உயர்த்தியிருக்கிறது. அதுபோல அன்றாடம் உபயோகப்படுத்துகின்ற சமையல் எரிவாயுவிற்கு விலையைக் கூட்டி இருக்கிறார்கள். நேற்றிலிருந்து இரயில் கட்டணம் உயர்வு; அதுவும் உயர்ந்த வகுப்புகளுக்கு உயர்த்தப்படாமல், நடுத்தர மக்களுக்குப் பயன்படுகின்ற இரண்டாம் வகுப்புக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவற்றையெல்லாம் இன்றைக்கு ஆட்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற இங்கிருப்பவர்கள் குறை கூறாது, தமிழகத்தில் மட்டும், ஏதோ வரியைப் போட்டுவிட்டார்கள், விலையை உயர்த்தி விட்டார்கள் என்று சொல்வதிலே என்ன நியாயம் இருக்கிறது? அங்கு உயர்த்தப்படுகின்ற விலைக்கும் குரல் கொடுக்க வேண்டும்; அதேபோல இங்கு உயர்த்தப்படுகிற விலைகளுக்கும் அவர்கள் குரல் கொடுப்பார்களேயானால், அதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், அங்கொன்று, இங்கொன்று என்கின்ற நிலை இருக்கிற காரணத்தினாலேதான், தமிழகத்தின் முன்னேற்றத்திலே பல தடைகள் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-10*

அதேபோல, பொதுத் துறை நிறுவனங்களை விற்பது; மத்திய அரசு, சென்ற ஆண்டுகூட சேலம் உருக்காலை, இப்போது நெய்வேலி அனல் மின் நிலையம் போன்றவற்றையெல்லாம் விற்பதற்கு முடிவெடுத்திருக்கிற நேரத்தில், அவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட வேண்டுமே தவிர, அதைவிட்டு, தமிழகத்தில் மட்டும் ஏதோ பேருந்துகளையெல்லாம் தனியாருடைமை ஆக்கப் போகிறார்கள்; பொதுத் துறை நிறுவனங்களை எல்லாம் விற்கப்



போகிறார்கள் என்பதை மட்டும் எடுத்துச் சொல்கின்ற நிலையில் இருக்கக் கூடாது. இப்போது, இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்த அளவிலே, இரண்டிலும் ஒரே நிலை; மத்தியிலே இருக்கிற விலை ஏற்றத்தையும் கண்டிக்கிறோம்; அதேபோல, மாநிலத்திலே இருக்கிற விலை ஏற்றத்தையும் கண்டிக்கிறோம். மத்தியிலே பொதுத் துறை நிறுவனங்களை விற்பதை கண்டிப்பதைப் போல, மாநிலத்திலேயும் பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயம் ஆக்குவதை இந்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, இன்னும் இரண்டொரு கோரிக்கைகள். (மணியடிக்கப்பெற்றது) கடந்த காலத்தில், போக்குவரத்துத் துறையிலேயுள்ள ஊழியர்கள் எல்லாம் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடுகிற நேரத்திலே ஆயிரம் பேர்மீது ஏதோ சில தவறுகள்--பேருந்துகளை எரித்தார்கள்; இல்லையென்றால், பேருந்துகளை ஓட்டுவதற்குத் தடை செய்தார்கள்—என்கின்ற முறையிலே வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அவர்களிலே நிரபராதிகள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அந்த நிர்வாகத்திற்கு வேண்டாதவர்கள் பல பேரை, உண்மையிலே தவறு செய்யாதவர்களை எல்லாம் வழக்குக்கு ஆட்படுத்தி இருக்கிறார்கள். அதையெல்லாம் கருணையோடு நமது முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும். எப்படியோ அவர்களுக்கு இப்போது முக்கால் பங்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அவர்களுக்குப் பணியைக் கொடுத்துவிடலாம். அவர்களுடைய வழக்கில் நீதிமன்றத்திலே என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ, அதைக்கூட ஏற்றுக்கொள்கிறோம்; எனவே, எங்களுக்குப் பணியைக் கொடுங்கள்; இப்போது, வீணாக அரசாங்கத்திடமிருந்து சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்; அந்தச் சம்பளத்திற்கு நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம்; அரசு தொடுத்து இருக்கிற வழக்கிலே, நீதிமன்றங்கள் என்ன தீர்ப்புகளைச் சொல்கின்றதோ, அதைக்கூட ஏற்றுக்கொள்கிறோம் என்கின்ற நிலையை வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்தத் திட்ட ஒதுக்கீடுகள் எல்லாம் குறைந்திருந்தாலும்கூட எல்லோருக்கும் ஏற்புடைய ஒரு கோரிக்கையை முதலமைச்சர் முன்னால் வைப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி என்பதை 82 இலட்சமாக நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதை ஒரு கோடியாக உயர்த்திக் கொடுத்தால், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சற்று மகிழ்வாக இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) அந்தத் திட்டம் உங்களுக்கும் கூட; ஆண்டிப்பட்டி, பல்வேறு கிராமங்களை அடக்கிய பகுதி. மலைப் பகுதியை அடக்கிய அந்த ஆண்டிப்பட்டி தொகுதிக்கு நீங்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் உங்கள் நிதியிலிருந்து ஏதாவது செய்ததாக, உங்கள் பெயரிலே ஒரு கட்டடம் அமைவதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் என்கின்ற நிலையிலே, என்னுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று—நிச்சயமாக நீங்கள், வருகின்ற உங்களுடைய பதிலுரையிலே இதை ஏற்று—அறிவிப்பீர்கள் என்று நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலேயும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே நீங்கள் பல்வேறு திட்டங்களை ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். அதிலே ஒன்று 58 கிராமக் கால்வாய்த் திட்டம். நேற்றைக்குக்கூட தங்களிடத்திலே மனுக் கொடுத்திருக்கிறேன். எங்களுடைய பகுதி, விவசாயத்திலே மிகுந்த பின்தங்கிய பகுதி. மக்கள் இப்போது குடிப்பதற்குத் தண்ணீர்கூட இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே கடுமையான வறட்சி நிலவுகிறது என்பதைத் தாங்களும் அறிவீர்கள். ஏனென்றால், ஆண்டிப்பட்டிக்குச் செல்கின்ற பாதையில் நீங்கள் பார்த்துச் சென்றிருக்கிறீர்கள். எனவே, அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு இந்த நீராதாரத் திட்டம் என்பது மிக முக்கியமானது என்கின்ற காரணத்தினால், நீங்கள் அதற்கு நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டிலேயே செய்து தரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற திட்டங்களையெல்லாம், நான் அந்தந்தத் துறை அமைச்சர்களிடத்திலே எழுதிக் கொடுத்து விடுகிறேன்; முடிந்த அளவுக்கு இந்த அரசு செய்யும் என்கின்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. அதை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல வாய்ப்புக் கொடுத்த எங்களது சபாநாயகர் நேற்றைக்கே என்னைத் தொலைபேசியிலே கூப்பிட்டு, 'நீங்கள் 15 நிமிடம்தான் பேசவேண்டும்' என்று வரையறுத்து இருக்கிறார்கள். எனவே, நான் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிபோல, கரெக்டாக 15 நிமிடத்திலே முடித்துவிட்டேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடத்திலேயே ஒரு கோடியைக் கேட்டுவிட்டீர்கள்! திரு. என். நன்மாறன்.

***திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வைத்திருக்கின்ற நிதிநிலை



அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்துகளை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, நம்முடைய நிதிநிலை அறிக்கையின் துவக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆரம்ப காலத் தலைவர், நிறுவனர், மரியாதைக்குரிய அண்ணா அவர்களுடைய முத்திரை வாக்கியங்களை இதிலே பொறித்து, பல்வேறு கருத்துகளைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசு எவ்வாறு மாநிலங்களை நடத்துகிறது; கையேந்துகிற நிலைமைக்கு எந்த அளவுக்கு ஆளாக்கி இருக்கிறது என்பதை எல்லாம், அதுபோன்ற வாசகங்களை எல்லாம் குறிப்பிட்டுத் துவங்குகிறது நிதிநிலை அறிக்கை. ஆனால் நிலைமை, இறுதியில் என்ன நடக்கிறது என்று பார்த்தால், மத்திய அரசு என்ன கருதுகிறதோ, மத்திய அரசு எதை நிர்ப்பந்திக்கிறதோ வேறு வழியில்லாமல் நாங்களும் அப்படி ஆளாகி இருக்கிறோம் என்ற அடிப்படையில் இந்த அறிக்கை அமைந்திருப்பதை வருத்தத்தோடு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதே மன்றத்தில் சென்ற முறை நாம் ஓர் அஞ்சலித் தீர்மானத்தை நிறைவேற்றினோம். அமெரிக்க நாட்டில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து, உயிரிழந்த மக்களுக்கு நாம் அஞ்சலி செலுத்தினோம். இதன் மூலம் ஏற்பட்ட அனுதாபத்தைப் பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆப்கன் மக்கள்மீது ஒரு யுத்தத்தைத் தொடுத்தது, அது, 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வை' என்பதுபோல், பின்லேடன்மீது தாக்குதல் என்று சொல்லிக்கொண்டு, ஆப்கன் நாட்டினுடைய எண்ணெய் வயல்களைக் கைப்பற்றுவதற்குரிய முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட்டது. ஆனால், இரண்டு பேருமே என்ன கூறினார்கள்? ஜார்ஜ் புஷ் சொல்கிறபோது, இது சிலுவை யுத்தம் என்றார்; பின்லேடன் கூறுகிறபோது, இது புனித யுத்தம் என்றார். இரண்டிலுமே சிலுவையும் கிடையாது; புனிதமும் கிடையாது. அமெரிக்காவின் நெருக்கடியைத் தணிக்க வேண்டிய பொறுப்பு அமெரிக்காவுக்கு இருக்கிறது. ஆப்கன் நாட்டில் அடிப்படைவாதக் கருத்துகளை நிலைநிறுத்த வேண்டிய கடமையை பின்லேடன் செய்து கொண்டிருந்தார். நிலைமை சிக்கலானது.

அமெரிக்காவைப் பிடித்த பொருளாதார நெருக்கடி, அதைச் சார்ந்திருக்கிற இந்தியாவையும் தாக்கி, இந்தியாவைத் தாக்குகிற நெருக்கடியை மத்திய சர்க்கார் மாநிலங்கள்மீது சுமத்தி, மாநிலத்திற்கு வரக்கூடிய நெருக்கடியை மக்கள்மீது நாங்கள் சுமத்துகிறோம் என்ற நிலைமைக்குச் செல்வது என்பதை மிகவும் கவலைக்குரியதாக நான்

பார்க்கிறேன். இது பொதுவாக அரசியல் பேசுவதாகக் கருத வேண்டாம். இந்த நெருக்கடியை எப்படிச் சமாளிப்பது; மக்கள்மீது இந்தத் துன்பம் நேராத வகையில் எப்படித் தவிர்ப்பது என்பதற்கு மாநில அரசு கூடுதலாக முயற்சி செய்து இருக்க வேண்டும். அதற்கு மாறான முறையில் நிதிநிலை அறிக்கை இருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய மாநில அரசு ஒரு வழக்குத் தொடுத்தது. மத்திய அரசு மாநிலத்தைக் கலந்து முடிவு செய்ய வேண்டும் என்று ஒரு வழக்குத் தொடுத்தோம். அதிலே மேற்கு வங்க அரசும் தன்னை இணைத்துக் கொண்டது. ஆனால், தற்போது இன்னமும் மேற்கு வங்க அரசு மத்திய அரசினுடைய ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்கு மறுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இந்த அறிக்கையின் மூலம் நாம் பார்க்கிறோம். இது தமிழ்நாட்டுக்கு உதவி செய்யாது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய நிர்ப்பந்தத்தை ஏற்பதன் விளைவாக, பொதுத் துறையின்மீதும் நாம் கை வைக்கிறோம்.

'புவியை நடத்து; பொதுவில் நடத்து' என்று பாவேந்தர் குறிப்பிட்டார். அதேசமயத்தில் இன்றைக்கு பொதுத் துறையில், ஏற்கெனவே அரசு முதலீடு செய்து இலாபகரமாக ஓடிக்கொண்டு இருக்கக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து அரசு மூலதனத்தைத் திரும்பப் பெறுவது என்கிற ஓர் அறிவிப்பு இந்த அறிக்கையில் இருக்கிறது—Disinvestment. அதே நேரத்தில், நட்டத்தில் ஓடுகிற பொதுத் துறை நிறுவனங்களைக் கைவிடுவது என்கிற நிலைமையும் இந்த அறிக்கையில் இருக்கிறது. ஆக மொத்தம், பொதுத் துறை என்கிற அந்த உயரிய கோட்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய முறையில், அதற்கு எதிரான தனியார் துறையை ஊக்கப்படுத்தக்கூடிய முறையில் அறிக்கை அமைந்து இருப்பதை கம்யூனிஸ்ட் கட்சி கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறது; இதனுடைய ஒரு பகுதியாகத்தான் இன்னும் ஒன்றை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

பொதுத் துறை நட்டத்திலே ஓடுகிறது என்று சொன்னால், அது

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்பதைப் போலத்தான் அமைந்திருக்க வேண்டுமே தவிர, அதைக் கைவிடுவது என்பது, மிகவும் எதிர் விளைவை உருவாக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



*பிற்பகல் 1-20*

இதிலே ஒரு பகுதியாகத்தான், ரப்பர் தோட்டம்; குமரி மாவட்டத்தில்: அங்கே ஏராளமான தொழிலாளர்கள் அதை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; குடும்பங்களும் இருக்கின்றன. அங்கேயும் இதேபோல நட்டக் கணக்குக் காட்டப்பட்டு, ரப்பர் தோட்டமும் என்ன ஆகும் என்கிற ஒரு கேள்வி உருவாகியிருக்கிறது. ஏற்கெனவே இதே மன்றத்திலும், தனிப்பட்ட முறையில் அமைச்சரிடத்திலும் ஒரு கோரிக்கையை அந்த மக்கள் முன் வைத்திருக்கிறார்கள். Rubberised road என்ற அடிப்படையில், ரப்பரைப் பயன்படுத்தி சாலை அமைக்கிற அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் தொழிலையும் பாதுகாக்க முடியும் என்கிற அடிப்படையில் அதனைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இதுபோன்ற செயல்களைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இதிலே ஒரு பகுதி தரிசு நில மேம்பாடு; ஏற்கெனவே நம்முடைய மன்றத்திலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது, தனியார்மயம் ஊக்குவிக்கப்படாது என்று. ஆனால் தற்போது தனியார்மயத்தை நோக்கிப் போவதற்கான ஓர் ஆபத்தான அறிவிப்பு என்பதும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கிறது. அது எந்தவிதத்திலும் தமிழகத்தில் வேலையின்மையைப் போக்குவதற்கு உதவி செய்யாது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஓர் அரசு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கிறபோது, விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கிற அந்தக் குறிக்கோளோடு இருப்பது உதவி செய்யும். ஆனால், தரிசு நில மேம்பாடு என்கிற அந்த உயரிய நோக்கத்தை முன்வைத்து, அது தனியாரிடம் செல்வது என்று சொல்கிறபோது, நிச்சயமாக அது ஏழையெளிய மக்களுக்குப் பயன் தராது என்பதைச் சுட்டிக்காட்டி, வங்கத்தைப்போல நிலமற்ற உழவர்களுக்கு அதை வழங்க வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்கள் ஓய்வூதியம். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயிருந்து இருக்கக்கூடிய அந்த ஓய்வூதியத்தின்மீது கை வைக்கக்கூடிய போக்கு கூடாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, கொள்முதல் விஷயம். இங்கே அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்த மாவட்டத்திலிருந்து வரக்கூடிய

தகவல்கள் கவலைக்குரியதாகவே இருக்கின்றன. அங்கே உண்மை நிலவரத்தைக் கண்டறிந்து, விவசாயிகள் மத்தியில் இருக்கிற பதட்ட நிலையைப் போக்கக்கூடிய முறையில், சிறு, குறு விவசாயிகளிடம் நேரடியாகக் கொள்முதல் செய்வதை உறுதி செய்ய வேண்டும். வியாபாரிகளிடம் கொள்முதல் செய்துவிட்டு, விவசாயிகள் பெயரால் வரவு வைப்பதைத் தவிர்க்கக்கூடிய முறையில் அங்கே சரியான நிர்வாக ஏற்பாட்டுக்கு உத்தரவாதம் செய்ய வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே ஒரு பகுதியாகத்தான் உணவு விநியோகம். உணவு விநியோகம் என்பதைப் பொறுத்தவரையில், இங்கே 3 ரூபாய் 50 காசுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு அரிசி தொடர்ந்து வழங்கப்படும், அரிசி விலை உயர்த்தப்படாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்தில் தமிழகத்தில் ஒரு புதிய தன்மையில் அரிசியின்மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்பதைக் கவலையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததற்கும் அரிசி ஒரு காரணம். 1967-க்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்களுக்கு அதில் கொஞ்சம் கவனக் குறைவு ஏற்பட்டதன் விளைவு, அதையே முன்வைத்து ஒரு பெரிய இயக்கம் தமிழக அளவில் உருவாகி, அதன் விளைவாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டதையும் நாங்கள் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எனவே, அரிசியின் மீதான வரி என்பதைக் கைவிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மேற்கு வங்கத்தில் நடத்தும் ஆட்சிகூட அரிசியின்மீது விற்பனை வரி போடுகிறது. அதைக் கைவிடுமாறு மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்துவாரா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மேற்கு வங்காளத்திலே 2 சதவிகித வரி போடப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே இங்கே சுட்டிக்காட்டப்பட்டது. மேற்கு வங்காளத்திலே இன்று 33 சதவிகித மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு அந்த அரசு 5 ரூபாய் விலைக்கு இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதிலே எந்தவிதமான மாறுதலும் ஏற்படுத்தப்படவில்லை.



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் 5 ரூபாய் என்கிறார். அங்கே 6 ரூபாய்க்குக் கொடுக்கப்படுகிறது. இங்கே நாங்கள் 3 ரூபாய் 50 காசுக்கு அல்லவா கொடுத்துக் கொண்டிருக்கிறோம் ? (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும், போடப்பட்ட வரியைத் தவறாகப் புரிந்துகொண்டு இங்கே குறைகூறிக் கொண்டிருக்கிறார்கள் என்றே கருதுகிறேன். நான் ஏற்கெனவே இந்த அவையில் தெளிவுபடுத்தியிருக்கிறேன். இப்போது மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். நியாயவிலைக் கடைகள் மூலமாக, பொது விநியோகத் துறையின் கீழ் ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்படுகிற ரேஷன் அரிசி மீது எந்த வரியும் கிடையாது. ஏழை எளிய மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள். அந்த மூன்று ரூபாய் ஐம்பது பைசாவுக்குக் கொடுக்கின்ற அரிசி மீது எந்த வரியும் கிடையாது. மாறாக, அரிசி ஆலை அதிபர்கள் விற்பனை செய்கின்றபோது அவர்களுக்குத்தான் இந்த 2 சதவிகித வரி விதிக்கப்படும் என்பதை விளக்கிக் கூற விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-25*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேதான் இருக்கிறது யதார்த்தமான பிரச்சினை. இன்று மேற்கு வங்காளத்தில் அரிசி மட்டும் அல்ல, 14 பொருட்கள் பொது விநியோக முறையில் மலிவு விலையில் கொடுக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஆனால், தமிழகத்திலே அப்படிக் கொடுக்கப்படவில்லை. அது ஒரு package என்ற முறையிலே வருகின்ற நேரத்திலே மக்களுக்கு அது ஒரு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால், வரியினுடைய பிரச்சினை என்னவென்றால், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் மட்டுமல்ல, இன்று தமிழகத்தில் வறுமைக் கோடு என்பதற்கு ஒரு தெள்ளத் தெளிவான வரையறை ஏற்படுத்தப்படவில்லை. யார் இந்த வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடியவர்கள்; அவர்களுக்குள்ள qualification என்ன என்று வருகின்ற நேரத்திலே, இப்போது போடப்பட்டிருக்கின்ற வரி வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் மட்டுமல்ல, சாதாரண ஏழை எளிய மக்களும் அரிசி வாங்கிப் பயன்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்போது அவர்களுக்கு இந்த வரி . . .

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் யார், எத்தனை பேர், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் எத்தனை பேர் என்று இன்னும் நாம் கணக்கு எடுக்கவில்லை, வரையறுக்கப்படவில்லை. மேற்கு வங்காளத்தில் செய்து முடித்துவிட்டார்கள். செய்து முடித்து என்ன விலைக்குக் கொடுக்கிறார்கள்? அங்கே நியாய விலைக் கடைகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்களுக்கு 6 ரூபாய் 15 காசு என்ற விலையில் அரிசியை விற்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 9 ரூபாய் என்ற விலையில் அரிசியைக் கொடுக்கிறார்கள். இவர்கள் இங்கே எங்களுக்கு அறிவுரை கூறுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அரிசி தவிர மற்ற 14 பொருட்கள் அங்கே மலிவு விலையில் கொடுக்கப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதோடு — (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். திரு. ஹேமசந்திரன், நான் மதுரையில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு, அந்த 14 பொருட்கள் என்னென்ன என்று விளக்கம் கேட்டேன். எனக்கு இன்னும் தகவல் வந்து சேரவில்லை. திரு. நன்மாறன், பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 14 பொருட்கள் என்னென்ன என்ற பட்டியலை இரண்டு நாட்களில் உங்களிடம் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், மூன்று மணித்துளிகளில் உங்களுடைய பேச்சை முடித்து விடலாம் அல்லவா?

**திரு. என். நன்மாறன்:** சற்று நேரத்தை நீட்டித்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்று என்றால், இரண்டு மணித்துளிகள் அதிகம் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரிசியின் பிரச்சினையினால் ஆட்சி மாறக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேனே தவிர...



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற அரிசியின் விலையை ஏற்றினால்தான், உயர்த்தினால்தான் அது அரசியலாகும். அப்போதுதான் அரசியல் ரீதியான விளைவுகள் ஏற்படும். இங்கே ஏழை எளிய மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்; பாதுகாக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய மக்களுக்கு மூன்று ரூபாய் ஐம்பது காசு என்ற விலையில்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலேயே இதுதான் மிகக் குறைந்த விலை. வேறு எந்த மாநிலத்திலும் மூன்று ரூபாய் ஐம்பது காசு என்ற விலைக்கு அரிசி கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதை நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அரசியலாக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், மேலே இருப்பவர்கள் என்ற இந்த விதியின் மீது உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, 2000 ரூபாய் என்பதை 5000 ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடு) மாதம் ரூ. 5000, ஆண்டுக்கு ரூ. 60 ஆயிரம். உதாரணத்திற்கு ஒரு tri-cycle தொழிலாளி, கொத்தனார், சித்தாள், அந்தக் குடும்பம்—இதை வைத்து—150 ரூபாய் என்று கணக்கு வைத்துப் பரிந்துரை செய்ய வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மார்க்சிஸ்ட் கட்சியும் அதையே குறிப்பிடுகிறது. அரசும் அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, போக்குவரத்துத் தொழிலாளர்கள். போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி, அது முடிவுற்றிருக்கிறது. அதே சமயத்தில் இன்னும் பலர் வெளியில் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் மீண்டும் வேலைக்கு வருவதற்கான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடிய அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறபோது அந்தத் தீர்ப்பு என்ன வருகிறதோ, அதற்கு உட்படக்கூடிய நிலைமையை உருவாக்கி, தற்போது வேலை இல்லாமல் வெளியில் இருக்கக்கூடிய நிலைமையைப் போக்கி அவர்களை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்

கொள்கிறேன். இவர்கள் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பு வந்தாலும்கூட, அவர்களும் வேலையில்லாமல் இருந்தால், அவர்களையும், வேலையில் அமர்த்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. என். நன்மாறன்:** அதேபோன்று நீலகிரித் தேயிலை. அதிலே அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை முழுமையான பாதுகாப்பிற்கு வழி செய்யவில்லை என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஓரளவிற்கு நிவாரணம் இருந்தாலும்கூட, இன்னும் கூடுதலாக இருப்பதற்கு அந்தத் தேயிலைக் கொள்முதல் என்பதன் மீதும் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம்; அங்கே நடைபெறவேண்டிய தேர்தலுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை விவசாய சங்கத் தலைவர்களும் பார்த்திருக்கிறார்கள். இது கௌரவப் பிரச்சினை என்கிற அடிப்படையில், அரசு ஏற்கெனவே சென்ற முறை அறிவித்தது. அதை உத்தரவாதம் செய்து தேர்தல் சுமுகமாக நடப்பதற்கு உரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல வழக்கறிஞர்.... (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர், பாப்பாப்பட்டிக்காரர் பேசுகிறார்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலமாக அந்தத் தொகுதிகளுக்கெல்லாம் தேர்தல் அறிவிக்கப்படுகிற நிலை இருந்தது. ஆனால் அறிவிக்கப்படுவதோடு சரி, அங்கே யாருமே வேட்பு மனுக்களும் தாக்கல் செய்யவில்லை. ஐந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்போது இந்த அரசாவது உரிய முறையிலே நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, அங்கே வேட்பு மனு செய்திருக்கிறார்கள். ஆனால், அரசியல் இலாபத்திற்காகச் சில பேர் அந்தப் பகுதியிலேயே இல்லாதவர்கள், அந்தக் கிராமத்திலே வாக்காளர் பட்டியலிலே மட்டும் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள்



உண்மையிலேயே அந்தக் கிராமத்தில் இல்லை. அவர்கள் இன்னொரு இடத்திலே இருக்கிற வாக்காளர் பட்டியலிலும் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இரண்டு வாக்காளர் பட்டியலிலே இடம் பெற்றவர்களுடைய வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்கிற நிலையை உருவாக்க வேண்டிய அவசியம்கூட வருகின்ற காலத்திலே இருக்கிறது. ஒருவர் அங்கு இருந்தால்தான், அந்த வாக்காளர்களாக இருந்தால்தான் போட்டியிட வேண்டும் என்கிற கட்டாயத்தைக்கூட இந்த அரசு உருவாக்க முன்வர வேண்டும். எங்கேயோ இமயமலைப் பகுதியிலே இருந்துகொண்டு, பாப்பாப்பட்டியிலே வந்து வேட்பு மனுத் தாக்கல் செய்துவிட்டு, அங்கு ஊராட்சிமன்றத் தலைவராக வேண்டும் என்கின்ற எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படித்தான் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கிராம மக்களுடைய வேட்பாளர்களை நிறுத்தி இன்றைக்குத் தேர்தல் முறையாக நடத்தப்படவிருக்கிறது. நடத்தி, யார் தேர்தலிலே போட்டியிட்டு வருகிறார்களோ அவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளலாம்.

நேற்றுக்கூட 'இந்து' பத்திரிகையிலே ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பஞ்சாயத்துக்களிலே ஒருவர்கூட மெம்பர் ஆவதற்கு—பஞ்சாயத்துக் கவுன்சிலைக் கூட்டினால்தான் பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்த முடியும். அங்கிருக்கிற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பஞ்சாயத்து மன்றம் கூட்டப்பட்டால்தான் சட்டரீதியாக அந்தப் பஞ்சாயத்து நடைபெறும். ஆனால் அங்கு அந்த உறுப்பினர் பதவிகளுக்கு யாருமே மனுத் தாக்கல் செய்யவில்லை. ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு மட்டும் மனுத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சி விதி 204-ன் கீழாக அந்த ஊராட்சி செயல்பட முடியாது என்பதை நேற்றைய 'இந்து' பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. அப்படி இருக்கிற நிலையிலே பல பேர் அரசியல் ஆதாயம் தேட நினைக்கின்றார்களே தவிர, அங்கிருக்கிற பஞ்சாயத்துகள் உருப்படியாக நடக்க வேண்டும், முறையோடு செயல்பட வேண்டும்—

**திரு இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிலைமைகளை அவர் சொல்கிறார். திரு. நன்மாறன், நிறைவுக் கட்டத்திற்கு வாருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தொடர்ந்து. மதுரையைப் பொறுத்தவரையில் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள், அவர் பேசட்டும். (குறுக்கீடு) நன்மாறனே விளக்கம் சொல்வார்.

**திரு. என். நன்மாறன்:** மதுரையைப் பொறுத்தவரையில், என்.எம்.ஆர்.புரம் பகுதியில் வாழக்கூடிய மக்கள் குடிமனைப் பட்டா நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு 50 ஆண்டு காலமாக அவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். மின் இணைப்பு எல்லாம் கிடைத்த பிறகும், தற்போது வைகைச் சீரமைப்புத் திட்டம் என்கிற பெயரால் நடைபெறக்கூடிய திட்டத்தில் தங்கள் குடியிருப்புகளுக்குக் குந்தகமான நிலைமை ஏற்பட்டு ஒரு பதட்டம் என்பது அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆக, வைகைச் சீரமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்குப் பெரிய அளவிற்குப் பாதிப்பு இல்லாமல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் கூடுதல் கவனம் எடுத்து, அங்கு இருக்கக்கூடிய அனைவரிடமும் பேசி ஒரு சுமுக நிலைமையை உருவாக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பகுதி மக்களுடைய பட்டாப் பிரச்சினை என்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மஹால் சுற்றுப்புறம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும். மதுரையினுடைய சாலைகள் குண்டும், குழியுமாக, மேடும், பள்ளமுமாக இருக்கின்றன. சித்திரைத் திருவிழாவின்போது கள்ளழகர் ஆற்றில் இறங்குகிற இந்தக் காலத்தில் சாலைச் சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடிநீர் என்பதற்குக் கடும் தட்டுப்பாடு இருக்கிறது. அதைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்மாறன், நிறைவுக் கட்டத்திற்கு வாருங்கள்.



**திரு. என். நன்மாறன்:** இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி முத்தாய்ப்பாகக் குறிப்பிடுகிற நேரத்தில், விலைவாசி உயர்வுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் போதிய நிவாரணம் அளிக்காத தன்மை, அதன்மீது உரிய கவனம் எடுக்காத நிலைமை இந்த அறிக்கையில் இருக்கிறது என்பதைக் கூறி, மக்கள் நலனுக்கு உகந்ததாக இந்த நிதிநிலை அறிக்கை இல்லை என்பதைத் தெரிவித்து, அதற்கு மாறானதாக அமைந்திருக்கிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-4-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

85. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-1) இருபத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

86. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-2) பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

87. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-3) ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

88. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-1) முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[2002 ஏப்ரல் 4

89. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-2) பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

—0—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224487.
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

53/39